மதுரை

# மீனாக்ஷி கோவில்

K. S. ஸ்ரீகண்டன், M.A., F.R.E.S.,

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
12, சகெண்டு லைன் பீச்சு, சென்னை.

காப்பிரைட்டு.] 1938 [விலை ரு. 1.

# FOREWORD

Professor K. S. Srikantan needs *no introduction* to persons interested in South Indian religion and art. His numerous publications have shown him to be a deep student of South Indian lore. The present volume will be welcomed not merely by the specialist, but by that great body of general readers who are sufficiently alive to the realm of good reading to welcome authoritative and scholarly work, if it is presented to them in terms of its human interest and in a simple and attractive style.

This work is of moderate compass and deals with the great Minakshi temple. The author has, however, not remained content with a bare description of the numerous deities, but has succeeded in investing the latter with life and colour, thus making the strongest appeal to the deeply religious Hindu mind. Mr. Srikantan's genius for narrative is well in evidence throughout the book, and he must be congratulated in holding the interest of the reader from start to finish. It is, in brief, an eminently successful production.

Tamkam Park,<br>Madura,<br>March 1938.

J. P. L. Shenoy, I.C.S.,<br>COMMISSIONER,<br>*Madura Municipality.*

# முகவுரை.

நாம் வசிக்கும் இப்பரதகண்டத்தில் பண்டைக்கால முதல் ஏராளமான கோயில்கள் இருந்து வருகின்றன. முன் காலத்தில் ஆரியர்கள அக்கினி, வருணன், வாயு, யமன், சூரியன் முதலிய தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். இவ்வுண்மையை வேதங்களைப் படித்தவர்கள் நன்கு அறிவார்கள். அக்காலத்தில் ஆரியர்கள் கோயில்களில்லாமல் கடவுளை வழிபட்டு வந்தார்கள். ஆனால் ஆரியர்களுக்குப பின் வந்தவர்கள் கோயில்களில்லாமல் கடவுளை வழிபட முடியவில்லை. ஆகையால் கோயில்கள் கட்டவேண்டிய அவசியம் உண்டாயிற்று. உதாரணமாகக் குப்தமன்னர்கள் காலத்தில் அநேக ஹிந்து கோயில்கள் கட்டப்பட்டன.

"கடவுள் தூணிலும் இருக்கிறார்; துரும்பிலும் இருக்கிறார். கோயில்களில மட்டும்தான் கடவுள் இருக்கிறாரா? நமது வீடுகளில் இருந்து கொண்டே கடவுளை பூஜிக்கலாகாதா"? என்று கேட்கலாம். கேள்வி கேட்பது மிகச் சுலபம். அக் கேள்விக்குப் பதிலும் சுலபம். ஆனால் கேட்பது போலும், பதில் சொல்லுவது போலும் நடத்தையில் காணபிக்க முடியாது. ஓர் மனிதன் வீட்டிலிருந்து கடவுளைப் பஜனை பண்ணினால் அவனுக்கு வீட்டு விஷயங்களில் ஞாபகம் செல்லுமே யொழிய மனதை ஒரு முகப்படுத்துவது மிகக் கஷ்டம். இதை யாராவது அயலூர்களிலிருந்து உறவினர்கள் வந்த பொழுதும், மணியார்டர் மூலம் பணம் அனுப்பப் பட்ட பொழுதும் நாம் காணலாம். ஆகையால் வீட்டிலிருந்து கொண்டே கடவுளைப் பஜிப்பது நிறைவேறாத காரியம்.

நமது இந்தியாவில் எங்கு பார்த்தாலும் கோயில்கள். விசேஷமாக தென்னிந்தியாவில் அதிகம். முன் காலத்திய நமது மன்னர்கள் கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கோயில்கள் கட்டிவைத்திருப்பது வீண் அழகுக்காகவும், பெருமைக்காகவும் அல்ல. உதாரணமாக மதுரை மீனாக்ஷி யம்மன் கோயிலையே எடுத்துக்கொண்டால், நான்கு கோபுரங்களிலும் எவ்வளவு அழகான உருவங்கள்? கோயிலுக்குள் சென்றாலோ அங்கும் அழகான உருவங்கள்? என்னே நமது சிற்ப சாஸ்திரத்தின் பெருமை? ஒவ்வொரு உருவங்களிலும் சிற்சில விசேஷங்கள் இருக்கின்றன. நமது ஜனங்கள்—முக்கியமாய் நமது மதுரையில் வசிப்பவர்கள்—இவ்வுருவங்களின் பெயர்களையும், அவைகளில் அடங்கியிருக்கும் கருத்துக்களையும் உணர்வதில்லை.

கோயிலில் வழிகாட்டிகள் என்று சொல்லித் திரிபவர்கள் அயலூரிலிருந்து வரும் யாத்ரீகர்களிடத்தில் தப்பும், தவறும் கூறிக் காசு பிடுங்குகிறார்கள். கோயில் வழிகாட்டிகள் விநாயகரை யானைக்கடவுள் (Elephant God) என்றும்; ஹனுமாரை குரங்குக் கடவுள் (Monkey God) என்றும் சொல்லுகிறார்கள். விநாயகரை, யானைக்கால் கடவுள் (Elephantiasis God) என்று அழைக்காமல், யானைக் கடவுள் (Elephant God) என்று சொல்லி நிறுத்திக் கொள்வதற்காக நாம் அவர்களுக்கு வந்தனமளிக்க வேண்டும். என்னே இவர்களின் கூற்று? என்னே இவர்களின் பேராசை?.

மதுரைக் கோயிலைப் பற்றி ஆங்கிலத்தில் புஸ்தகங்களிருந்தாலும், நமது ஜனங்களுக்குத் தெரியும் பொருட்டும், முன் சொல்லிய வழிகாட்டிகளைக் கண்டிப்பதற்கும், யாத்ரீகர்களுக்கு வழிகாட்டியாயிருக்கும் பொருட்டும், நமது சென்னை

மாகாணப் பிரதம மந்திரி ராஜாஜியவர்கள் தமிழ் உலகிற்கு உபநிஷதப்பலகணி, கண்ணன் காட்டிய வழி, குட்டிக் கதைகள், முதலியனவற்றால் தொண்டு புரிந்திருப்பது போல, நானும் தமிழுலகிற்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் இப்புஸ்தகம் எழுதியிருக்கிறேன். தண்ணீர் கலந்த பாலை அன்ன பக்ஷி பிரித்துப் பாலை மட்டும் உட்கொள்ளுவதுபோல், இந் நூலைப் படிக்கும் எனது அன்பர்கள் யாவரும் ஏதாவது பிழைகாண்பார்களாயின் பொறுத்துக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந் நூலை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பதில் எனக்குப் பேருதவி செய்த எனது மாணுக்கர்கள் ஜி. ஸ்ரீநிவாசனுக்கும், கே. நாகசுப்ரமண்யனுக்கும் எனது வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந் நூலை அச்சு ரூபமாகக் கொண்டுவந்த கம்பெனியார்களுக்கும் எனது வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்.

# INTRODUCTION

## இந்தியச் சிற்பம் உணர்த்தும் உண்மை

கோயில்களே இந்தியாவின் உயிர் நாடி. ஆகாயத்தை அளாவிச் சூரியனை முத்தமிடுவனபோல் நிற்கும் அவைகளின் உன்னதச் சிகரங்களையும் கோபுரங்களையும் யாரே மறக்க வல்லார்! தூரத்தில் வரும் பக்தர்களின் உள்ளங்களில் அக்காட்சி எத்தகைய களிப்பை உண்டு பண்ணுகிறது! இந்தியா, கோபுரங்களும் விமானங்களும் மலிந்த நாடு. மனிதனின் சிறுமையையும், கடவுளின் பெருமையையும் அறிவதற்கு, கற்சிலைகளும், சிறந்த சிற்பவேலைப்பாடுகளும் நிறைந்து தோன்றும், ஒரு பிரமாண்டமான கோபுரத்தின் முன்னால் போய் நின்றால் போதும். கோர்புரத்திலுள்ள ஒவ்வொரு சிலையும் ஒவ்வொரு தத்துவத்தை வெளியிடுகிறது. ஆனால் மௌன தேசிகர்களுக்கொப்பான அவைகள் வெளியிடும் தத்துவங்கள் என்ன வென்பதை நாம் சிறிதும் லக்ஷியஞ் செய்வதில்லை.

இந்திய சிற்பக்கலை பயிலும் மாணவனுக்கு, மதுரை ஓர் சிறந்த ஆராய்ச்சி ஸ்தலமாகும். அதைத் தென்னிந்தியாவின் ஆதென்ஸ் என்று சொல்லுவது சரியே. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வருடந்தோறும் அங்குச் செல்லுகிறார்கள். மதுரைக் கோவிலின் மகத்துவம், ஐரோப்பிய யாத்திரிகர்களுக்குத்தெரிகிற அளவு இந்திய மாணவர்களுக்குத் தெரிவதில்லை. இந்தியக் கலையின் பெருமைகளை இந்திய மாணவர்

களே உணராமலிருப்பது மிக வருந்தத்தக்கதேயாகும். நம்மவருக்கு நம் நாட்டின் சிற்பத்திலும், கலையிலுமுள்ள அறியாமையைக்கண்டு, ஐரோப்பிய ஆசிரியர்கள் வியப்புறுகிறார்கள். அவ்வறியாமைக்குக் காரணம் என்ன ?

"ஔரங்கஜீப் கோயில்களையும் கோபுரங்களையும் இடித்து, இந்தியக் கலையை எவ்வளவு நாசஞ் செய்தானோ, அதைவிட வியாபார முறையில் கற்பிக்கப்படும் மேனாட்டுக் கல்வி, நம் கலை வளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருக்கிறதென்று சொல்லலாம். ஆங்கில ஆட்சியில் படித்த இந்தியர்கள் கீழ்நாட்டுக் கலையை விட்டு, மேனாட்டுக் கலையைக் கற்க வாரம்பித்தார்கள். ஆனால் சென்ற ஐம்பது வருஷ காலத்தில், மேனாட்டார் இந்தியக் கலையையுஞ் சிற்பத்தையுங் கற்றதன்பயனாக, அன்னவர் கலையில் ஏற்பட்டிருக்கும் புதிய மாறுதல்களையும், அபிவிருத்திகளையும் இந்தியர் கவனிக்கவில்லை. கலைஞர்களுக்கும், படித்தவர்களுக்கும் இடையே, ஆங்கிலக் கல்விமுறை ஒரு பெரிய பிளவை உண்டு பண்ணிவிட்டது. இத்தகைய பிளவு இந்திய சரித்திரத்தில் எக்காலத்தும் இருந்ததே இல்லை. அதை நிவர்த்திப்பது எங்கனம் ? இந்தியக் கலைஞர்களுக்கு ஆங்கிலங் கற்றுக்கொடுப்பதனாலோ, அல்லது உடற்கூறு இலக்கணமும், உருவசித்திரமுங் கற்பிப்பதனாலோ இக்குறை நீங்கிவிடாது. ஆனால் கற்றறிந்தவர்கள் என்று சொல்லப்படும் ஜனங்கள் தங்கள் கல்வியிலுள்ள குறையை யறிய வேண்டும். தங்கள் நாட்டின் கலைச் செல்வத்தை உணர்ந்து, அதை அனுபவிக்கும் சக்தி அவர்கள் வாய்க்கப் பெறவேண்டும்" என்று ஸ்ரீ ஹாவெல் சொல்லுகிறார்.

இந்திய நாணயங்களும், கோயில்களும் கலைத்துறையிலன்றி, சரித்திரத்திலும் முக்கியமானவைகள் என்பது மறக்கற்பாலதன்று. இவைகளை நாம் ஆராய்வோமானால், இந்து

தேச சரித்திரத்திலுள்ள அநேக சிக்கலான பிரச்சனைகளை வெகு எளிதில் தீர்த்து விடலாம். எப்பொழுதும் கலை சரித்திரத்தின் கண்ணாடியாகவே இருந்து வந்திருக்கிறது. நாம் கனவிலுங் கருதாத அநேக நூதன விஷயங்களை, இது நமக்குத் தெரிவிக்கிறது. சரித்திர சம்பந்தமான விஷயங்களை அறிவதற்கு ஏற்ற சாதனங்கள் இல்லாமையால், இப்பொழுது இந்து தேச சரித்திரம் தொடர்ச்சியாகவில்லை. இந்தியக் கலைஞன் வாளாவிருந்த காலமே கிடையாது. ஆகையினால், நமது மாணவர்கள் இந்தியக் கலையையும், சிற்பத்தையும் நன்கு ஆராய்வார்களேயாகில், ஆங்காங்கு விட்டுப் போயிருக்கும் நமது சரித்திரத்தை இலகுவில் எழுதிவிடலாம்.

கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்னிருந்தே, இந்தியச் சிற்பக்கலை ஆரம்பித்து விட்டதாக, ஹாரப்பா, மோஹென் ஜோதாரோ, முதலிய இடங்களில் சமீபத்தில் கிடைத்த சில சாதனங்களால் நாம் அறிகிறோம். வேதகாலத்தில் விக்ரக ஆராதனை இருந்ததா, இல்லையா என்னும் பழைய பிரச்னை இப்பொழுது அநேகமாய்த் தீர்ந்து விட்டது. அக்காலத்துக்கு முன்னமேயே அது இருந்ததாக நாம் அறிகிறோம். ஹிந்துக்களுக்கும், ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள தீவுகளிலிருக்கும் ஜனங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுவது இக்கலை யல்லவா? இந்தியக் கலையின் பிரபாவத்தை ரோமானிய சிற்பத்திலும், கோதிய முறையில் கட்டப்பட்ட மாதாகோவில்களிலும் நாம் காண்கிறோம். பாலி, ஜாவா முதலிய தீவுகளிலுள்ள கோயில்களில் இந்தியக்கலையின் சின்னங்கள் இன்றுங் காணக்கிடக்கின்றன.

இந்துதேச சரித்திரத்தைக் கலையின் மூலமாக அறிய விரும்பும் மாணவன் சிற்பியினால் ஆக்கப்பட்ட உருவங்களை

ஆராய்வதோடு நின்று விடாது, கலைஞன் எத்தகைய நோக்கத்துடன் உருவங்களைச் செய்திருக்கின்றான் என்பதையும் உய்த்துணரவேண்டும். இந்தியக்கலை, இந்து தேச சரித்திரத்துடனும், ஹிந்து மதத்துடனும் நெருங்கிய சம்பந்த முள்ளது. அதை அறிய முடியாத சில மேனாட்டு ஆசிரியர்கள் நம் கலையைப்பற்றி வெகு ஆச்சரியமான முடிவுக்கு வந்து விடுகிறார்கள். "கி. பி. 300-க்குப் பின் இந்தியச் சிற்பம், கலையென்ற பெயருக்கே யோக்கியதை யற்றதாகி விட்டது. மனித உருவங்களும், மிருக உருவங்களும், உயிரற்று, உணர்ச்சியற்றுத் தோன்றுகின்றன மத்திய காலத்துக் கோவில்களில் நிறைந்து காணப்படுகின்ற அநேக சிரங்களும் கரங்களுமுள்ள தெய்வங்களின் உருவங்களில் சிறிதேனும் அழகில்லை. அவை பயங்கரமாயும், அவலக்ஷணமாயுமிருக்கின்றன" V A. ஸ்மித் என்னும் பிரபல சரித்திர ஆசிரியர் ஒரு கட்டுரையில் எழுதுகிறார். தனக்கு விளங்காத ஒன்றை இங்கு அவர் கண்டிக்கிறார். கிரேக்கக் கலையைப்போல், புறக் கண்களுக்கு இன்பமளிப்பதற்காக மட்டும் இந்தியச சிற்பிகள் சிலைகளைச் சிருஷ்டிக்கவில்லை. பூமியிலுள்ள மலைகள், மரங்கள், கடல்கள், நதிகள் முதலியவைகளும், வானததில் உலவுஞ் சந்திர, சூரிய நட்சததிரங்களும் கடவுளுடைய பெருமையை உபதேசிக்கும் திருமூர்த்திகளாய் அவர்களுக்கு விளங்கின

நமது சிற்பிகள், இயற்கையின் பிரதிபிம்பங்களாகத் தங்களது உருவங்களை அமைக்க விரும்பவில்லை. அவர்கள விருமபினால் அங்ஙனமே செய்திருப்பார்கள். காந்தாரத்தில் தவிர வேறு எங்கும் இயற்கைச் சிற்பங்களைப் பார்த்தல் அரிது. "கடவுளைத் தொழுவதும் அவருடைய கலியாண குணங்களை வழுத்துவதுமே சிறந்த கர்மயோகமாகும். அவ்வி, ம் செய்பவன் முக்தியடைவான்" என்று மத்ஸிய புரா

ணம் சொல்லுகிறது. ஆகையினால் மனித உருவங்களைக் கல்லில் சமைப்பது கூடாதென்று கருதினார்கள். அது கலையையே அவமரியாதை செய்வதாகும் என்பது அவர்களுடைய எண்ணம். "தெய்வச் சிலைகள் மனிதனுக்கு ஆனந்தத்தையும், மோக்ஷத்தையும் கொடுக்கின்றன; ஆனால் மானிடச் சிலைகள் மனிதனுக்குத் துக்கத்தையுந் துயரத்தையுங் கொடுக்கின்றன" என்று சுக்கிர நீதியின் ஆசிரியரான சுக்கிராச்சாரியார் சொல்லுகிறார்.

பார்ஹூத்திலும், சாஞ்சியிலும், பாசிருடி, அஜாதசத்ரு முதலியவர்களின் உருவச் சிலைகளும், மதுரையில் நாயக்க அரசர்களின் உருவங்களும இருக்கின்றன. ஆனால இந்தியச் சிற்பக்கலையில் அவைகளுக்கு உயர்ந்த ஸ்தானங் கொடுப்பதில்லை. இந்தியச சிற்பம் தெய்வத் தன்மை வாய்ந்தது. தெய்வீகக குணஙகளைத தோஷமின்றிப் பொறித்துக் காட்டுவதே அதன் லக்ஷியமாயிருந்து வந்திருக்கிறது. இத்தகைய லக்ஷியங்களையுடைய சிற்பிகள் வடிவழகைப்பற்றி ஏன கவனிக்கிறார்கள்? இயற்கை யழகும், மனித தததுவமும் வாய்ந்த உருவங்களை அவர்கள் உயர்தரக் கலையாகக் கருதுவதில்லை. சாந்தம், சாத்வீகம், பெருந்தன்மை—இத்தகைய தெய்வீகக் குணங்களையே நமது சிற்பிகள் தங்கள் உருவங்களில சமைக்க முயற்சித்தனர். பற்றற்றுக் கருமம் புரிதலே, இந்தியத் தத்துவத்தின் அடிப்படையான கொள்கை. இந்திய உருவச் சிலைகள் இதைத தெளிவாய் எடுததுக் காட்டுகின்றன. அவைகளில் உணர்ச்சி ததும்புகிறது. மதுரைக் கோவிலிலுள்ள சுந்தர மூர்த்தி சுவாமி விக்ரஹததில் தோன்றும ஆர்வமும, ஆச்சரியமும், யாவரையும் வசீகரிக்குந் தன்மை வாயந்தவை. தக்ஷிணாமூர்த்தியின் உருவத்தில எத்தகைய கம்பீரம்! எத்தகைய அமைதி!

கடவுளின் பெருமையையும், தெய்வீகத்தையும் பக்தர்களின் உள்ளங்களில் பதியவைக்க விரும்பிய சிற்பிகள், அதற்காகச் சில முறைகளைக் கையாண்டார்கள். மனிதனுக்கு இரண்டு கைகளிருந்தால், பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களுக்கு நான்கு கைகளிருக்கவேண்டும். அத்துடன் புராதன வழக்கையும் அவர்கள் அலக்ஷியம் செய்யவில்லை. விஷ்ணுவின் விக்ரஹம் அமைக்கும் பொழுது, சங்கு, சக்கரம், கதை, முதலியவைகளுடனேயே அமைப்பது வழக்கம். அடியார்கள் உள்ளத்தில் விக்ரஹம் உண்டாக்கும் பக்தியின் அளவிலிருந்தே, சிற்பியின் திறமையை மதிப்பிட்டார்கள். தியானத்திற்கும், யோக சாதனைக்கும் விக்ரஹம் சாதக மளிக்கவேண்டும். ஆகையினுல் விக்ரஹத்தைச் சமைக்குஞ் சிற்பி, தானும் ஓர் யோகியாயிருக்கவேண்டியது அவசியம். இந்தியச் சிற்பிக்குப் பரிமாண தாரதம்மியங்களைப்பற்றிய கவலையே இல்லை. கிரேக்க உருவங்கள் அழகாயிருக்கின்றன; எகிப்தியச் சிலைகள் இயற்கையாயிருக்கின்றன; ஆனுல் சிந்தனை தோய்ந்த சிலைகளை இந்தியாவில் தவிர வேறெங்குங் காணமுடியாது. சிற்பியினுடைய யோக்யதாம்சத்தைப் பற்றிப் பௌச்சர் என்னும் ஓர் மேனுட்டு ஆசிரியர் பின் வருமாறு எழுதுகிருர். "வெட்ட வெளியான சூன்யத்துவத்தைப் பற்றியும் உலகம் நிலையாமையைப் பற்றியும், சிற்பி சதா தியானிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஐம்புலன்களின் ஆசைகளும் நிக்ரஹிக்கப்படும். அதன் பின்பு பீஜ மந்திரங்களை உச்சரித்து, இஷ்ட தேவதையை வணங்கி, எத்தெய்வத்தின் விக்ரஹத்தைச் சிருஷ்டிக்க விரும்புகிருனே, அதைப்பற்றியே சதா தியானித்து, அதனுடன் இரண்டறக் கலந்துவிடவேண்டும். இறுதியில் அத்தெய்வத்தின் குணங்களை விவரிக்குந்தியான

மந்திரத்தை உச்சரிக்கும் பொழுது, அதன் உருவம் அவன் மனக்கண்களின் முன்னல் தோன்றுகிறது. ஜோதி வடிவான அவ்வுருவத்தையே மாதிரியாக வைத்துக்கொண்டு, சிற்பி விக்ரஹத்தைச் சமைக்கிறன். சுருங்கக் கூறின், சிற்பி, சர்வ வியாபகனுன ஈசுவரனுடன் இரண்டறக் கலக்கவேண்டும்."


தத்துவ ஞானியாயிருப்பதோடு, சிற்பி இதரக் கலைகளிலும் வல்லவனுயிருத்தல் அவசியம். சித்திரக்கலையின் நியதிகளை அறியாதவன் பிரதிமை லக்ஷணங்களையும் அறியமாட்டான் என்று விஷ்ணு தர்மோத்திரம் கூறுகிறது. மேலும் நாட்டியக் கலைதெரியாதவன் சித்திரக் கலையின் சூக்ஷ்மங்களை அறிவது அரிது. அதுபோலவே சங்கீத ஞானமில்லாதவன், பரதநாட்டியம் பயிலவோ, ரஸிக்கவோ முடியாது. பாடத் தெரியாதவனுக்குச் சங்கீதம் விளங்காது.

விக்ரஹம் அமைக்கும் விஷயத்தில், சிற்ப சாஸ்திரம் அநேக விதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. சுக்ரநீதி, பிரஹத் சம்ஹிதா, மாயாசாஸ்திரம் முதலிய நூல்களும் சில விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. "விக்ரஹத்தின் கண்கள் மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ, உக்கிரமாகவோ, அல்லது மூடியோ இருக்கக்கூடாது. அவைகளில் அமைதியும், சாந்தியும் நிலவியிருக்கவேண்டும்" என்று சுக்கிரர் சொல்லுகிறர். "விக்ரஹத்தின் கைகள் அளவுக்கு மிஞ்சி நீண்டிருந்தால், அதைச்செய்த சிற்பி அரசனுடைய சீற்றத்திற்கு ஆளாவான். குறுகியிருந்தால் அவனுக்கு ஏதாவது விபத்து நேரிடும். சிறுத்திருந்தால், அவன் வறுமைப்பிணியால் வருந்துவான். ஆயுதங்கள் தவறி விழுந்ததனுல் விக்ரஹத்தில் ஏதாவது காயம் ஏற்பட்டிருந்தால், அச்சிற்பிக்கு மரணம் ஏற்படும். அது இடதுபுரம் சாய்ந்திருந்தால் அவனுடைய மனைவியின்

சாவையும், வலதுபுரம் சாய்ந்திருந்தால் அவன் சாவையுங் குறிக்கும். அதன் கண்கள் மேல்நோக்கி யிருந்தால், சிற்பி தன் கண்களை இழந்துவிடுவான்; கீழ் நோக்கியிருந்தால், அவன் மனதில் கெட்ட எண்ணங்களுஞ் சிந்தனைகளுந் தோன்றும்" என்று பிரஹத்சம்ஹிதையில் வராஹி மிஹிரர் கூறுகிறார். பிரதிமை 'லக்ஷணம்' என்ற நூலின் ஆசிரியர் "விக்ரஹம் உயரக் கட்டையாயிருந்தால், நாட்டில் பஞ்சமும் பிணியும் அதிகரிக்கும்" என்று சொல்லுகிறார். ஆகவே சிற்பியின் வேலை, ஓர் நாட்டின் நன்மை தீமையையே பாதிக் கக் கூடியதாய் அந்நாளில் கருதப்பட்டது.

இந்தியச் சிற்பிகள் விரும்பியிருந்தால், உடற்கூறிலக் கணத்தின்படி வடிவழகுடைய சிலைகள் வெட்டுவதில், கிரேக் கர்களைப் பின்னடையச் செய்திருப்பார்கள். சமீபத்தில் மோஹென்ஜோதாரோவில் கண்டெடுக்கப்பட்ட ஓர் நாட்டி யப் பெண்ணின் வெண்கல உருவம் அழகிலும், லக்ஷணத்தி லும் யவனர் கலையைத் தோற்கடிப்பதாயிருக்கிறது. அத னுடைய முதுகுங் கால்களும் மிக அழகாய் அமைக்கப்பட் டிருக்கின்றன. அச்சிலையில் ஒருவித உற்சாகமும், விழிப் பும், சக்தியும் மிளிர்கின்றன. மதுரையிலிருக்கும் ஸ்ரீமீனாக்ஷி யம்மன் கோவிலிலும், மதனகோபால சுவாமி ஆலயத்திலு முள்ள சில விக்ரஹங்கள், இந்தியச் சிற்பத்தின் சிகரங்களாக விளங்குகின்றன. சுந்தரேஸ்வரின் முன்னலிருக்கும் கம்பத் தடி மண்டபத்தின் தூண்களிலுள்ள உருவங்கள் மிகவும் உயர்தரமானவை. அவைகளின் அழகையும் வேலைப்பாட்டை யுங் கண்டு நாம் அதிசயிக்கிறோம். கைலாசகிரியைத் தன் முதுகின்மீது தூக்கிக்கொண்டு, இராவணன் தவம் செய்வது போல் தென்மேற்குத்தூணில் செதுக்கப்பட்டிருக்கும் உரு வம் மிகவும் முக்கியமானது. அது உயர்ந்த கருத்தும்,

சிறந்த வேலைப்பாடும் அமைந்தது. ஸ்ரீ மீனாக்ஷி சுந்த ரேசுவரர் கலியாணத்தைச் சித்தரிக்குந்தூணும் மிகச்சிறந் ததே; பிரம்மாவின் முகத்திலுள்ள ஆழ்ந்த சிந்தனையும், பெண்ணின் முகத்தில் தோன்றும் நாணமும், புன்முறு வலும், மாப்பிள்ளையின் முகத்தில் காணும் அன்பும், ஆர்வ மும் எவரையுமே வசீகரிக்கும் வன்மை வாய்ந்தவை. உண்மை யில் இந்தியச் சிற்பம் இந்திய தத்துவத்தின் எதிரொலியே யாகும்.



ஸ்ரீ மீனாக்ஷி கல்யாணம்.

# மதுரை

# மீனாக்ஷி கோவில்

## அத்தியாயம் 1

### புராதன மதுரை

*தேன் பெருகும் சோலைத தென்னன் வளநாடு*
*கனியுதிரும் சோலைக் கனமதுரை நனனாடு*
*வாழை வடக்கீனும் வான் கமுகு மேற்கீனும்*
*கருமபும இளநீரும் கண்திறநது மடைபாயும்*
*கட்டுக் கலமகாணும் கதிர உழக்கு நெல் காணும்*
*அரிதாள் அறுததுவர மறுதாள் பயிராகும*
*அரிதாளின் கீழாக ஐங்கலததேன் கூடுகட்டும்*
*மாடுகட்டிப் போரடிததால் மாளாது செநநெல் என்று*
*ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை.*

இந்நகரமானது மிகவும் பழமையானது. தென்னிந்தியாவில் உண்டாகிய கொடுமையான பஞ்சங்களாலும், அரசர்களுக்குள் ஏற்பட்ட பற்பல சண்டைச் சச்சரவுகளாலும் மற்றும் காலதேச வர்த்தமானங்களாலும் கொஞ்சமும் மாறாது நிலைத்திருப்பது இது ஒன்று தான். ஆனால் இந்தியாவில் முற்காலத்தில் அயோத்தி, கௌஸாம்பி, விதேகம், கன்னோஜ், ஸையால்கோட் போன்ற நகரங்கள் மிகவும் சிறப்புற்று விளங்கின. இப்போது அவையிருந்த விடமே தெரியாமல் பாழடைந்து கிடக்கின்றன. அம்மாதிரியில்லாமல் எப்

பொழுதும் ஒரே மாதிரி தழைத்து நிற்பது இம்மதுரை ஒன்றே. புத்தர் காலத்தில் பாடலிபுரம் எம்மாதிரியிருந்ததோ அதே மாதிரியாக திருவள்ளுவர் காலத்தில் மதுரை எத் தகைய சீரும்சிறப்பும உடையதாக இருந்ததோ அதில் ஒரு சிறிதும் தற்போது மாறவில்லை. ஆகாயத்தையளாவிய கோபுரங்களும், தெருக்களின் விசாலமும் நகரத்தின் தோற்ற மும், தேவேந்திர லோகம் போன்று பிரகாசிக்கின்றன. சாந் தமும் மனத்தூயமையும், அன்பும் ஒருங்கே பொருந்திய நம் முன்னேர்களால் கட்டப்பட்ட கோவில் பிரகாரங்கள் இன்னும் அவற்றை எடுத்துக் காட்டுகின்றன. அகஸ்தியர் இந்நகரைப்பற்றி எவ்வளவு பெருமையாகக் கூறியிருக் கிருரோ அதில் இப்போது ஒரு சிறிதும் மாறுபடவில்லை.

பாண்டிய தேசத்தை முன்னொரு காலத்தில் ஹிராக் கிள்ஸ் என்பவரின் புதல்வி பாணடேய என்னும் பெயருடை யவள் ஆண்டு வந்தாள். அப்பிரதேசம் 365 கிராமங்களுள் ளது. அது தென்னிந்தியாவில் தென் சமுத்திரம் வரை பரவி யிருந்தது. அதில் ஒவ்வொரு நாளும் வரிசைக்கிரமமாக ஒவ் வொரு கிராமத்தார் கப்பங் கட்டவேண்டும். அதை மீறினல் உடனே மற்றக் கிராமவாசிகளின் உதவியைக் கொணடு மீறின கிராமத்தை உடனே அரசி கீழ்ப்படியச் செய்வாள். அவளிடம் 500 யானைப் படைகளும் 4000 குதிரைப்படைகளும், 13000 காலாட்படைகளும் உடைய ஒரு சேனை இருந்தது என்று சந்திரகுப்த மௌரிய அரசருக்கு அமைச்சராகவிருந்த மெகஸ்தனீஸ் விபரமாகக் குறிப்பிட்டிருக்கிருர். கிரேக்கர் களும் ரோமர்களும் அக்காலத்தில் தென்னிந்தியாவோடு வியாபாரம் நடத்தி வந்திருக்கிருர்கள். சித்தர் மலையிலும், அழகர் கோவில் மலையிலும் உள்ள குகைகளில் செதுக்கப் பட்ட சிலாசாஸனங்கள் இந்நகரின் பெருமையை விளக்கிக்

கூறுகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 200, 300 வருஷங்களுக்கு முன்னமேயே மேற் சொல்லிய கல்வெட்டுகள் வெட்டப்பட்டன என்று விளங்குகிறது. சங்க நூல்களிலும் ஏராளமாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இன்னும் திருவிளையாடற் புராணத்தை இயற்றிய பெரும்பற்றப் புலியூர் நம்பிகள், முன்னொரு காலததில் காசியில், பராசரர், விஸ்வாமித்திரர், நாரதர், துர்வாசர், அகஸ்தியர் முதலிய ரிஷிகள் எல்லோரும் ஒன்றுய்க்கூடி மதுரையில் இருக்கும் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடலகளைத் தங்களுக்கு விபரமாக வைகைக்கரையி லிருந்துகொண்டு சொல்ல வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டதாக எழுதியிருக்கிறுர். கிருதயுகத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி விவரிக்கும் பொழுது வியாசர் மதுரையின் சிறப்பையும் விஸ்வகர்மாவால் ஏற்படுத்தப்பட்ட அஷ்டாங்க விமானமுள்ள கோவிலையும் பற்றி விவரித்திருக்கிறுர்.

ஆகையால் இந்நகரமானது எவ்வளவு புராதனமானது என்பது விளங்குகிறதல்லவா? இந்நகருக்கு ஆலாஸ்ய க்ஷேத்திரம், மதுரை, சமஷ்டி வித்யாபுரம், பூலோக சிவலோகம், ஜீவன் முக்திபுரம், கடம்பவனம், துவாதசாந்தம், கன்யாபுரம், சதுஷ்கூடம், திருவாலவாய் என்ற அழகிய திருநாமங்கள் உண்டு. காசியில் இறக்க முக்தி ஏற்படும என்றும், ஆனல் இந்நகரில் வசித்தால் ஜீவன் முக்தர்களாய் விடுகிறுர்கள் என்பதாலேயே இதற்கு ஜீவன்முக்திபுரம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இந் நகரததின் பூர்வ விருத்தாந்த மெல்லாம் மதுரை ஸ்தலபுராணத்தில் வெகு விரிவாகக் காணலாம். இந்நகரம் ஏற்படுவதற்குமுன் பாண்டிய அரசர்கள் மணலூரைத் தங்களுக்கு தலைநகராகக் கொண்டிருந்தார்கள் என்பது பின்வரும் அடிக

ளால் விளங்குகிறது. அது கடம்பவனத்தின் கீழ்த்திசையில் இருந்ததாகத் தெரிகிறது.

> கின்னரம் பயில் கடம்பமா வனத்தினின்கீழ் சார்த்
> தென்னர் சேகரனெனுங் குலசேகரனுலக
> மன்னர் சேகரனரசு செய்திருப்பது மணவூர்.

அவ்வாறு குலசேகர பாண்டியன் அரசுபுரியும் காலத்தில் தனஞ்செயன் என்னும் ஒரு வைசியன் மேற்றிசை நோக்கி வியாபாரம் செய்யப் புறப்பட்டு, வீட்டுக்குத் திரும்பும்போது, கையில் ஏராளமாகப் பொருள் இருந்தது. அப்பொழுது மிகுந்த இருட்டாயிருந்தது. மேற் செல்லமுடியாமல் அங்கே யே தங்க நேர்ந்தது. அந்த விடமெல்லாம் கடம்ப மரங்க ளடர்ந்த காடாயிருந்தது. அன்றிரவு அவனுக்கு தூக்கம் வராததால், அங்கேயுள்ள ஒரு தடாகத்தில் ஸ்நானம் செய் தான். பிறகு பொழுதுவிடிந்ததும், அங்குச் சுற்றிப் பார்க் கும்போது அழகிய ஒரு சிவலிங்கத்தையும் அதன் பக்கத் தில் தாமரை புஷ்பங்கள் நிறைந்த குளத்தின் அழகையும் பார்த்து மனமகிழ்வுற்றான். அதையே மனதில் சிந்தித்துக் கொண்டே மணவூருக்குச் சென்று தான் கண்டவற்றை யெல்லாம் விபரமாகத் தன் அரசனிடம் தெரிவித்தான். அதைக் கேட்டதும் அவ்வரசன் தன்னுடைய பரிவாரத் தோடு மந்திரிகளையும், அவ்வர்த்தகனையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்திற்குச் சென்றான. அந்த இடம் அப்போது இருந்த அழகையும், வசதியையும் பார்த்து வியப் புற்று உடனே அவ்விடததில் அக்குளத்தைச் சுற்றி ஒரு கோவில் கட்டத் தீர்மானித்தான். உடனே அநேகமாயிரம் வேலையாட்களைகொண்டு அக் காட்டிலுள்ள மரங்களை வெட்டச் செய்தான். அவ்வேலையாட்கள் மரங்களை வெட் டிய சத்தமானது இடைவிடாது கேட்டுக்கொண் டிருந்தது என்று சொல்லப்படுகிறது. அவர்கள்,

பாயவேலையினார்த்தனர் வழிக்கொடு படர்ந்தார்
சேயகாடெறிநதணி நகா செய்தொழினமாக்கள்.

காடுகளை வெட்டிச் சீர்திருத்திய பிறகு அரசன் நகரம் அமைக்க வேண்டிய விதத்தைப் பற்றி தன்னுடைய மந்திரி களுடன் கலந்து யோசித்து நகரை நிர்மாணிததார்கள்.

முதலில் கோவில் கட்டப்பெற்றுச் சுவாமி பவனிவரும் வீதிகளில் எல்லாம் சிற்பசாஸ்திரத்தில் கண்டபடி யாதொரு தவறுதலும் இல்லாமல அமைக்கப்பட்டிருந்தன என்பது " கம்மிய நூல தொல்லைவரம் பெல்லை கண்டமைததான் " என்ற அடியால் விளங்கும். நிழலைக் கொடுக்கக்கூடிய நல்ல விருக்ஷங்கள் தெருக்களில வைதது வளர்க்கப் பட்டிருந்தன. உபந்யாசங்களுக்கு வேண்டிய மேடைகள இருந்தன.

இம்மட்டோ! குளிப்பதற்கு அநேகம் குளங்கள், வேடிக்கைக்காக வைக்கப்பட்ட தோட்டங்கள், இன்னும் மற்றும் அழகைச் செய்யக்கூடிய கட்டடங்களும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. " மாளிகை தனக்கம்மாநகர் வடகுண பாற் கணடு" என்றபடி அரசன் மாளிகை நகரத்தின் வடகிழக் குத திக்கில் அமைக்கப் பட்டிருந்தது.

இந்தியாவில் வெகுகாலத்துக்கு முன் நகர அமைப்புத் திட்டதைப் பற்றி கனம் E. B. ஹாவெல், எழுதுங்காலத் தில், தொன றுதொட்டு உண்டாகிய இந்தத திட்டம் எதிரிகள் வந்து எதிர்த்த காலத்திலும்கூட நகர வாசிகள எதிர்ததுப் போராடுவதற்கு சௌகரியமாகவும், ஜனங்கள் வியாதி இல்லாமல் சுறு சுறுப்பாக இருப்பதற்கும் மிகவும் வசதியா யிருந்தது. சூரிய உஷ்ணம் தெருக்களில் பட்டு அவற்றைச் சுத்தம் செய்யவும், காற்று தாராளமாக வீசி சுகத்தைக்

கொடுக்கக் கூடியதாகவும் இருந்தது. இத்தனை ஏற்பாடுகளும் ஒருங்கே அமையப்பட்டது இம் மதுரை.

ஒருகாலத்தில் மதுரையானது வைகையில் பெருக்கெடுத்து ஜலப்பிரளயமா யிருந்ததென்று சொல்லப்படுகிறது. அப்பொழுது ஜனங்கள் கோவிலிலும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசத்திலும் வந்து தங்கியிருந்தார்களாம். இம்மாதிரி ஏதாவது ஒரு விபத்து நேரும்பொழுது ஜனங்களுக்குத் தங்குவதற்கு சௌகரியத்தை உண்டாக்குவதற்கே கோவில் மிகவும் பெரிதாகக்கட்டப்பட்டது. கோவிலைச் சுற்றிலுமுள்ள இடத்திற்கு நடுவூரென்று பெயரிட்டிருந்தது. அது கீழ்க் கண்ட செய்யுளால் விளங்கும் :—

ஒன்றிய பெருவெள்ளத்து நடுச்சிதையாமலோங்கி
நன்றியலுலகுக்கெல்லாம் படிமமா நலஞ்சேர் வெள்ளி
மன்றுடன் விளங்கலாலே மண்ணிசை நகர்க்குநாம
மன்றுமுன்னடுவூரெனறு விளங்கியதமரர் மெச்ச.

கொஞ்ச காலத்துக்குப் பின்னால், அதாவது வெள்ளம் வற்றிப்போனபின், பாண்டிய அரசன் இடம் போதாததால் நகரத்தை இன்னும் பெரியதாகக்கட்ட எண்ணினான். திருவிளையாடற்புராணத்தில் கூறியுள்ளபடி, மதுரை முன்னமே எப்படி இருந்ததோ அதேமுறையில் அவ்வளவு விஸ்தீரணத்தோடு கட்டப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஒரு சிறு கதை இருக்கிறது. பாண்டியன் மதுரையின் எல்லை தெரியாது சோமசுந்தரக் கடவுளைப் பிரார்த்தித்தான். அவர் தம்மீதுள்ள ஒரு சர்ப்பத்தை ஏவி மதுரையின் எல்லையைக் காட்டிவரும்படி கட்டளையிட்டார். அவ்வண்ணமே அது புறப்பட்டு வலது பக்கமாகச்சுற்றி நகரின் இடப்பாகமாக வந்து சுவாமியிடம் சேர்ந்தது. அது பூறப்

பட்ட இடத்திலிருந்து தலையை வைத்து உடம்பைப் பெரி தாக்கிக் கொண்டு அதன் வாலைக்கொண்டு வாயில் வைத்துக் காட்டியதாகையால் இந்நகருக்கு திருவாலவாய் என்று ஒரு பெயரும் உண்டு. அதைக் கீழ்க் கண்டசெய்யுளால் காண்க :—

வாலினைச் சுந்தரேசன் வலத்திருமருங்கு வைத்து
கோலமாருடலை நீள நிமிர்த்தெல்லை குன்றுவாறு
சாலமுன் வலமதாகத் தன்னுடைச் செலவினாற்சுழந்
தாலவாய் வைத்துக்காட்டிற் றிடதிரு மருங்கினூங்கு.

இவ்வாறு கட்டப்பட்ட மதுரை நகரமானது ஒன்பது மைல் நீளமும் ஒன்பது மைல் அகலமுமுள்ளது. வடக்கே வைகை நதி இருப்பதால் தென்பாகத்தில் நகரம் விசாலித்துக் கொண்டே சென்றது. நகரத்தின் தென் பக்கத்தில் ஒரு பெரிய கொட்டை வாசல் இருந்தது. இதன் வழியாகத் தான் நகரவாசிகளும் பிரயாணிகளும் நகருக்கு உள்ளே செல்லவேண்டும். வடக்கில் ஒரு சிறு வாசல் உண்டு. அதன் வழியாகததான் ஜனங்கள் வெளிச்செல்ல வேண்டும். முற் காலத்தில் சாதாரணமாக விரோதிகள் வடக்கே யிருந்து வந்ததால் வடக்குவாசல் எப்பொழுதுமே மிகவும் பந்தோ பஸ்தாகக் காவல் காக்கப்பட்டிருந்தது. கோட்டைச் சுவர்கள் அதி உன்னதமாகவும் பலமாகவும் கட்டப்பட்டிருந்தன. ஜனத்தொகை அதிகமாகிக்கொண்டே வந்ததால் கோட்டைச் சுவரை ஒரு நிதானமாகவே கட்டமுடிந்தது. ஆகையால் அவ்விதம் சுவர் சூழ்ந்த மதுரைக்குத் திருமுடங்கல் என்று பெயரிட்டார்கள். கோவில் நகரின் மையத்தில் இருந்தது. ஒரு நதியின் இரு மருங்கிலும் விருக்ஷங்கள் வளர்ந்திருப்பது போல் வீதிகளின் இருபுறத்திலும உயர்ந்த வீடுகள் கட்டப் பட்டிருந்தன. வீடுகள் வீதியைக் காட்டிலும் உயரமான இடத்தில் கட்டப்பட்டிருந்தன.

இந்நகர் முற்காலத்தில் முக்கிய வியாபாரஸ்தலமாக இருந்தது. ஒவ்வொரு வியாபாரஸ்தலத்திலும் ஒவ்வொருவிதமான கொடி தொங்கிக்கொண்டிருக்கும். அதைப் பார்த்தால் நகரமானது ஏதோ ஒரு விசேஷத்துக்காக அலங்கரிக்கப்பட்டது போல இருந்தது. இவற்றின் நடுவில் நான்கு உயர்ந்த மதில்களால் சூழப்பட்டு அரசன் மாளிகை விளங்கிற்று. அரண்மனைக்கு ஒரு பெரிய வாசல் இருந்தது. அதன் வழியாக யானைகள் அம்பாரியோடு தாராளமாய்ப் போகக் கூடிய அவ்வளவு உயரமாக இருந்தது. அதை வர்ணிக்கும் காலத்தில் ஒரு பெரிய குன்றில் ஒரு கணவாய் இருப்பது போல் தோன்றிற்று என்று சொல்லியிருக்கிறது.

பாண்டியன் மாளிகையைச் சுற்றிலும் அமைச்சர் விடுதிகளும், நியாயவாதிகள், மற்றும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் விடுதிகளும் அமைந்திருந்தன. அத்தெருக்களில் உள்ள கழிவு நீர் போவதற்காகச் சாக்கடைகள் கட்டப்பட்டிருந்தன. அவையெலலாம் ஜனஙகளுக்கு அபாயம் உண்டுபண்ணுமல் நன்றாக மூடப்பட்டிருந்தன. கோட்டைச் சுவர்களுக்கு வெளியே ஒரு பெரிய அகழ் உண்டு. அதில்தான் அந்தக் கழிவுத் தண்ணீர் எல்லாம் போய்ச் சேருமு. அகழ் மிகவும் ஆழமானது. அதைச் சாமாணியமாக ஒருவருமு தாண்ட முடியாதபடி அவ்வளவு அகலமாக இருந்தது. விரோதிகள் எளிதில நகருக்குள் பிரவேசிக்காதபடி அது தடை செய்தது. ஆகையால் அது நகர பாதுகாப்புக்காக ஏற்பட்டிருந்தது.

தூர இருந்து பார்ப்பவருக்கு மதுரை அழகிய கோபுரஙகளாலும், விமானங்களாலும், அடர்ந்து நெருங்கி வளர்ந்த விருக்ஷங்களாலும், நந்தவனங்களாலும் தேவலோகம் போன்று விளங்கிய தென்பதை பின் வரும் அடிகள் உணர்த்துகின்றன :—

புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையும்
இறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந்தார்ப்ப.

மேலே சொல்லிய விஷயங்களிலிருந்து மதுரையானது எவ்வளவு புராதனமானதென்பது நன்முக விளங்கும்.

---

## அத்தியாயம் 2

நமது தென் இந்தியாவின்கண் ஏற்பட்டுள்ள அநேகம் பெரிய கோவில்களில் மதுரை மீனாக்ஷி கோவிலும் ஒன்று. சில கோவில்கள் சிற்சில பாகங்களில் மட்டுமே பெரிதாக வாவது அல்லது விசித்திரமாகவாவது அமைந்திருக்கலாம். ஆயினும் இக்கோவிலுக்கு ஏற்பட்டுள்ளவை போல மகா பெரிய கோபுரங்கள் வேறு எக்கோவிலுக்கும் கிடையா. இக் கோபுரங்கள் அழகிலும், சித்திரச் சிலைகளின் வேலைபாட்டி லும் மிகக சிறப்புற்று விளங்குகின்றன. இக் கோவிலின் உள்ளே இருக்கும் மண்டபங்களின் ரம்மியமான நேர்த்தி எக்காலத்தும் பாராட்டத்தக்கது. மாமதுரையின் மத்தி யில் இந்தக் கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது 847 அடி நீளமும் 792 அடி அகலமும் உள்ள ஒரு நாற் கோண வடிவம். கோவிலைச்சுற்றி நாலாபக்கங்களிலும் பல விருக்ஷங்களாலும் பூச்செடிகளாலும் அலங்கரிக்கப்பட்ட தோட்டங்கள் நிறம்பி சோபிக்கின்றன. சுமார் 50 வருடங் களுக்கு முன் மதுரை ஜில்லா கலெக்டராகவிருந்த க்ரோல் துரையவர்களின் தூண்டுதலின் பேரில் இந்தத் தோட்டம் ஏற்படுத்தப்பட்டது.


மகா உன்னதமான நாலு கோபுரங்களும் மாமதுரைக் குச் சமீபம் நெருங்குவதற்கு முன் வெகுதூரத்தி லிருந்தே பார்ப்போர்களின் கண்களைக் கவர்கின் றன. அநேக மைல் தூரமுள்ள பிரதே

தோற்றம்

சங்களுக்கு அடையாளமாக்வும் மதுரையின் ஞாபகச் சின்ன மாகவும் இவை ஏற்படுகின்றன.

ரயில்வே மார்க்கமாக மதுரைக்கு வரும் ஜனங்கள் வெகு தூரத்திற்கு அப்பாலிருந்தே மதுரை இருக்கும் திக்கை நோக்கிப் பார்க்கும்பொழுது நாலாபக்கத்திலும் சுற்றி ஆனைமலை, நாகமலை, பசுமலை, திருப்பரங்குன்றம் முதலிய மலைகளுக்கு நடுவே அந்த நான்கு கோபுரங்களும் தலைதூக்கி நிற்கும் பெருமையையும் அந்தக் காட்சியின் அழகையும் நன்கு கவனிக்கலாம். இந்தக் காட்சியே மதுரையின் மதப் பெருமையையும் நனகு விளக்குகிறது. கோபுரங்களின் சமீபத்தில் நெருங்கிப் பார்த்தாலோ ஒவ்வொன்றும் 60 அடி உயரமான ஒரேகல்லில், குடையப்பட்ட வாசற்படியோடுகூடியிருக்கின்றது. கோபுரத்தின் ஒவ்வொரு பத்தியிலும் வெகு அழகான உருவங்களும் அவைகளின் அவயவங்கள் கம்பீரமாகவும் வேலைப்பாடுடையனவாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுவாமிகள், அம்மன்கள், விருஷபம், யானை, குதிரை, மயில் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவும் புராணக் கதைகளை நன்கு விளக்கிக் காட்டக்கூடியவுமான அநேக சிலைகளாலும் கோபுரம் நிரம்பியிருக்கிறது. சுருக்கிச் சொல்லுமிடத்துக் கோவிலுக்குள் கருங்கற்களில் செதுக்கப்பட்ட உருவங்களை எல்லாம் வெளியில் கோபுரங்களின்மேல் சுண்ணாம்பினாலும் கற்களாலும் கட்டி அமைத்திருக்கிறார்கள்.

இந்தக் கோவிலிலுள்ள ஒன்பது கோபுரங்களில் இந்த நான்கு வெளிக் கோபுரங்கள் மட்டுமே அதிக கம்பீரமும் அழகும் பொருந்தியவை. இவை பார்வைக்கு ஒன்றுபோல் இருந்தாலும் வேலைப் பாட்டில் ஒன்றுக்கொன்று பல வித்தியாசங்கள் உடையன. சிற்பசாஸ்திர விதிப்படி இவை நான்கும் உத்தம கோபுரங்களின் அடையாளங்களைத் தழுவியே ஏற்



வடக்கு கோபுரம்.



தெற்கு கோபுரம்.

பட்டுள்ளவை. இந்த நான்கு கோபுரங்களிலும் அதிக உயரமானது தெற்குக் கோபுரம்தான். அது 152 அடி உயரமுள்ளது. நேர் வடக்கே மொட்டைக் கோபுரம் என்று சொல்லப்பட்ட வடக்குக் கோபுரம் இருக்கிறது. இப்போது இதைமொட்டைக் கோபுரம் என்று சொல்லத்தகாது; ஏனெனில் தனவான்களான நகரத்தார்கள் என்ற நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் அது முற்றிலும் சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்டுவிட்டது. மற்றக் கோபுரங்களைப் போல் இதில் அதிகமாக சிலைகளும் உருவங்களும் இல்லை. ஆனால் இந்தியாவில் ஆங்காங்கு உள்ள அநேக விமானங்களை இங்கு சுருக்கி காண்பித்து இருக்கிறார்கள். ஆங்காங்கே சிற்சில உருவங்களும் விமானங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இவை எல்லாம் ஒருவிருந்தே ஆகும்.

அமைப்பு

இந்தக் கோபுரத்திற்குள் ஒருவன் நுழைந்து கோவிலுக்குள் வந்தால் அவன் 5 சங்கீதத் தூண்கள் என்று சொல்லப்பட்டவைகளைக் காணலாம். ஒவ்வொரு தூணிலும் 22 சிறு தூண்கள் நிற்கின்றன. இவை 22ம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவை. இவைகளைத் தட்டினால் ஒரு இனிமையான தொனி உண்டாகிறது. இந்தத் தூண்கள் எவ்விடத்தில்வைப்பதற்காகச் செய்யப்பட்டவை என்று நமக்குத் தெரியவில்லை. நாயக்க மன்னர்கள் காலத்தில் அவைகள் யானை கட்டுவதற்காக உபயோகப்படுத்தப்பட்டன என்ற ஒரு வதந்திமட்டும் இருந்து வருகிறது. மொட்டை கோபுரத்தின் அடிவாரத்தில் கோவிலுக்குவெளியே ஒரு சிறிய கோவில் இருக்கிறது. இந்தக் கோவிலுக்கு மொட்டைக் கோபுரத்தான் கோவில் என்று பெயர்.

சங்கீதத் தூண்கள்

அதன் கீர்த்தி மிகவும் விஸ்தாரமாகப் பரவியுள்ளது. பட்டணத்திலுள்ள ஜனங்களும் பக்கத்துக் கிராமத்தில் உள்ள ஜனங்களும் பிரதி வெள்ளி செவ்வாய்க்கிழமைகளிலும் மொட்டைக் கோபுரத்தானுக்கு ஏராளமாகப் பூஜைகள் போடு கிருர்கள். முக்கியமாக இந்த மொட்டைக் கோபுரத்தானுக்கு பூஜை போடுவது தேசததின் முற்குடிகள் தான். ஆயினும் மேல்குலத்தோரும் இந்தக் கோவிலுக்கு வேண்டிக்கொள்ளு கிருர்கள். அநேகர் சுகப்பிரசவத்திற்கும் குழந்தை பிறந்தபின் சுகமாக இருப்பதைக் குறிததும் பிரார்த்திததுக் கொள்ளு கிருர்கள். ஆடுகளும் கோழிகளும் இந்தத தெய்வததிற்கு இப் போதும்வெகுவாய் பலியிடப்படுகின்றன.


மொட்டைக் கோபுரத்தான்

பொதுவாக ஜனங்களின திரேக சௌககி யத்திற்குப் பிரதான பாதுகாப்புத் தெய்வ மாக இதைக் கொணடாடுகிருர்கள். பட் டணததில் வாந்திபேதி போனற தொத்து வியாதிகள் ஏற் படும் காலங்களில் அதறகு அதிஷ்டான தேவதையாகவும் அதைக்கொணடாடுகிருர்கள் சுகப்பிரசவத்திற்காக வேணடிக் கொணடு அவ்விடம் கொண்டுவந்து விடப்பட்ட அநேக விளை யாட்டுத தொட்டில்களை இப்போதும் நாம் அவ்விடம் காண லாம். முக்கிய தினஙகளான வெள்ளி, செவ்வாய்க் கிழமை களில் இநத மொட்டைக் கோபுரத்தான் என்ற முனி யாண்டிக்கு அதிக திருப்தியைக் கொடுப்பதாக நினைத்து வடக்குக் கோபுரம் முழுவதும, அதாவது உச்சியிலிருந்து அடி வரையில், பூமாலை தொஙகவிடபபடுகிறது

சிற்பசாஸ்திரப்படி இநத ஸ்ரீமீனாக்ஷி கோவிலின் கிழக்கு மேற்குக் கோபுரங்கள் தான அதிக மேன்மை பொருந்தியவை கிழககுக் கோபுரத்திற்கு இந்திரவிமானம் என்றும் மேற்குக் கோபுரததிற்கு வருணவிமானமென்றும் பெயர். இந்த



கிழக்கு கோபுரம்.



மேற்கு கோபுரம்.

இரண்டு திக்குக்களுக்கு இந்த இரண்டு தேவதைகளும்அதிஷ்டான தெய்வங்கள். இந்தக் கோவிலின் மேற்குக் கோபுரம் இந்தியாவில் உள்ள கோவில்களின் கோபுரங்களில் மிகவும் அழகில் சிறந்து விளங்குகிறது என்று சொல்லலாம். கோபுரம் 150 அடி உயரம் இருக்கிறது. ஒன்பது மாடிகள் உடையது. புராணக் கதைகள் எல்லாம் இந்தக் கோபுரத்தின் வெளிப் புறத்தில் சுண்ணும்பிஞல் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படிக் கட்டப்பட்டவைகளில் மிகவும் சிரேஷ்டமானது சமுத்திரத்தைத் தேவாசுரர்கள் கடைகிற உருவங்களே. கடையும்போது வாசுகி என்ற பாம்பு விஷத்தைக் கக்குவதும் பரமசிவன் காலகூட விஷத்தை விழுங்கப்போவதும் அவர் கழுத்தை பார்வதி கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பதும் நேர்த்தியாகக் காட்டப்பட்டிருக்கின்றன. கோபுரத்தில் காட்டப்பட்டிருக்கும ஒவ்வொரு உருவமும் அசைவற்று நிற்கவில்லை. கோபுரம் முழுவதும் எவ்விடம பார்த்தாலும் உருவங்களும் காட்சிகளும் இடைவிடாது நிரம்பி இருக்கின்றன.இந்த ஒரு கோபுரத்தின் வேலைப் பாட்டிலிருந்து இந்தக் கோவிலைக் கட்டுவித்தவர்கள் எவ்வளவு மதப்பற்றுள்ளவர்களென்றும் எவ்வளவு கடவுள் பக்தியில சிறந்து விளங்கிஞர்களென்றும் நன்கு விளங்கும். கிழக்குக் கோபுரம் எல்லாவற்றிற்கும் முந்தியகாலதது கோபுரமாகத் தெரிகிறது. அது சுவாமி சனன திக்கு முன் இருக்கிறது. அதில் "திருபுவன சக்கரவர்த்தி கோனேறி நன்மை கொண்டான் சுந்தர பாண்டியஞல் இந்த கோபுரம கட்டுவிக்கப்படடது" என்ற கல்வெட்டு கோபுரததின் கீழ் இருக்கிறது. எங்கும் எல்லாக் கோவில்களுக்கும் முக்கியமாக உட் செல்லவோ வெளி யேறவோ பிரதானமான கிழக்குக் கோபுர வாசல் இக்கோவிலில்

கிழக்கு மேற்கு கோபுரங்கள்

மட்டும் ஒன்றுக்கும் உபயோகப்படாமல் இருப்பது வெகு விசித்திரமே. இப்போதும் ஒருவரும் இதன் வழியே உட்பிரவேசிப்பதும் இல்லை. வெளியேறுவதும் இல்லை. இப்படி இருப்பதற்குக் காரணமாக ஒருவித பழங்கதை வழங்குகிறது. நாயக்க மன்னர்களில் ஒருவனான விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் அரணமனை உத்தியோகஸ்தர்கள் கோவில் வேலைக்காரர்களின் மீது சட்ட விரோதமானதும் பொறுக்கக் கூடாததுமான தீர்வைகள் விதித்தார். அக்காலத்து ஜனங்களில் ஒருவன் இக்கோபுரத்தின் மீதில் ஏறி கீழே விழுந்து உயிர் துறந்தான் என்றும் இப்போதும் இந்தக் கோபுரம் அவனுடைய பிரேததின் ஆவியினால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதப்பட்டுவருகிறது. கோவில் பட்டர் முதலிய வேலைக்காரர்களுக்கும் அரசர்களுக்கும் உள்ள தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள முற்காலத்தில் இது ஒரு வழக்கமாக இருந்ததாகத் தெரிகிறது. மற்றொரு சமயம் இருகட்சிக்காரர்கள் சண்டையிட்டுக் கொண்டார்கள் எனவும் இவர்களில் ஒருவன் கோபுரத்தின்மீது ஏறி அவன் குறிப்பிட்ட காலத்தில் இவர்கள் ஒற்றுமைக்கு வராவிட்டால் தான் கீழே குதித்து உயிர் துறப்பதாகத்தனது முடிவைத் தெரிவித்தான் என்றும் இருகட்சியார்களும் அவன் பழிக்கு அஞ்சி சமாதானமானார்கள் என்றும் சொல்லப்பட்டு வருகிறது.

மதுரை வீர சுவாமி கோவில்

இது கிழக்குக் கோபுரத்தின் அடிவாரத்தில் இருக்கிறது. இந்த மதுரை வீரனது இருபக்கத்திலும் பொம்மி, வெள்ளையம்மாள் என்ற பத்தினிமார்களையும் காணலாம். பக்கத்தில் கருப்பண்ண சுவாமிகோவில் இருக்கிறது. மதுரைவீரனும் கருப்பண்ண சுவாமியும் இந்த நகரத்திற்கு ஆதிதேவதைகளாகக் கருதப்படுகிறார்கள். மதுரைவீரனை ஜனங்

கள் வெகுவாய்க் கொண்டாடுகிறார்கள். மதுரைவீரன், பொம்மி, வெள்ளையம்மாள் என்று தங்கள் குழந்தைகளுக்கு முற்குடிகள் பெயரிடுவது இப்போதும் வழக்கம்.

முற்காலத்தில் மதுரை நகரைக் கள்ளர்களின் உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக வட நாட்டிலிருந்து அழைத்துவரப்பட்டவனாக மதுரைவீரனைச் சொல்கிறார்கள். மதுரைவீரன் காசி ராஜாவின் குமாரனென்று கதை வழங்குகிறது. அவன் வந்து அப்படியே கள்ளர்களை அடக்கி நகரத்திற்கு ஒரு அரசன் போல் விளங்கினான். ஒருவரும் நகரத்தில் இரவு 12 மணிக்குமேல் தன் வீட்டைவிட்டு வெளிப்புறப்படக் கூடாதென்றும் மீறிக் குற்றம் செய்பவர்களை மாறுகால் மாறுகை வாங்கப்படுமென்றும் அவனே ஆக்ஞாபித்தான். ஒரு நாள் இரவு அவனே கோவிலுக்குள் புகுந்து மீனாக்ஷியம்மனுக்கு தேவதாசிகளான பொம்மி வெள்ளையம்மாள் என்ற இரண்டு பெண்களையும் அபகரித்துவெளி வந்தான். அவனது உத்தரவுப்படியே அவனது வேலைக்காரர்கள் அவனைப் பிடித்து இன்னானென்று தெரிந்துகொள்ளாமல் மாறுகால் மாறுகை வாங்கி விட்டார்கள். அந்த வீரன் இனி உயிருடன் இருப்பது அவமானமென்று மதித்து உயிர் துறப்பதே உசிதமென்று கருதினான். மீனாக்ஷியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அக்னிப் பிரவேசம் செய்தான். அவ்வாறு அவன் அக்னிப் பிரவேசம் செய்த இடம் கம்பத்தடி மண்டபம் என்று கூறப்படுகிறது. அக்காலதது வழக்கம்போல் பொம்மியும் வெள்ளையம்மாளும் புருஷனுடன் உடன்கட்டை ஏறினார்கள்.

மதுரைவீரன் மீனாக்ஷியம்மனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டபடி இப்போதும் பூஜைகள் முதலில் மதுரை வீரனுக்குத்தான் நடந்து வருகிறது. இதற்குத் தெற்குப்

பக்கத்தில் முற்கூறியபடி கருப்பண்ண சுவாமி கோவில் இருக்கிறது. இங்குப் பிரார்த்தனைச் செலுத்திய சங்கிலிகள் ஈட்டிகள், குத்துக் கம்புகள் முதலியன ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கருப்பணசுவாமியின் பாதத்திலிருந்து வாசற்படிவரையில் 18 படிகள் இருக்கின்றன. இந்தப் படிகள் ஜனங்களால்மிகவும் கொண்டாடப் படுகின்றன. இந்த சுவாமிக்கு பதினெட்டாம் படியான் என்ற பெயரும் உண்டு.

கருப்பண்ண சுவாமி கோவில்

சத்தியம் செய்வதற்கு இந்தக் கோவிலுக்கு ஜனங்கள் வருகிறது வழக்கம். 18 படிகளும் ஏறிச் சத்தியம் செய்துவிட்டுத் திரும்பி 18 படிகளும் இறங்கி வந்தவர் யாராயினும் பொய்ச்சத்தியம் செய்திருந்தால் 18 நாட்களில் இறந்துவிடுவார் என்று ஜனங்களின் நம்பிக்கை. இம்மாதிரி அநேக வழக்குகள் கருப்பணசுவாமி முன்னிலையில் இன்னும் முடிவடைந்து வருகின்றன.

---

## அத்தியாயம் 3

பொதுவாக ஜனங்கள் கோவிலுக்குள் அஷ்ட சக்தி மண்டபம் அல்லது அஷ்ட லக்ஷ்மி மண்டபம் என்று சொல்லப்பட்ட கிழக்கே உள்ள மண்டபத்தின் வழியே உட்பிரவேசிப்பது வழக்கம். இவ்விடம் பிரவேசிப்பதற்கு முன் இதற்குக் கிழக்கே இருக்கும் நகரா மண்டபத்தை கவனிக்க வேண்டும். எக்காலத்திலும் இதில் தினந்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் வாத்தியகோஷம் நகராவுடன் வாசிக்கப்படுகிறது அஷ்டலக்ஷ்மி மண்டபம் சித்திர வேலைப் பாடில் மிகவும கீர்த்திபெற்றது. இந்த அஷ்ட சக்தி மண்டபம் 30 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ளது. இருபுறத்திலும் நிறுத்தியிருக்கும் தூண்களில் நிறுவப்பட்டிருக்கும்

அஷ்ட லக்ஷ்மிகளின் உருவங்களால் இந்த மண்டபம் இந்தப் பெயர் பெறலாயிற்று. ஒவ்வொரு கடவுளுக்கும் பக்கத்தில் அந்தக் கடவுளின் சக்தி ரூபமான அம்பாளும் கூடச் சேர்ந்து ஒவ்வொரு இடத்திலும பூஜிப்போர்களுக்குக் காட்சிதருகிறார்கள். இந்தச் சக்திரூபமான தேவதைகள் கோவில் பூஜாவிஷயங்களில் கடவுளுக்குப் பின்னதாகவே மதிக்கப்படுகிறார்கள். இருப்பினும் ஞானமார்க்கத்தில் ஆராய்ந்து பார்க்குமிடத்து உலகத்துக்கும் கடவுளுக்கும் ஒற்றுமை இணைக்க இவவித சக்தி ரூபமான தேவதைகள் இல்லாது கடவுளால் நேரில் ஒன்றும் செய்யமுடியாது என்பது நன்கு விளங்கும். இந்துமதக் கொள்கையில் கடவுளாகக் கொண்டாடப்படும் ஒவ்வொரு தேவதையையும் அந்தத் தேவதையின் ஆத்ம சக்தியான அம்பாளையும் பக்கத்தில் வைத்தே சிவனும் சக்தியாகிய பார்வதி போலவும், விஷ்ணு லக்ஷ்மி போலவும், பிர்ம்மா சாஸ்வதிபோலவும் சேர்த்துச் சேர்த்தே மதிக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டும் வருகிறார்கள்.

**அஷ்ட சக்தி மண்டபம்**

இந்தக் கோவில்கள் தென் இந்தியாவில் கட்டப்பட்ட காலங்களில், எஙகேயும் சக்தி பூஜை ப்ரபல்யமாகவிருந்தது. ஆனது பற்றியே இக்கோவில்களிலும் கடவுளின் சக்தி ரூபமான அவதாரமே மேலாகப் பாராட்டப்பட்டு எல்லாவித உருவச் சிலைகளிலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. மத்திய காலத்துக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு நமது கோவிலும் அமைக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆதலினாலேதான் கோவிலுக்குள் முதல் முதல் நுழைய ஏற்படும் பாதையில் இவ்வளவு சக்திரூபங்கள் ஏற்பட்டனவாகும். இந்த அஷ்ட லக்ஷ்மிகள் மாஹேஸ்வரி, பிராம்மி, நாராயணி ஐந்திரி, கௌமாரி, வாராஹி, நாரசிம்ஹி, அபராஜிதா என்று

பெயர் பெற்றவர்கள். தங்களுள் யாரையும் உபாசிப்போர் களை ரக்ஷித்துக் காக்கும் சக்தியுள்ள தேவதைகள். முக்தியும் அளிக்க வல்லமை உள்ளவர்கள். இவர்களில் ஒவ்வொரு தேவதையும் அத்தேவதைக் கேற்பட்ட யந்திரத்தால் உபாசிக்கப்பட வேண்டியவர். அவ்வாறு ஐந்து தேவதைகளின் யந்திரங்கள் இந்த மண்டபத்தின் மேலே வரையப்பட்டிருக்கின்றன. யந்திரம் என்பது தங்கம் வெள்ளி, முதலிய உலோகத்தகடுகளில் வரையப்படும் அல்லது காகிதத்திலோ எழுதி வைக்கப்படும் ஒவ்வொரு தேவதைக்கும் ஏற்பட்ட சில அக்ஷரங்களின் தொகுதியாகும். இந்த யந்திரங்கள் அதை அணிவோர்களுக்குச் சகலவித பாக்கிய சம்பத்துகளும் கொடுத்துப் பின்னர் முக்தியும் அளிக்கக்கூடிய வல்லமையுள்ளனவாகும். இந்த யந்திரங்களைச் சிலர் தங்கம், பொன், வெள்ளி, தாம்பிரம் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட தாயத்துக்களில் வைத்தும் அணிவதுண்டு. இவ்வித யந்திரங்களில் முக்கியமானது ஸ்ரீ சக்ரம் என்று சொல்லுகிறார்கள். இந்த மண்டபத்திலுள்ள ஒவ்வொரு சக்தி ரூபத்தின் நான்குகைகளில் இரண்டு பாசாங்குசங்களைப் பிடித்துக்கொண்டும் இரண்டு கைகள் 'அபய' 'வராதா' முத்திரைகளைக் காண்பித்துக் கொண்டும் இருக்கின்றன. மண்டபத்தின் அடியிலுள்ள பிறைபோன்ற இடுக்குகளில் மீனாக்ஷிசுந்தரேஸ்வாரின் அவதாரக் கதையின் முக்கிய அம்சங்களைச் சுதையினால் செய்யப்பட்ட உருவச்சிலைகளால் அலங்கரித்திருக்கிறார்கள்; மண்டபத்தினுள் நுழைந்ததும் அண்ணாந்து பார்ப்பவர், விதானத்தின் இருமருங்கிலும் உள்ள வர்ணம் தீட்டப்பெற்ற அழகிய சுதை உருவங்களைக் கொண்டு அரிய காக்ஷியைக் காண்பர். மீனாக்ஷியின் ஜனனம், குழந்தைப் பருவம், திக்விஜ

ஸ்ரீ சக்ரம்

யம், விவாகம், அரசாட்சி முதலிய காட்சிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் சுண்ணாம்புக்கல் உருவங்களில் முக்கியமானது மீனாக்ஷியின் ஜனனமே. பாண்டிய மன்னனான மலையத்வஜ பாண்டியன் புத்ரகாமேஷ்டி யாகஞ்செய்து யாககுண்டத்திலிருந்து மூன்று வயது சிசுவாக மூன்று ஸ்தனங்களுடன் அவதரித்த சக்தி ரூபமாகிய மீனாக்ஷி யம்மனைக் குழந்தையாகப் பெற்றான். மீனாக்ஷி தனது நாயகனைப் பார்க்கும் சமயத்தில் மூன்றாவது ஸ்தனம் மறைந்துவிடும் என்ற அசரீரியைக்கேட்டு ஆறுதல் அடைந்தான். அரசனுக்குப் புத்திரன் புத்திரி இரண்டும் மீனாக்ஷியம்மையே ஆனபடியால் அவளே புராதன வழக்கப்படி திக்விஜயத்திற்குப் புறப்பட்டனள். இடையில் எல்லா அரசர்களையும் வென்று கடைசியில் கைலாசகிரிக்குச்சென்றாள். சோமசுந்தரக்கடவுளே தன்னை எதிர்த்து வர அக்கடவுளைக் கண்டதும் தன்னுடைய மூன்றாவது ஸ்தனம் மறைந்து போயிற்று. அவரே தனக்கு ஏற்பட்ட நாயகன் என்று தெரிந்து நாணம் அடைந்தாள். விவாகக் காட்சியும் இந்த மண்டபத்தில் ஒரு பக்கம் சுண்ணாம்பினால் அமைக்கப்பட்டிருக்கிறது. சோமசுந்தரர் கொலுவிருதகலும் உக்ரபாண்டியனுடைய மகுடாபிஷேகமும் காட்டப்பட்டிருக்கின்றன. மதுரை மான்மியமாகிய திருவிளையாடற் புராணக் கதைகளின் முக்கிய அம்சங்களை இந்த மண்டபம் விளக்கிக் காட்டுவதால் இந்த மண்டபமே இந்தக் கோவிலின் சங்கிரகம் போல் விளங்குகிறது. புராணங்களை நன்குணர்ந்த ஒவ்வொருவரும் வெகுநேரம் நின்று இந்தக் காட்சிகளைப் பாராமல் வேறு இடததிற்குச் செல்லமாட்டார்.

அஷ்ட லக்ஷ்மி மண்டபத்தைக் கடந்து செல்லுமுன், அதன் வலது புறத்தில் விநாயகரையும் இடது புறத்தில் சுப்ரமணியரையும் காணலாம். இந்திய வாசிகளான நமக்கோ விக்

னேசுவரர் என்று அழைக்கப்படும் இவர் பெயருக்குகந்தவாறு எல்லா விக்னங்களையும் விலக்குபவராய் நம்முடைய தேவதைகளில் மிகவும் அதிகமாக பாராட்டப்பட்டவரானபடியால் அவருடைய அவதாரத்திற்கு அநேக கதைகளும வழங்கி வருகின்றன.

கணேசர்

ஞானத்துக்கு விநாயகரை அதிஷ்டான தேவதையாகவும் பாராட்டுவது உண்டு. ஏனெனில் மகாபாரத்தை எழுதினது அவர்தான். கணேசனை விவாகம் செய்துகொள்ளும்படி பெற்றோர்கள் கேட்டபொழுது தன் தாயாகிய பார்வதியைப் போல் அழகும், சக்தியும், ஞானமும உள்ள பெண் கிடைக்குமானால் தான் விவாகம் செய்துகொள்ளுவதாகத் தெரிவித்ததாக ஒரு புராணக்கதை உண்டு. சகல உலகத்திற்கும் மாதாவாகிய பார்வதிதேவியைப்போல் வேறு ஒரு மடந்தையும் இவ்வுலகில் இருக்கமுடியுமா? அப்படி இருக்கும் பெண் ஒருத்தியைத் தேடிப்பிடிக்க கணேசனுக்குப் பெற்றோர்கள் அனுமதித்தார்கள். அவ்வாறே கணேசனும் முச்சந்திகள் தோறும் தான்கொண்ட எண்ணம்போல் ஒரு பெண்ணைத் தேடி நிற்கிறார். இன்னும் கிடைக்கவில்லை. மீனாக்ஷி கோவிலிலோ கணேசர் தனது மடியில் உட்கார்ந்திருக்கும் ஒரு மடந்தையைத் தனக்குகந்த பெண்ணா என்று பரீட்சை செய்கிறார் போலும். முற்காலப் புராணதில்'இவ்வாறு இருக்கும் கணபதியை மகா கணபதி யென்று கூறப்பட்டிருக்கிறது.

வியாச முனிவர் தான் மகாபாரதம் சொல்லும்போது அதை எழுதுவதற்குச் சரியானவர் ஒருவரும் கிடைக்காமல் வருந்தினதாகவும், அவரைக் கடவுளே கணபதியிடம் தன் குறையைத் தெரிவிக்கும்படி உத்திரவிட்டதாகவும் ஒரு கதை உண்டு. அப்படியே முனிவர் எவ்விடத்திலும் தயங்காமல் சொன்னால் கணபதி தான் எழுதுவதாக வியாச

ரிடம் ஒப்புக்கொண்டு எழுதினர். வியாச பகவானும் பதிலுக்குக் கணபதி தனக்குத் தெரியாத இடத்தில் எழுதாமல் நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே தனக்குத் தயங்கும் சமயத்தில் கஷ்டமான வாக்கியங்களைப் பிரயோகம் செய்து கணபதியை அர்த்தம் செய்யத் தயங்கும்படி செய்துவிட்டு அதற்குள் மேற்கொண்ட பாகத்தைத் தயார் செய்துகொண்டு இடைவிடாது மகாபாரதத்தை இருவரும் எழுதி முடித்தார்கள். இந்த உருவச்சிலைக்குப் பின் ஒரு அழகான சித்திரப் படம் வரையப்பட்டிருக்கிறது. கஜமுகாசுரன் என்ற ஒரு அசுரனேடு கணபதி யுத்தம் புரிவதை இது காட்டுகிறது. அந்த அசுரன் கடவுளினலாவது மனிதனலாவது வெற்றிபெற முடியாதவரம் பெற்றவன். கணேசரோ கடவுளுக்கும் மனிதனுக்கும் ஒருங்கே சமமானவரானபடியால அந்த அசுரன்மீது வெற்றி பெற்ருர். முதலில் இவருடைய யுத்தத்தில் கணேசரின் வலது பக்கமுள்ள தந்தம் ஒடிந்து விட்டது. அதையே கணேசர் எடுத்துக்கொணடு அதை அந்த அசுரன்மீது விட்டெறிந்தார். அது அவனமீது படவும் அந்த அசுரன் ஒரு எலியாக மாறினன. அந்த எலி ரூபமான அசுரனைக் கணேசர் தனக்கு வாகனமாக வைததுக் கொண்டார்.

கணேசருக்கு இடது பக்கத்தில் பரமசிவனின் இரண்டாவது புதல்வனன சுப்பிரமணியக கடவுளின சிலை இருக்கிறது. முருகன் ஆறுமுகங்களுடனும் பன்னிரு கைகளுடனும் மயில வாகனததில் அமர்ந்தவராக இந்தச்சிலை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவர் ஆறு தாயார்களால் பரிபாலிக்கப் பட்டு வந்தபடியால் இவருக்கு ஆறுமுகம ஏற்பட்டது. ஷண்முகனென்றும் இவருக்குப் பெயர். புராணஙகளில சிவனுடைய பராககிரமத்தால் ஜனித்த புதல்வன் என்றும்

சுப்பிரமணியர்

தாரகாசுரனையும் சூரபத்மனையும் வெல்லுவதற்கென்று உற்பத்தியானவரென்றும் கூறப்படுகிறது. மகாகவி காளிதாஸரின் ஒரு முக்கியமான காவ்யம் குமாரசம்பவம் என்பது சுப்பிரமணியக் கடவுளின் ஜீவிய சரித்திரமேதான். சுப்பிரமணியக் கடவுள் தென் இந்தியாவின் பிரதானமான கடவுள். அந்தச் சுப்பிரமணிய சுவாமி சிலைக்குப் பின்னும் விநாயகருக்குப் பின் எழுதிய சித்திரம்போல ஒரு அழகிய சித்திரத்தைக் காணலாம்.

இந்த வாசற்படிக்கு அடுத்தாற்போல் உட்பக்கம் இருப்பதுதான் மீனாக்ஷி நாயக்கன் மண்டபம். இது 160 அடி நீளமுள்ளது. நாயக்க மன்னர்களில் ஒருவருக்கு மந்திரியாக விருந்த மீனாக்ஷி நாயக்கன் என்ற ஒருவரால் இந்த மண்டபம் கட்டுவிக்கப்பட்டது.

அஷ்டசக்தி மண்டபத்திற்கும் மீனாக்ஷிநாயக்கன் மண்டபத்திற்கும் இடையே வேடன் வேடச்சியின் உயிர்த்தோற்றம்போன்ற இரண்டு கற்சிலைகள் இருக்கின்றன. திருவிளையாடற் புராணத்தில் கூறியபடி வேட வம்சத்தில் பிறந்த மீனாக்ஷியைப் பரமசிவன் வேட உருவத்துடன் வந்து மணந்து கொண்ட கதையை இச்சிலைகள் குறிப்பிடுகின்றன. இந்த மண்டபம ஆறு வரிசையாக அமைக்கப்பட்ட கற்றூண்களால தாங்கப்பட்ட ஐந்து பிரிவுகளாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தூண்கள் உயர அகலங்களில் ஒன்றுபோல் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்தாலும் கல்வெட்டுகளில் வேறு பட்டிருக்கின்றன. சில தூண்களின் உச்சிப் பக்கத்தில் வாழைப்பூ வளைவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கோவிலுக்குள் உள்ள மண்டபங்களில் இது ஒன்றுதான் பெரி

மீனாக்ஷி நாயக்கன் மண்டபம்

தாகவும் நல்ல காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த மண்டபத்தில்தான் சதா ஜனப்புழக்கமும் அதிகம். ஏனெனில் இதன் இருபக்கங்களிலும் மத்தியிலும் ஏராளமான கடைகள் இருக்கின்றன. *

மீனாக்ஷி மண்டபத்திற்கும் முதலி மண்டபம் என்று சொல்லப்பட்ட உள் மண்டபத்திற்கும் இடையே ஒவ்வொரு தினமும் இரவில் ஏற்றப்படுகிற நூற்றுக்கணக்கான விளக்குகள் அடங்கிய பெரிய திருவாச்சியிருக்கிறது. இரவில் எல்லா விளக்குகளும் ஏற்றியபின் இந்தக் காட்சி அழகாகவே இருக்கும். வெகுதூரத்திலிருந்து இந்தத் தீபவரிசைகள் நன்கு தெரியும். இந்தத் திருவாச்சியின் பித்தளைக் கவசமானது முற்காலத்தில் சிவகெங்கை ஜமீன்தார் ஒருவரால் கோவிலுக்குக் கொடுக்கப்பட்டு அதிலுள்ள விளக்குகளைத் தினந்தோறும் ஏற்றிவரக் கிராமங்களும் அவரால் கோவிலுக்கு விடப்பட்டிருக்கின்றன.

இந்த விளக்கு உள்ள வாசலின் வழியே உள்ளே சென்றதும் இருக்கும் மண்டபம் இருள் மண்டபம் என்று பெயர். இதற்கு முதலி மண்டபம் என்று வேறு பெயரும் உண்டு. சிற்பசாஸ்திரம் அப்பியசிப்போருக்கு இந்திய வேலைக்காரர்களின் வேலைத் திறமையை இந்த மண்டபம் நன்கு விளக்கும். இந்த மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஆறு சிலைகளும் வெகு அழகானவையாக இருக்கின்றன. அவைகள்

---

* கடைகளுக்காக வாடகைக்கு விட்டுக் கோவிலுக்கு வரும்படி சம்பாதிப்பதில் யாருக்கும வருத்தமில்லை. ஆயினும் இப்படி விடப்பட்ட சில கடைகளால் சில உருவச்சிலைகள் மறைக்கப்பட்டு மண்டபததின இயற்கையான அழகைச் சில இடங்களில் இக் கடைகள் கெடுக்கின்றன.

முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை; மகா விஷ்ணுவின் மோஹினி உருவச்சிலையும், பரமசிவனின் பிக்ஷாடனர் உருவச்சிலையும் நமது மனதைக் கவரும். மதுரை ஸ்தல புராணத்தில் தாருகாவனத்தில தவம் இயற்றிய ரிஷிபத்னிகளின் பதிவ்விரத்திய கர்வத்தைப் பங்கப்படுத்த பரமசிவன் இவ்வாறு நிர்வாணமான பிக்ஷாடனர் உருவத்தை எடுத்தாரென்று கூறப்படுகிறது. அதே காலததில் மகா விஷ்ணுவும் அந்த ரிஷிகளின் தபசைக் கெடுக்க மோஹினியின் உருவம் எடுத்துக்கொண்டார். இந்த மோஹினியின் கற்சிலை பலவிதங்களில் விசித்திரமானது. ஒரே கல்லில் செதுக்கப்பட்டு இந்தச் சிலை நான்கு அடி உயரம் இருக்கிறது. ஸ்திரீயின் உருவத்தையும் அழகையும் சிற்பசாஸ்திரப்படி எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்ட முடியுமோ அவ்வளவு

**முதலி மண்டபம்**

அழகும் பூரணமாக இந்தச் சிலையில் அமைந்திருக்கின்றன. இந்தியாவில் இருக்கும்சிலைகளில் இவ்வளவு நுட்பமான ஒவ்வொரு அங்கம் அவயவங்களின் பருமன் முதலியவற்றை நன்கு எடுத்துக் காட்டக்கூடிய வேலைப்பாடுள்ள சிலை அநேகமாய் வேறு இல்லை என்றே சொல்லலாம். சிலையின் உருவமோ வெட்கம் நாணம் எல்லாம துறந்து ஆடவர்கள் தன்னைக் கண்டவுடன் மோகம் கொள்ளக்கூடிய அவ்வளவு ஆசையூட்டுமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. முகததிலும காமவெறிகொண்ட பெண்ணின் சின்னங்கள நனகு காணப்படுகின்றன. இந்தச் சிலையைத் தயாரிதத சிற்பியும் தன் கை வேலைபாட்டினால் ஒவ்வொரு அவயவத்தையும எவ்வளவு அழகுபடுத்தக் கூடுமோ அவ்வளவும் செய்து தன் உள்ளத்தைத் திருப்தி செய்து கொண்டான்போலும்! அந்தச் சிற்பி இந்த உருவச்சிலையின் அரைக்குக் கீழ் நழுவியுள்ள ஆடையின் மடிப்புக்களையும்



மோஹினி.


விளக்கிக் காட்டியிருக்கிறான். மோஹினியின் உருவத்தில் செதுக்கப்பட்ட ஆபரணங்களின் வேலைப்பாடும், மாலைகளின் அழகும் வெகு மனோரம்மியமாக விருக்கிறது. நாட்டிய சாஸ்திரததில் தேவதாசியின் உருவத்தை வர்ணித்து எழுதியிருக்கிற ஒவ்வொரு லக்ஷணமும் இந்த மோஹினிச் சிலையில் சிறபியால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவள் ரோஜாப்புஷ்பம் போன்ற நிறமுள்ளவளாகவும், உருவம் உருண்டு திரண்டு மழமழப்பாகவும், மார்பும் ஸ்தனங்களும் எடுப்பாகவும், பார்த்தவுடன் மனதைக்கவரும் ரூபலாவண்யத்துடனும், வட்டம் போன்று ஒப்பியுள்ள ஸ்தனங்களுடனும், ஆசை அல்லது விசுவாசம் கண், முகம் முதலியவற்றிலிருந்து வழிந்து வருவதுபோலவும், பூமியில் கால் பாவுவதே கண்ணுக்குத் தெரியாதவணணம் நடையும், ஒடிந்துவிழும் குச்சிபோன்ற ஆகிருதியும், அன்னத்தைப்போல நடையும், தங்க ஜரிகையில் நெய்யப்பட்ட பட்டாடை உடுத்தியவளாகவும், சகலாபரணங்களையும் அணிந்துள்ளவளாகவும் இருத்தல் வேண்டும் என்று சாஸ்திரத்திலிருந்து தெரிகிறது போலவே இருப்பதைக் காணலாம்.

இத்துடன் சிற்பி நிற்கவில்லை. மோஹினியைப் பின் தொடர்ந்து கொண்டு தன் தவததையெலலாம் காற்றில் விட்டு விட்டுத் தூக்கின தலையோடும், கைகளைப் பிசைந்துகொண்டும் கண்களில் காம வெறிபிடித்துப் பிரமை கொண்டவன் போல ஓடித் தாததிவரும் ஒரு ரிஷியையும், சிற்பி அதே கல்லில் செதுககியிருக்கிறான். பரமசிவனைப் பிக்ஷாடன ரூபத்தில் வெகு அழகுள்ள முகத்தவராகச் சிற்பி காட்டியிருக்கிறான். மோஹினிச் சிலைக்கு எதிரில் பிக்ஷாடனரின் சிலைக்குக் கிழக்கே, கற்பின் உருவெடுத்தாலனைய அனுசூயா தேவியின் சிலை இருக்கிறது. ஒளித்து மறைக்கவேண்டிய விஷயத்தைக் கூட

வெளிக்குக்காட்ட வேண்டும் என்ற சிற்பியின் கருத்து இவ்விடம் விளங்குகிறது. இந்தச் சிலையைப்பற்றிய கதையை உணர்ந்தால்தான் இதனுடைய தாத்பர்யம் நன்கு விளங்கும். அஃதாவது ஓர் சமயம் நாரதர் தன் கலகதொழிலை முன்னிட்டுத் திருமூர்த்திகளின் தேவிகளாய பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரிடமும் போய் "சகல உலகங்களிலும் கற்பிற் சிறந்த காரிகை அனுசூயை தான்" என்று சொன்னார். திருமூர்த்திகளின் தேவிகள், அம்மூர்த்திகளிடம் தெரிவித்து அவளுடைய கற்பைப் பரிசோதிக்கத் தூண்ட, அவ்வாறே அவர்கள் இணங்கி உருவங்களை|மாற்றிக் கொண்டு அனுசூயையிடம் பிக்ஷை கேட்டார்கள். அந்த அம்மாளும் இணங்கிப் பிக்ஷை இடச் சம்மதித்தபோது தங்களுக்கு அந்த அம்மாள் நிர்வாணமாக அன்னமிட்டால்தான் தாங்கள் அருந்தக் கூடுமென்று சொன்னார்கள். அதைக் கேட்ட அம்மாளுடைய மனது மிகவும் தவித்தது. இச் சமயம் அவள் கற்பே அவளைக் காப்பாற்றி அவளது உதவிக்கு ஓடி வந்தது. கற்பின் மகிமையினால் மும்மூர்த்திகளையும் சிசுக்களாக்கி அவர்களுக்குப் பாலூட்டினாள். அனுசூயை சிலைக்கு எதிரிலும் பக்கத்திலும் இருக்கும் இரண்டு சிலைகளும் உருவம் மாறி வந்த பிரும்மா விஷ்ணுவின் உருவங்கள் என்று கருதலாம். பிக்ஷாடனர் உருவச்சிலைக்கு முன் இருக்கும் சிலை இந்த மண்டபத்தைக் கட்டுவித்த முதலியாரின் உருவச்சிலை என்று சொல்லப்படுகிறது.

அனசூயா
தேவியின் கற்பு

இந்த இருள் மண்டபத்தைத் தாண்டியவுடன் பொற்றாமரையை அடைகிறோம். இதில்தான இந்திரனுடைய யானை ஐராவதம் சாபவிமோசனம பெற்றது எனச் சொல்லப்படுகிறது. இந்தப் பொற்றாமரையில் இந்திரன் ஸ்நானம்



பிக்ஷாடனர்.



அனுசூயா.

செய்து பிரமஹத்தித தோஷத்தை நிவர்த்தி செய்துகொண்டான். இப்படிப்பட்ட தடாகத்தை இந்துக்கள் கொண்டாடுவதில் ஆச்சரியம் ஏதேனும் உளதோ? இந்தத் தடாகத்தைப் பற்றி அனேக கதைகள் வழங்குகின்றன. ஒரு நாரை இந்தத்தடாகத்தின் கரையில் வசித்து வந்ததாகவும், அது இந்தத் தடாகததிலிலுள்ள மீன் தவளை முதலிய

**பொற்றாமரை**

வற்றை ஆகாரமாகத் தின்ன இஷ்டமில்லாததால் பசியால் வருந்தி இறக்கும் தருவாயிலிருந்தது. அச்சமயம் கடவுள் பிரசன்னமாகி அதற்கு முக்தி அளித்து, அதன் வேண்டுகோளின்படி தடாகத்தில் மீன் தவளை ஒன்றும் இல்லாமல் போகக்கடவது என்ற வரத்தையும் கொடுத்தாரென்றும் ஒரு கதை இருக்கிறது. அவ்வண்ணமே இப்பொழுதுகூட இக் குளத்தில் தவளை, மீன் ஏதுமில்லை. இந்தத் தடாகத்தில் வளர்ந்த பொன் போன்ற தாமரை மலர்களை எடுத்து, இந்திரன் கடவுளுக்கு பூஜை செய்தபடியால் இத்தடாகத்திற்கு பொற்றாமரை (அதாவது ஸ்வர்ண புஷ்கரணி) என்ற பெயரும் ஏற்படலாயிற்று. இந்தத் தடாகத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் இந்துக்கள் மத சம்பந்தமான கிரியைகளை இன்றும் செய்வதைக் காணலாம்.

இந்தக் குளத்தைச் சுற்றியுள்ள சுவர்களில், வடக்குச் சுவற்றிலும் கிழக்குச் சுவற்றிலும் திருவிளையாடற் புராணக் கதைகள் எல்லாம் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சித்திரங்கள் அழிய அழிய அடிக்கடி புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. திருவிளையாடற்புராணம் என்பது வடமொழியில் ஹாலாஸ்யமாகாத்மியம் என்பதின் மொழிபெயர்ப்பேயாகும். இந்தக்கோவிலில் வேலைசெய்த சிற்பிகளுக்கும், சித்திர வேலைக்காரர்களுக்கும் இந்தப் புராணமே ஆதா

ரம். பொற்றாமரையைச சுற்றி உள்ள வடக்குச் சுவரிலும் கிழக்குச் சுவரிலும் இந்தப் புராணத்திலுள்ள அறுபத்தி நான்கு லீலைகளும் வெகு அழகாகவும், புராணத்திற்குப் பொருத்தமானதாகவும்வரையப்பட்டிருக்

சித்திரங்கள்

கின்றன. முதலில் இந்திரனுடைய பிரும்ம ஹத்தியின் பழிதீர்த்த சித்திரம் வரையப் பட்டுளது. முதலில் இந்திரன் கொலுவில் அமர்ந்திருப்பதும், அவனுடைய கொலுமண்டபத்தில் ஊர்வசி ரம்பை நர்த்தனம் செய்வதும், பிரஹஸ்பதியின் வருகையும், விருத்திராசுர னுடைய கொலையும், இந்திரனைப் பின்பற்றிவரும் அந்தப் பிராமண அசுரனின் ஆவியும வெகு அழகாக எழுதப்பட் டிருக்கிறன. புராணக்கதைகளை நன்கு உணர்ந்தவர்களுக்கு இந்தச்சித்திரங்கள் ஒரு விருந்தே ஆகும்.

இந்த மண்டபத்தின் கிழக்குத் தாழ்வாரத்திலிருந்து நோக்கின் இந்தக் கோவிலின் சகல கோபுரங்களின் வேலைப் பாடுகளையும் நன்கு அறியலாம். குளத்தின் தென்வரி சையில் வேதம கற்றுணர்ந்த பிராமணர்கள் தங்கள் சீடர்க ளுடன் தர்க்கம் செய்வதைத தினந்தோறும பார்க்கலாம். இதை நோககும்போது நம புராதன இந்தியாவின் பெருமை ஒருவாறு வெளிவருகிறது. இந்தக் குளத்தின மேறகுக் கரையில் கறுப்புச் சலவைக் கல்லால் குளத்தில் நீட்டி நிற்கும் ஒரு மச்சுப்பரப்பும் (பால்கனியும்) ஒரு வாயில் மண்டபமும இருககின்றன. இவை இரண்டும் ராணி மங்கம் மாளால கட்டுவிக்கப்பட்டவை என்று சொல்லப்படுகிறது. வாயில் மணடபததில் காக்கைக்கு அன்னமிடுகிறார்கள். மச்சுப் பரப்பின் மேலதளததில் மங்கம்மாள், சொக்கனாத நாயக்கன், திருமலை நாயக்கரின் பெயர்பெற்ற தளகர்ததன தளவாய் ராமய்யன் இவர்கள் மூவரின் உருவங்கள் வரையப்பட்டு

இருக்கின்றன. மங்கம்மாள் விதவையா யிருந்தபோதிலும் சிறந்த ஆடை ஆபரணங்களால் அலஙகரிக்கப்பட்டிருக்கிறாள். அவள் இம்மாதிரி இருந்தது அநேகம் கட்டுக் கதைகளுக்கு இலக்காக யிருக்கிறது.

இந்தக் குளத்தை விட்டு அப்பால் சென்றால் "கிளிக் கூட்டு மண்டபம்" என்று சொல்லப்பட்ட இடத்திற்கு நாம் வருகிறோம். இவ்விடம் அநேகவிதமான கிளிகள் கூண்டுகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தின் தூண்களில் அநேகம் யாளிகளின் உருவங்களும், பஞ்சபாண்டவர்களின் உருவங்களும செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரே கருங்கல்லால் செதுக்கப்பட்டிருப்பது ஒரு ஆச்சரியமே! ஏராளமாகக் கொட்டைமுத்து இந்த மண்டபத்திற்குக் கொணர்ந்து விளக்கெண்ணெய்யாக எடுத்ததால் இந்த மண்டபத்திற்கு "கொட்டைமுத்து மண்டபம்" என்றும் பெயர் வழங்குகிறது.

கிளிக்கூட்டு மண்டபம்

புருஷா மிருக உருவச்சிலை இந்த மண்டபத்தில் காணப்படுவதால், இம்மண்டபத்திற்கு "புருஷா மிருக மண்டபம்" என்ற பெயரும் உண்டு. எல்லாப் பெயரிலும் மிகவும் பொருத்தமான பெயர் "பஞ்சபாண்டவ மண்டபம்" என்பதுதான். துரெளபதி, பஞ்ச பாண்டவர்களின் சிலைகள் வெகு நேர்த்தியாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. சிவன் கோவிலில் பஞ்ச பாண்டவரின் சிலைகள் எதற்காக என்று சிலர் வினவுகிறார்கள். சின்ன மொட்டைக் கோபுரத்திற்குத் தென் மேற்கில் முற்காலத்திலிருந்த கரியமாணிக்கப் பெருமாள் கோவிலில் இந்தத் தூண்கள் இருந்தனவென்றும் அந்தக் கோவில் எடுபட்டுப்போனபொழுது இந்தத் தூண்கள்

பாண்டவசிலைகள்

இவ்விடம் கொண்டுவந்து வைக்கப்பட்டனவென்றும் கோயில் பட்டர்கள் சொல்லுகிறார்கள. இது தகுந்த முகாந்திரமாகவே தெரிகிறது. வேறு எக்காரணமும் பொருத்தமாக இல்லை. இடத்திற்குத தக்கபடியே தூண்கள் அமைந்திருக்கின்றன. அல்லாமலும் பஞ்சவாண்டவர்கள் தென் இந்தியாவிற்கு வந்து அநேக இடங்களில் தங்கினார்கள் என்றும் சொல்வதற்கு ஏராளமான முகாந்திரங்கள இருக்கின்றன. ஐவர்மலையில் பாண்டவர்கள் சிலகாலம் தங்கினார்களென்றும் அந்த இடத்தையும் இபபோதும் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள். ஆனை மலையின் மேற்குச் சரிவில் ஐநது குகைகள் போன்ற பள்ளங்கள் இப்போதும் இருக்கின்றன. அவைகளில் பாண்டவர்கள் தங்கினார்கள் என்றும் சொல்லுகிறார்கள். பாண்டவர்கள் மதுரைக்கும் வந்திருக்கக்கூடும். அப்பொழுது அவர்கள் வட இந்தியாவுக்குத திரும்புவதற்குமுன் சுந்தரேஸ்வர ஸ்வாமியைப் பூஜித்துச் சென்றார்கள் என்றும் ஒரு கதை வழங்குகிறது. நாயக்கர் காலத்தில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த யாரோ சிலர் ஐவர்பாண்டவர் என்று சொல்லிக்கொண்டு நாயக்க மன்னர்களுக்கு மிகவும் தொந்திரவு கொடுத்தார்கள் எனச் சரித்திரம் கூறுகிறது.

மண்டபத்திலுள்ள சிலைகளில் பீமனின் சிலையை எளிதில் அறிந்துகொள்ளலாம். அகன்று விசாலமான தனது புஜங்களால் கோவில் முழுவதையும தான் ஒருவனே தூக்குவது போல அவ்வளவு கம்பீரமான தோற்றததுடன் பீமன் சிலை இருக்கிறது. யுதிஷ்டிரரின் சாந்தமான முகத்தை ஒருதரம் கண்டால் நமக்கு வாழ்க்கையின் மீதுள்ள பற்று விட்டு விடும். நமக்குத தெரியாமலே நம் வாயை விட்டுப் பின் வரும் வசனஙகள் வெளியேறுகின்றன. "ஐயா, பண்டைய காலத்துச் சிற்பியே! ரத்தம் சதை இவைகளால் இணைக்கப்

பட்ட இந்த மானிட உடலில் சதா கவலையும் துக்கமும், மகிழ்ச்சியும் மனச் சலனமும் குடிகொண்டு சமயத்திற்கு ஏற்றவாறு முகத்தில் பிரதிபிம்பிக்கும் இந்தக் குணங்களை யெல்லாம் அடக்கி, சாதவீக அமரிக்கையும் ஆத்ம சிந்தை யோடு லயிததுக் கடவுளைத் தியானம் செய்யும் நிலைமையை மட்டும் இவ்வளவு அழகாகக் கல்லில் வெறும் கோட்டினாலும் வேலைப்பாட்டினாலும் இழைத்து இந்தக் கல்லுக்கு மா பெரும் மதிப்பு உண்டாக்கின சிற்பியே! நீர் யார்?" தன் னுடைய "காண்டீபம்" என்ற வில்லைக் கையிலேந்தி வெற்றி மேல் வெற்றி அடைகிற அர்ஜுனனையும் கையில் சவுக் கைப் பிடித்துக்கொண்டு நிற்கும் நகுலனையும் நாம் காண்கி றோம். மற்றொரு தூணில் சகாதேவனுடைய உருவம் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. ஞானத்தின் அவதாரம் போலவே விளங்குகிறான்! இவ்விடம் துரௌபதியின் உருவச்சிலையும் இருக்கிறது. இச்சிலைகளை நோக்குவோர், மஹாபாரதத்தில் விவரிக்கிறபடி பஞ்சபாண்டவர் குணாதிசயங்களை நன்கு அறி வர். இந்தச் சிலைக்கு எதிரில், அவயவங்கள் நன்கு அமைக் கப்பட்ட சரீரத்துடன் கூடிய போர்வீரனின் சிலை இந்தச் சிலையின் தைரியமும் பலமும ஒருங்கே அமைந்துள்ளதான உருவம் காணப்படுகிறது. மீசை நீணடு ஒரு விநோதமாக அமைந்திருக்கிறது. இவரது இடது புஜத்தில் தொங்கும் கொம்பு நம் கவனத்தைக் கவருகிறது. கோவில் பட்டர்கள் இந்த உருவம் அர்ஜுனனின் சண்டாள உருவச்சிலை என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றிய கதை பின்வருவாறு:—

ஓர் சமயம் அர்ஜுனனின் ஒரு காட்டுப்பன்றியை வேட்டையாடிச் சென்றான். அப்பொழுது அந்தப் பன்றி ஓர் ரிஷியிடம் அடைக்கலம் புகுந்தது. இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டு அர்ஜுனன் பன்றியின் மீது பாணத்தை

விட்டு அதைக் கொன்ருன். உடனே அந்த ரிஷி கோபங் கொண்டு "சண்டாளனுகக் கடவது" என்று அர்ஜுனனைச் சபித்தார். அந்தத் தூணிலேயே அக்கதையின் மற்ற விவரங் களை நாம் இப்போதும் காண்கிறேம். வாலி, சுக்ரீவர்களின் சிலைகளும் தூண்களில் காணப்படுகின்றன. இந்தப் பிரம் மாண்டத் தூண்களின உச்சியில் தாங்குகற்களாக வைத் திருக்கும் சிம்மங்களின் உருவங்களும் வெகு நேர்த்தியாக இருக்கின்றன. அவைகள் அப்படியே பாய்வதுபோல் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மண்டபத்தின் கீழ் ஒரு முகம்மதிய சமாதி யிருந்ததெனறும் அது ஆடி வீதியில் தற்சமயம் மின்சார இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இடத்தில் இருக்கிற தென்றும் ஒரு கதை வழங்குகிறது.

---

## அத்தியாயம் 4

மீனுக்ஷியம்மன் சன்னதிக்கு நுழையும் வாசற்படிக்கு இருபுறமும், வழக்கம்போல் விநாயக சுப்பிரமணிய சுவாமி களின் சிறு கோவில்கள் இருக்கின்றன. இதற்குத் தெற்கே பெண்கள் கோலாட்டம் போடுவதற்கு உபயோகப்படும் ஒரு மண்டபம் இருக்கிறது. இது அழகான கறுப்புச் சலவைக் கல்லால் செய்யப்பட்ட தூண்களை உடையது.

வாசற் படியைக் கடந்து உட் சென்றவுடன் அம்பாள் சன்னதி வாசலில் இரு பக்கமுமுள்ள துவார பாலகர்களை நாம் காண்கிறேம். இந்தத் துவாரபாலகர்கள் கோர ரூபங் களுடனும் பயங்கரமான கண்களுடனும் நிற்கிருர்கள். வாசற் கதவுகள் இரண்டும் எப்போதும் திறந்து வைக்கப் பட்டிருக்கும்.

மீனாக்ஷியம்மன் சன்னதி என்று சொல்லப்பட்ட உட்சன்னதியானது மூன்று மண்டபங்களால் சூழப்பட்டது. அதில் வெளியிலுள்ள மணடபத்தில் சில அடிகள் தெற்கில் திருமலை நாயக்கருடையவும் அவர் இரு மனைவிகளுடையவும் சிலைகள் காணப்படுகின்றன. மற்றொரு கோடியில், இச் சிலைகளின் எதிரில் இரண்டு அழகான பெண்களால் காக்கப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கிறது. இதைக் கொலுமண்டபம் என்று சொல்லுவார்கள். அவர்களின் அழகான சரீராகிருதியும் குறுகிய இடைகளும் கண்களுக்கு வெகு ரம்மியமாக விருக்கின்றன. ஒவ்வொருவரின் தலைமயிரும் முடிச்சிட்டு விடப்பட்டிருக்கிறது. இதுவும் நேர்த்தியான காட்சி. இந்த மண்டபத்தைச்
அம்மன் சன்னதி சுற்றிவந்தபின் ஆகம சாஸ்திரங்களில்
மகாமண்டபம் என்று சொல்லப்பட்ட
அடுத்த மண்டபத்திற்குள் போகிறோம். எவ்வாறு பொற்றாமரைக்கரையைச் சுற்றிலும் உள்ள சுவர்களில் சிவபெருமானின் திருவிளையாடல்கள் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கின்றனவோ அதே போன்று இம் மண்டபத்தின் சுவற்றிலும், அறுபத்திமூன்று நாயன்மார்களின் ஜீவிய சரித்திரம் நன்கு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும் சாத்வீகமாகப் போய்க்கொண்டிருக்கும் சைவமதம், முன்பு ஒருக்கால் ஜைனமதத்தாரிடம் மிக்க விரோதப்பானமைகொண்டு, அவர்களுக்கிட்ட கொடிய தண்டனைகளையும் சித்தரித்துக் காட்டியிருப்பது வருந்தத் தக்கதே! இவைபோதாவென்று இவைகளை உற்சவகாலங்களில் கலந்து காண்பிப்பது மிகவும் வருந்தத் தக்கது!

அப்பால் உள்ளிருக்கும் மண்டபம் அர்த்த மண்டபம் என்று பெயர். அதிலிருந்து மீனாக்ஷி அம்மனை நாம் நன்கு

தெரிசிக்கலாம். கோவிலின் விஸ்தாரத்தைக் கவனிக்கும் பொழுது அம்மன் விக்ரஹம் இன்னும் பெரியதாயிருக்கலா மெனத் தோன்றுகிறது. விக்ரஹம் சிறிதாயிருந்தபோதி லும் வெகு அழகாய் அமைந்திருக்கிறது. அம்மனின் புன் சிரிப்பும், அவ்வாறு சிரிக்கும்போது உதடுகள் வளைந்து குவிந்து காட்சி கொடுக்கும் நேர்த்தியும், மீனுக்ஷி அம்மன் வெகு சாமர்த்தியமாகவும் நயமாகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. முகத்தின் சந்தோஷக்களையும், விசாலமான தோள்களுக்கு இடையே விசித்திரமான குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட சிரசின் அமைப்பும் எவ்வளவு நேர்த்தி! இது சிவாலயமாயினும் முதன் முதல் பூஜிக்கப்படுவது மீனுக்ஷி யம்மனே. மீனுக்ஷி மீன் போன்ற கண்களை உடையவள். மீனுக்ஷி என்ற பதத்திற் குத தாதபர்யம் என்னவெனில் எப்படித தாய்மீன் தன் முட்டைகளைத தன் கண்களால் நோக்குவதனுலேயே முட்டைகள் குஞ்சுகள் ஆகின்றனவோ அதுபோல் மீனுக்ஷி தன்னை உபாசிப்பவர்களின் மீது கடைக்கண்ணைச் சற்றுக் கடாக்ஷம் செய்த மட்டிலேயே அவர்களுக்கு சகல ஞான மும் உண்டாகிவிடுகிறது என்று சொல்லுகிருர்கள். மீன் கொடியையுடைய பாண்டிய மன்னரின் புதல்வியானபடியால் மீனுக்ஷி என்ற பெயரும் பொருத்தமாயிற்று. ஆதலால் மீனைப் போலக் கண்களையுடையவளென்ற அதன் அர்த்தமும் ஏற்ற தாயிற்று.

மீனுக்ஷியம்மன் சன்னதியை விட்டு வெளிவருவதற் குள் நாம் பரமசிவனின் பக்கமிருக்கும் தெய்வங்களில் ஒரு வராகிய சண்டிகேஸ்வரரையும் கண்டு தரி

**சண்டிகேஸ்வரர்**

சித்தல் அவசியம். அவர் சிவ பக்தர்களில் மகா சிரேஷ்டர். இந்தக் கடவுள் சதா

நிர்விகல்ப சமாதியில் அமர்ந்து, ஆத்ம அநுசந்தானத்தில் ஆழ்ந்திருப்பதால் இவரைக் கைதட்டி சமாதியிலிருந்து விழிக்கச் செய்து வணங்க வேண்டியிருக்கிறது.

---

## அத்தியாயம் 5

மீனாக்ஷியம்மன் கோவிலிலிருந்து வடக்கிலிருக்கும் ஒரு பெரிய வாசல் வழியே நாம் சுந்தரேஸ்வரர் சன்னதிக்குப் போகிறோம். வாசற்படியைத் தாண்டி நாம் அடி வைக்கப் போகும் சமயம் நிமிர்ந்து பார்ததால் "முக்குறுணி அரிசிப் பிள்ளையார்" என்று சொல்லப்படுகிற கணேசரின பெரிய சிலை இருக்கிறது. இது ஒரே கல்லில் சமைக்கப்பட்ட பெரிய சிலை. இந்தச் சிலை 'வண்டியூரத் தெப்பக்குளம்' என்று சொல்லப்படும் மதுரையின் கிழக்கேயுள்ள குளத்தை வெட்டும் பொழுது எடுக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

முக்குறுணி அரிசிப் பிள்ளையார்

முற்காலத்தில், இந்தப் பிள்ளை யாரை இவ்விடம் பிரதிஷ்டை செய்வதற்கு முன், ஒரு பெரிய வாயில் இவ்விடம இருந்தது. அந்த வாயில் நடராஜரென்ற சபாபதிக் கடவுளுக்குச் சன்னதியாக அமைக் கப் பெற்றிருந்தது. தாண்டவஞ் செய்யும் அவசரத்திலிருக் கும் அக்கடவுளின் பார்வை கோவிலுக்குத் தெற்கிலுள்ள வீடு வாசல்களெல்லாவற்றையும் எரித்து வந்ததென்றும் அதை நிவர்த்திப்பதற்காக இந்தப் பிள்ளையாரைக் கொணடு வந்து இவ்விடம் பிரதிஷ்டை செயதார்களென்றும் ஒரு கதை வழங்குகிறது. தற்காலத்தில் அப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் ஜனங்களுக்கு ஒன்றும் கிடையாதென்று நாமே அறிவோம். பிள்ளையாரின் ஜன்ம நக்ஷத்திர தினமாகிய விநாயக சதுர்த்தி

யன்று 18 படி அரிசியில் செய்த ஒரே பெரிய கொழுக் கட்டை இவருக்கு நிவேதனம் செய்யப்படுகிறது

இந்தப் பிள்ளையார் கோவிலிலிருந்து மேற்கு முகமாகத் திரும்பி சுந்தரேசுவரர் கோவிலை நாம் பிரதக்ஷிணமாகச் சுற்றி வருகிறோம். வழியில் "மகா பாதக தீர்த்தம்" என்று சொல்லப்பட்ட ஒரு சிறு குளம் காணப்படுகிறது. இந்தக் குளத்திற்கு மேலே புணரத் தகாத புணர்ச்சியைக் காட்டும் ஒரு சித்திரம் வரையப்பட்டிருக்கிறது.

மகா பாதகதீர்த்தம்

இதன் தாதபர்யம் என்னவெனில் இது போன்ற மகா பாபங்களைச் செய்தவன் யாராயினும் இந்தக் குளத்தில் முழுகுவதால், அப் பாபங்கள் அவனைவிட்டு நீங்கிவிடுகிறதென்பதுவே ஆகும். ராமேசுவரம் கோவிலிலுள்ள நடைச்சாலைகள் போல் அவ்வளவு அழகாக இங்கு இல்லாவிடினும் இந்த நடைச் சாலைகளும் பிருமாண்டமாகவே இருக்கின்றன.

சுந்தரேசுவர சுவாமி கோவிலின் வாசற்படி நுழையும் இடத்தில் சண்டப்பிரசண்டர்கள் என்ற இரு துவாரபாலகர்களின் சிலைகள் இருக்கின்றன. இந்த உருவங்கள் ஜனங்களுக்கு ஒரு எச்சரிக்கையையும, ஆறுதலான சங்கதியையும் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு சிலைக்கும் நான்கு கைகள் இருக்கின்றன. இரண்டு கடவுளுக்கு வணங்கி வரம் கேட்பவைபோலும், இரண்டு அபயம் கொடுப்பவைபோலும் காணப்படுகின்றன. வலதுபுறமுள்ள தாழ்ந்த கையின் தூக்கின ஆள்காட்டி விரல், "பாவிகள் கோவிலுக்குள் நுழையாதீர்கள்," என்று எச்சரிப்பது போல் தோன்றுகிறது. வலதுபுறம் மேலாக இருக்கும் கையின் விரித்த உள்ளங்கையானது, "அப்படி என் உத்திரவை மீறி

சண்டப்ர
சண்டகன்

உள்ளே செல்வோர்களை அறைந்து கொல்வேன்" என்று சொல்வதுபோலிருக்கிறது. இவைகளே இந்தக் கோவிலி லுள்ள சிலைகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியவை.

உள்ளே நுழைந்ததும் வேறு இரண்டு சிலைகளையும் நாம் காண்கிறோம். இவை இரண்டும் மதுரைமா நகரின் கண் அரசுபுரிந்து வந்த இரண்டு அரசர்களின் உருவசிலை கள். தென்னிந்தியாவில் பிரசித்திபெற்று விளங்கின அறுபத்துமூன்று சைவநாயன் மார்கள் என்ற ஞானிகளின் சிலைகள் அப் பால் பிராகாரத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. தங்களுடைய கடுரமான தபசினுலும், கடவுளிடத்துள்ள பக்தியினுலும் தென்னிந்தியாவில் சிவன் கோவில் ஒவ்வொன்றிலும் தங்க ளுக்கும் இருப்பிடதகை இவர்கள் ஏற்படுததிக் கொண்டார் கள். இந்த ஞானிகளில் மிகவும் சிரேஷ்டர்களாக விளங்கின வர்கள், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், ஞானசம்பந்தர் என்ற நால்வரே. சைவ மதத்தர்களால் வேதத்திற்கு ஒப்பா கக் கொண்டாடப்படும் தேவாரம் திருவாசகம் ஆகியவை கடவுளைத் துதித்துப் பாராட்டிய பாட்டுகள்.

நாயன்மார்கள்

இந்தப் பிரகாரத்தின் வடமேற்குக் கோடியில் தமிழ்ச் சங்கத்துச் சங்கப் பலகை ஸ்தாபிக்கப்பட்ட இடமிருக்கிறது. மதுரையே தமிழ்ச் சங்கத்து ஆஸ்தானம். ஆனபடியால சங்கத்தின் உற்பத்தியைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளவேண்டி யது அவசியமாகும். திருவிளையாடற் புராணத்தில் பின்வரு மாறு அதைப் பற்றி எழுதி யிருக்கிறது :—

தமிழ்ச் சங்கம்

வங்கிசசேகர பாண்டியன் இம்மதுரையை ஆளுகையில் மதுரையில் பிரக்யாதி பெற்ற கவிவாணர்களின் தமிழ்ச் சங் கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு மூலகாரணம் பின்வரு

மாறு:-கங்கைநதிக் கரையிலுள்ள காசி க்ஷேத்திரத்தில் பிரும்மாவானவர் பத்து அசுவமேத யாகங்களைச் செய்துவிட்டுத் தமது மூன்று பத்தினிகளுடன் ஸ்நானத்திற்குக் கங்கைக்குச் சென்றார். அவ்வமயம் சரஸ்வதியானவள் ஏதோ தேவ கானம் போன்ற இனிய சங்கீதத்தைக் கேட்டுச் சற்றுத் தயங்கி நின்றாள். இதனால் கோபம்கொண்டு அவளுடைய கீழ்ப்படியாத குற்றத்திற்காக அவளைப் பூமியில் நாற்பத்தெட்டு தடவைகள் பிறக்கவேண்டுமென்று பிரும்மா சபித்தார்.பின்னர் சற்று இரக்கம்கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாக நாற்பத்தெட்டு பிறவி எடுப்பதற்குப் பதிலாக ஒரே பிறவியில் நாற்பத்தெட்டு உருவங்களை ஒருமிக்க எடுக்கலாமென்று சாபத்தை மாற்றி அநுக்கிரகித்தார். சம்ஸ்கிருத பாஷையில் ஐம்பத்து ஒன்று எழுத்துக்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டு மற்ற எழுத்துக்களிலிருந்து சுருங்கியவை; ஒன்று எல்லா எழுத்துக்களுக்கும் ஆதாரமாயிருப்பது. எனவே நாற்பத்தெட்டு உருவங்கள் ஒரே காலத்தில் கவிச் சக்கரவர்த்திகளாகத் தோன்றினார்கள். சுந்தரேஸ்வரக் கடவுளே நாற்பத்தொன்பதாவதான எல்லாவற்றிற்கும்

சங்கப் புலவர்கள் காரண எழுத்தாக உற்பவித்தார். சரஸ்வதியின் அம்சமே இந்த நாற்பத்தெட்டு கவிகளினிடத்துக் கலந்து ஒவ்வொருவரும் கீர்த்திபெற்ற கவிவாணர்களாக விளங்கினார்கள். மகா மேரு பர்வதத்திலிருந்து மதுரையை நோக்கி இவர்கள் வந்தார்கள். வந்தவர்களைச் சோமசுந்தரக் கடவுளே உபசரித்துத் தமது கோவிலுக்கு அழைத்துச் சென்றார். பாண்டியராஜனும் அவர்களை ஆதரவோடு வரவேற்றுக் கோவிலிலேயே அவர்களுக்குச் சுகமாக இருக்க வசதியும் ஒரு மண்டபமும் ஏற்படுத்தினன். அதைச் "சங்க மண்டபம்" என்று பெய

ரிட்டான். கவிவாணர்கள் பட்டணத்தில் மிகுந்த ஆதரவுடனும், சந்தோஷத்துடனும் வசித்து வந்தார்கள். ஆயினும் இடையிடையே கவிவாணர் என்று சொல்லிக்கொண்டு வரும் அநேக பொறாமை கொண்ட போலிப் புலவர்களால் அவர்கள் உபத்திரவிக்கப்பட்டனர். கடவுளிடத்துத் தங்கள் குறையை முறையிட்டார்கள். தங்களுக்குச் சமானமானவர் மட்டும் வந்தால் அந்தப் பலகை இடம் கொடுக்கவேண்டுமே யல்லாது, தகுதியற்றவர்கள் யாரும் தங்களுடன் கூடச் சமமாக உட்காராதபடி ஒருபலகை வேண்டுமென்று கடவுளைப்பிரார்த்தித்தனர். சோமசுந்தரக் கடவுளும் அப்படியே அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பனிக்கட்டியிலும் வெண்மையுடையதாய், ஒரு அடி நீள அகலமுள்ள ஒரு பலகையைக் கொடுத்தார். அது தகுதியுள்ளவர்கள் யார் வந்தாலும் உட்கார ஆசனம் கொடுக்கும். தகுதியற்றவர்கள் யாரேனும் வந்து உட்கார்ந்தால், அவர்களைக் கீழே தள்ளிவிடும. நாற்பத்தெட்டு கவிகளும் அதன்மீது உட்கார அந்தப் பலகை அவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுத்தது. மற்றவர் யாரும் அதில் உட்கார இடமில்லை. அவர்களுக்குப் போதுமான திறமை இல்லாததால் அது இடங்கொடுக்கவில்லை. காலக் கிரமத்தில் இந்தக் கவிகளுக்குள் சிற்சில தகராறுகளும், சண்டைகளும் ஏற்படவே சோமசுந்தரக் கடவுளே ஒரு புலவராக வந்தார். அந்த பலகையும் இடம் கொடுக்கவே கடவுள் தாமும் அவர்களுடன் கலந்து அந்தச் சங்கத்தில் முதன்மை பெற்று விளங்கினார். கடவுளின் நேர் பார்வையிலேயே அநேக காவ்யங்களும், பாடல்களும் அவரது பெருமையைத் துதித்து இயற்றப்பட்டன.

சிற்பசாஸ்திர விதிப்படி நோக்குமிடத்து இந்த அறுபத்துமூன்று நாயன்மார்களில் கவனிக்கத்தக்க சிலரைக்

கால் அம்மையார் என்றவரினுடைய சிலைதான். காரைக்காலில் பிறந்தபடியால் காரைக்கால் அம்மையாரெனப் பெயர்பெற்றார். அவர் நாகப்பட்டினத்திலிருந்து வந்த பரமதத்தர் என்ற ஒருவரை மணந்தார். சோமசுந்தரக் கடவுளிடத்தில் பேரன்பு வாய்ந்தவராதலின் தன்னிடமிருந்த பொருள்கள் யாவற்றையும் அக்கடவுளுக்கே அர்ப்பணம் பண்ணிவிட்டார். ஓர் சமயம் நாயகனுக்கென்று வைத்திருந்த ஒரு மாம்பழத்தை அம்மையார் ஓர் சிவனடியார்போல்வந்த கடவுளுக்கு அளித்து விட்டார். கணவன் வந்ததும், கடவுளைத் தியானித்து மாம்பழத்தைத் திரும்பப் பெற்றார். அவருடைய நாயகன் மதுரையில் குடியேறவும், தானும் மதுரைக்கு வந்து சேர்ந்தார். நாயகனே தன்னை ஞானி யென்று போற்றும்படி நேரிட்டது. பின்னர் அவர் தேகவியோக மானதும் நாயன்மார்களில் ஒருவராக மதிக்கப்பட்டார். இந்தக் காரைக்கால் அம்மையாரின் சிலை வெகு நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. காரைக்காலம்மையார் வயதானவராகையால், நாம் நினைக்கின்றபடியே தசையெல்லாம் வரண்டு, எலும்புக் கூடு தெரியும் வண்ணம் வெகு சாமர்த்தியத்துடன் இந்தச் சிலை செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிலையிலிருந்தே எப்படி கடோரதவமும் கடவுளிடத்துச் செலுத்திய பூர்ண பக்தியும் மானிட சரீரத்தை எலும்புக் கூடுமட்டுமுள்ள ஸ்திதிக்குக் கொண்டுவந்து விடுகிறது என்பதை நாம் நன்கு அறியலாம். அமைப்பைக் கவனிக்கும்பொழுது இச்சரீரம் பக்திமேலீட்டினால் மெலிந்தது என்று தோன்றுமேயல்லாது, ஏழ்மையினால் மெலிந்தது எனக் கூற முடியாது. ஏனெனில் அவர் முகத்தில் ஒருவித தனிக் களை திகழ்கின்றது.

காரைக்கால் அம்மையார்

நாயன்மார்களில் மற்றொருவரான [redacted]மூர்த்தி நாயனார் என்பவரும் இந்த மதுரை நகரைச் சேர்ந்தவர். அவர் வைசியமரபினர். சோமசுந்தரக் கடவுளுக்குத் தினந்தோறும் பூஜைக்குச் சந்தனம் சேகரித்துக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்நகரம் ஜைனர்களின் ஆதிக்கத்திலிருந்தபொழுது கடவுளுக்குச் சந்தனம் கூடக் கிடைப்பது அரிதாயிற்று. இப்படி நேர்ந்த சமயத்தில் இந்த நாயனார் தனது சரீரத்தின் தோலை அறுத்துச் சந்தனமாக இட எத்தனித்தபோது கடவுளே பிரத்தியக்ஷமாகி ஆசீர்வதித்தாரென்பது புராண வரலாறு.

**[redacted]மூர்த்தி நாயனார்**

ஞானியார்கள் நால்வராலும் புனிதமாக்கப்பட்ட நகரம் இம்மதுரைமா நகர். இவர்களில் கடைசியானவரான, ஞானசம்பந்தர் பார்வதியினால் ஞானப்பாலூட்டி வளர்க்கப் பட்டவர். அதன் நிமித்தமாக இப்போதும் இக் கோவிலில் திருவனந்தல் சமயத்தில் கடவுளுக்குச் சமர்ப்பிக்கப்படும் பால், ஞானசம்பந்தர் சன்னதிக்கும் கொண்டுவரப்படுகிறது. பின்னர் "ஞானப்பால்" என்று பக்தர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது.

**திருஞான சம்பந்தர்**

இந்த நாயன்மார்களின் சிலைகளுக்குப் பின் கங்காள நாதர் என்று சொல்லப்படும் சிவனுடைய சிலை இருக்கிறது. இந்தக் கங்காள நாதருக்குப் பக்கத்தில் தங்கள் ஆடைகள் நழுவிக் கொண்டிருக்கும் நிலைமையில் நான்கு ரிஷிபத்னிகள் இருக்கிறார்கள். இக் கதையைத் தெரிந்தவர்கள் இதன் உண்மையை நன்குணர்வர்.

**கங்காளநாதர்**

இந்தப் பிராகாரத்தின் கடைசியில் தக்ஷிணுமூர்த்தி சுவாமி இருக்கிறார். பரமசிவனின் திருவிளையாடல்களில் இந்த அவதாரமே முக்கியமானது. இந்த அவதாரத்தில் பரமசிவன் யோகம், கானம் முதலிய சாஸ்திரங்களை உபதேசிக்கும் குருவாகக் கொண்டாடப்படுகிறார். பரமசிவன் இச்சாஸதிரங்களைத் தெற்குமுகமாக இருந்து போதித்த படியால் தக்ஷிணுமூர்த்தியென அழைக்கப்படுகிறார். சிவனின் தாண்டவஸ்வரூபம் எப்படி ஆனந்தத்திற்கு பெயர் பெற்றதாக விளங்குகிறதோ அதுபோல இந்ததக்ஷிணுமூர்த்தி ஸ்வரூபம் சாந்திக்கு பெயர் பெற்றது. ஆகம சாஸ்திரப்படி எல்லாக் கோவில்களின்

தக்ஷிணமூர்த்தி மத்திய, கர்ப்பக் கிரகத்தின் தென் சுவற்றில் ஒரு பிரையில் தக்ஷிணுமூர்த்தி ஸ்தாபிக்கப்படவேண்டியது. சிற்பிகள் தக்ஷிணுமூர்த்தியை யோகாப்பியாசத்திற்குக் குருவாகவும், வீணை வாத்தியம் வாசிப்பவராகவும், ஞானேபதேசம் செய்கிறவராகவும் அல்லது சாஸ்திரங்களைப் போதிப்பவராகவும் செதுக்குவதுண்டு. இந்தக் கோவிலிலுள்ள தக்ஷிணுமூர்த்தியின் உருவம் சாஸ்திரங்களைப் போதிக்கும் உருவமாகக் காணப்படுகிறது. குருவுக்கிருபக்கததிலும் அவருடைய சீடர்களைக் காணலாம். மற்ற கோவில்களில் ஏற்படுத்தியபடி தக்ஷிணுமூர்த்தியின் விக்ரகம் இவ்விடத்தில் அழகாக அமையாவிடினும் மற்ற எல்லா தக்ஷிணுமூர்த்திகளைக் காட்டிலும் இது தன் முகத்தில் சாந்தம் ததும்புவதாக இருக்கிறது. இந்த சாந்த ஸ்வரூபமே ஆகம சாஸ்திரங்களில் தக்ஷிணுமூர்த்தி சுவாமிக்கு மிகவும் முக்கியமான கலை என்று கூறப்படுகிறது.

ஏன் பரமசிவன் இப்படி ஒரு உருவம் எடுக்கவேண்டும், எதற்காக இவ்வளவு ஆழ்ந்த சிந்தையில் அமர வேண்டும்,

என்று அறிய அநேகர் விரும்பலாம். அந்தக் கதை பின் வருமாறு:—

தக்ஷனென்ற அரசனுக்குச் சதி (தாக்ஷாயணி) என்று ஒரு குமாரி இருந்தாள். அவள் சிவனை மணந்து கொண்டாள். பிற்காலத்தில் இந்தத் தக்ஷன் பெரும்யாகம் ஒன்று செய்தான். ஆயினும், சிவனையாவது அல்லது சதியையாவது யாகத்திற்கு அழைக்கவில்லை. தக்ஷனின் குமாரத்தி இந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் தக்ஷனின் யாகசாலைக்கு அழைக்கப்படாமலே சென்றாள். அவ்விடமிருந்த எல்லோரும் சதியை அலக்ஷியம் செய்தார்கள். மீண்டும் இந்த அவமானத்தைத் தாளாமல், சதி அக்னிப் பிரவேசம் செய்தனள்.

**தக்ஷனின் யாகம்**

பரமசிவன் இதைக் கேள்விப்பட்டதும் அடங்காக் கோபங்கொண்டு தன் சடைமுடியிலிருந்து ஒரு உரோமத்தைப் பற்றி எறிந்து அதனின்றும் வீரபத்திர சுவாமியைச் சிருஷ்டித்தார். வீரபத்திர சுவாமியும் தக்ஷனை த்வம்சம் செய்துவிட்டார். பரமசிவன் இதற்குப் பின், "ஒரு ஸ்திரீயையும் மணப்பதில்லை," என்று நிச்சயித்துக் கொண்டு காட்டிற்குச் சென்று ஆலவிருக்ஷத்தின் கீழ் தபசு செய்ய ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படித் தவம் செய்யும் உருவம்தான் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம்.

தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்குப் பக்கத்தில் உற்சவ காலங்களில் வெளியே கொண்டுபோகப்படும் விக்ரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

**உற்சவ விக்ரகங்கள்**

கோவிலுக்கு வருபவர்கள் சிலைகளின் அழகைக் கண்டு வியப்புற்று விலகுகிறார்களே தவிர இந்த விக்ரகங்களின் வேலைப்பாட்டையும் அழகையும் கவனிக்காமல் செல்லுவது ஒரு துரதிர்ஷ்டமே.

இவ் விக்ரகங்களில் சில வேலைபாட்டில் மகா உன்னதமானவை. சில ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதிய வழியையும் அநேக ஆச்சரியமான விஷயங்களையும் இந்த விக்ரகங்கள் சமர்ப்பிக்கின்றன. தற்சமயம் இந்தக் கற்சிலைகள்மட்டும் நம் மனதைக் கவருகின்றன. ஆயினும் வேலைக்காரர்கள் சிலை செதுக்குவதில் எவ்வளவு சாமர்த்தியத்தையும், மேதாவித்தனத்தையும் காட்டினார்களோ அதே வேலைத் திறமையை இந்த விக்ரகங்களிலும் காட்டியிருக்கிறார்கள் என்று நாம் அறிதல் அவசியம்.

இவ்வித விக்ரகங்களில் ஒன்று சோமசுந்தரக் கடவுளை ஹேமா என்ற ஓர் தேவதாசி முத்தமிட்ட அடையாளத்தை இப்போதும் தரிததிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. கோவிலைச் சேர்ந்த ஒரு தாசி சிவபக்தியில் ஈடுபட்டிருந்தாள். தனக்கு பிரபுக்கள் கொடுதத பொருள் எல்லாவற்றையும் சோமசுந்தரருக்கு உடனே அவள் அர்ப்பணம் செய்துவிடுவாள். ஆயினும் சோமசுந்தரக் கடவுளின் விக்ரகம் ஒன்று தங்கத்தில் செய்யவேண்டுமென்று அவளுக்குப் பேரவா இருந்தது. தன்னிடம் அதற்கு வேண்டிய பொருள் இல்லாததால் அவள் எண்ணம் பூர்த்தியாகவில்லை. ஒரு நாட்காலை கடவுளே அவள்முன் தோன்றி அவளிடமிருந்த பித்தளை, தாம்பிரம் இரும்புபாத்திரங்கள் எல்லாவற்றையும் தங்கமாகமாற்றிவிட்டு மறைந்தார். அவள் மிகுந்த சந்தோஷமடைந்தாள். உடனே சோமசுந்தர விக்ரகம் ஒன்று தங்கத்தில் செய்வித்தாள். அது மிகவும் அழகாக அமைந்திருந்தபடியால் அதைப் பேரானந்தத்துடன் முத்தமிட்டாள். இந்த விக்ரகத்தில் அந்த அடையாளத்தை இன்றும் காணலாம் என்று கோவிலிலுள்ளோர் தெரிவிக்கிறார்கள்.

# அத்தியாயம் 6

மேற்கு நடைச்சாலையின் வடக்குக் கோடியில் காசி விசுவநாத சுவாமி கோவிலுள்ளது. சகல விக்ரகங்களுக்கும் பிரதிமைகள் சலவைக் கல்லினால் செய்து இவ்விடம் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. தென் இந்தியா முழுவதும்சுற்றி யாத்திரைசெய்துகொண்டு வந்த ஒரு காசிராஜனால் இவை இந்தக்கோவிலுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்விடத்தின் அருகேதான் 'எல்லாம் வல்ல சித்தரி'ன் கோவிலும் "துர்க்கையின் கோயிலும்" இருக்கிறது.

காசி விசுவநாதர் சித்தர்

இந்தச் சித்தர் கோவிலுக்குப் பக்கத்தில் புனிதமான ஒரு கடம்ப விருக்ஷம் இருக்கிறது. முற்காலத்தில் இம்மதுரையே கடம்பவனமாக இருந்தது என்று காண்பிக்கவே இம்மரம் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகிறது. புராணங்கள் மதுரையைக் கடம்பவன க்ஷேத்திர மென்று கூறுகின்றன. இம்மரத்தைச் சுற்றி நாகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. தேசத்து மடந்தையர் எல்லோரும் இம்மரத்தைச் சுற்றிப் பிரதக்ஷிணம் இப்போதும் செய்துவருகிறார்கள். இந்நாகங்கள் தென்னிந்தியாவின் பழங்குடிகளாகிய "நாகர்"களை நமக்கு ஞாபகப் படுத்துகின்றன.

கடம்ப விருக்ஷம்

சிறிது தூரம் கிழக்கே சென்றதும் "சாட்சிக் கிணறு" என்று சொல்லப்பட்ட ஒரு கிணறு இருக்கிறது. வெகு தூரத்திலுள்ள தேசத்திலிருந்து ஒருவன் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டு மதுரைக்கு வந்தான். அவர்கள் இருவரையும் ஸ்திரீபுமான்கள் என்று மதுரை நகர்வாசிகள் நம்பவில்லை.

சாட்சிக்கிணறு

அப்பெண் அதற்காக சோமசுந்தரரைப் பிரார்த்தித்தாள். ஒரு பக்கததில் அந்தத் தேசத்தில் நடந்த விவாகத்தை ருசுப் படுதத அந்தக் கிணறும், வன்னிமரமும் கடவுள் அநுகிரஹத்தால் இவ்விடம் வந்தனவாகக் கூறப்படுகிறது.

**சுரங்கவழி**

கிணற்றிற்குப் பக்கத்திலுள்ள 3 அடி உயரமும் $1\frac{1}{2}$ அடி அகலமும் உள்ள ஒரு பாதையின்வழியே திருமலை நாயக்கரும், அவருடைய பத்தினிகள் எல்லோரும் கோவிலுக்குத் தினந்தோறும் வருவது வழக்கம் என்றும் சொல்லப்படுகிறது. ஊர்க் கதைகளை நாம் நம்புவதானால் திருமலை நாயக்கர் இந்தப் பாதையிலே உயிர்துறந்தார் என்றும் நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படி இவரைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தது இவருடைய மாமனாரான தஞ்சை நாயக்க மன்னரே.

சுந்தரேஸ்வர ஸ்வாமியின் சன்னதியின் உட் பிரகாரத்திற்குச் சென்றால் பரமசிவனின் நடராஜ அவதார ரூபம் வெகு அழகாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதைக் காணலாம். நடராஜரின் இருப்பிடம் இவ்விடத்தில் 'வெள்ளியம்பலம்' எனப் பெயர் பெற்று விளங்குகிறது. சிதம்பரத்தில் இதுவே 'பொன்னம்பல'மாக விளங்குகிறது. உருவம் முழுவதும் வெள்ளிக் கவசம் போடப்பட்டிருக்கிறது.

**நடராஜர்**

ஆகம சாஸ்திரங்களில் பரமசிவன் ஏழு வகைத் தாண்டவமாடினார் என்று கூறப்படுகிறது. அவ்வேழு வகையில இந்த இடத்தில் காட்டுவது ஆனந்தத் தாண்டவம் என்பது சிற்பசாஸ்திர அபிமானிகளுக்கு நன்கு தெரிந்தது. இதுவே எல்லாராலும் எளிதில் அறியக்கூடிய தாண்டவமாகவும் இருக்கிறது. இவ்விடத்தில் மட்டும் விசேஷமென்னவெனில் பரமசிவன் இடதுகாலைத் தூக்கி நடனமாடுவதற்குப் பதிலாக

வலது காலைத் தூக்கியும், இடது கைக்குப் பதிலாக வலது கையால் கஜஹஸ்த முத்திரை காண்பித்துக் கொண்டும் இருப் பதுதான். இவ்வாறு மாறுதலாகவிருக்கும் ந்ர்த்தனத்தின் கார ணம் பலவுண்டு. மதுரையில் அரசுபுரிந்த ராஜசேகர பாண்டி யன் அறுபத்திநான்கு கலைகளில் அறுபத்திமூன்றையும் நன்குணர்ந்தவன். சோழ வம்சத்துக் கரிகாலச் சோழன் அந்த அறுபத்துநான்காவது கலையாகிய இந்த ந்ர்த்தன சாஸ் திரத்தையும் தெரிந்தவன். இதைக்கேட்ட பாண்டியனும் ந்ர்த் தன சாஸ்திரத்தையும் அறிந்துகொள்ள அவாக்கொண்டான். இவன் இந்தக் கலையைப் பயின்றுவரும் காலத்தில் ஒவ்வொரு நரம்புகளுக்கும் இந்த ந்ர்த்தனம் கொடுக்கும் வேலையையும், அதனால் சரீரத்திற்கு ஏற்படும் உபத்திரவத்தையும் நன்கு ணர்ந்தான். கால்களை மாற்றாது, ஒரே காலில் நின்று கொண்டு ந்ர்த்தனம் புரியும் பரமசிவன்பால் வெகு இரக்க மும், துயரமும் கொண்டனன். உடனே சிவன் கோவிலுட் சென்று பரமசிவனைக் குறித்துத் தனது காலை மாற்றிக் கொள்ளும்படி பிரார்த்தித்தான். பரமசிவனும் அவனுடைய பக்திக்கு உட்பட்டுத் தமது காலை மாற்றிக்கொண்டு ந்ர்த்த னம் புரிந்தார் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றிவேறு ஒரு கதையும் உளது.

புராண வரலாறு

பரமசிவன் மீனாக்ஷியை மணந்துகொண்டபின் அவ் விடம் வந்திருந்தவர்கள் எல்லோரும் ஒரு பெரும் விருந் துண்ண உட்கார்ந்தார்கள். அவர்களில் பதஞ்சலி, வியாக்ரபாதர் என்ற இரண்டு ரிஷிகள் அவ்வாறு போஜனம் செய்ய மறுத்தார்கள். ஏனெனில் சிதம்பரத்தில் பொன்னம் பலத்தில் நடராஜனது தாண்டவத்தைக் கண்டு தெரிசி யாமல் அவர்கள் புசிப்பதில்லை. சோமசுந்தரக் கடவுள் இந்த

இரண்டு ரிஷிகளின் பொருட்டே, அவர்கள் தினந்தோறும் பொன்னம்பலத்தில் கண்டு தெரிசிக்கும் தாண்டவத்தை மதுரை கோவிலிலேயே வெள்ளியம்பலத்தில் நடமாடிக் காட்டினாரென்று கதை விளங்குகிறது. பரமசிவனின் கருணையைப்போற்றி ரிஷிகள் இந்த நடனத்தை தினந்தோறும் வெள்ளியம்பலத்தில் தாங்கள் கண்டு களிக்க வேண்டும் என்று பரமசிவனை பிரார்த்தித்தனர். அப்பெருமானும் இரங்கி அப்படியே வரமளித்தார்.

இனிக் கர்ப்பக் கிரகத்திலிலுள்ள சோமசுந்தரக் கடவுளைக் கவனிப்போம். பரமசிவன் இவ்விடம் லிங்கரூபமாக இருக்கிறார். திருமூர்த்திகளில் பரமசிவன் ஒருவர். மற்ற இருவர் பிரும்மாவும் விஷ்ணுவும். பிரும்மா சிருஷ்டிகர்த்தாவாகவும், விஷ்ணு அச்சிருஷ்டியைக் காப்பாற்றுபவராகவும் சொல்லப் படுகிறார்கள். நாசம் செய்யக்கூடியக் கடவுளாகிய பரமசிவனிடம் எவ்விதப் பிரமேயம் ஏற்பட்டது என்று மதத்தைப் பற்றி ஒன்றும் அறியாதவன் வினவுவது சகஜம். பரமசிவன் என்று ஒரு புருஷன் நாசம் செய்யாவிடில் சிருஷ்டித்தல் என்ற வேலை பிரும்மாவுக்கு ஏற்படக் காரணமில்லை. சிவன் சங்காரம் செய்பவர்தான். அவருக்குச் ஸ்வஸானத் தீயே சாம் பிராணித்தூபம். ஆயினும் அவர் எதை நாசம்செய்கிறார்? பிரளயகாலத்தில் ஆகாசம் பூலோகத்தை மட்டுமா? இல்லை. வியஷ்டியில் ஒவ்வொரு ஆத்மாவையும் நாசம் செய்கிறார். இது தான் உபதேசம். "நாசம் செய்! நாசம் செய்!! நாசம் செய்!!! உன்னிடமுள்ளதை நாசம் செய்! உன்னைச் சுற்றியுள்ளவை யாவற்றையும் நாசம் செய்!! உன்னுடைய ஆத்மாவுக்கும் மற்ற ஆத்மாக்களுக்கும் மட்டும் இடம்கொடு. நாசம் செய்!" ஏனெனில் நசித்ததிலிருந்துதான்

சுந்தரேஸ்வரர்
லிங்க ரூபம்

மறுபடியும் சிருஷ்டி ஏற்படுகிறது. உலகின்கண் ஒன்றும் புதிதாக உண்டாவதில்லை. இடிந்த சுவரிலிருந்துதான் புதுச் சுவர் கட்டப்படுகிறது. உருவம் சதா நாசம் அடையவேண்டும்!! இதுவே தத்துவம். சுருக்கிச் சொல்லுமிடத்து பிரம்மாவின் வேலையாகிய சிருஷ்டிக்குக் காரணம் பரமசிவனே யாவார்! ஒரு விதத்தில் பரமசிவனே சிருஷ்ட புருஷனுமாவார். ஆகையினாலே லிங்கரூபமாக பரமசிவனைக் கூறியது ஆச்சரிய மில்லை. ஜனங்களில் பெரும்பாலோர் சிவனை லிங்கரூபமாக ஒரு பீடத்தில் அமர்த்திப் பூஜிக்கிறார்கள். இவ்வாறு லிங்கரூபம் சிவனுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் நன்கு விளங்காவிடினும் இது பழைய வழக்கம் என்று மட்டும் தெரிகிறது. யோனி லிங்க ரூபங்களில் கடவுளைப் பூஜிப்பது மானிடப்பிறப்பு ஏற் பட்ட நாள் முதல் மனிதர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரு கிறது. லிங்கத்தைப் பற்றி 'ஸ்காந்த புராண'த்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது :—

ஆகாசம், தூண், பூமி, பீடம் சகல தேவதைகளும் லிங் கத்தினிடத்து வசிக்கிறார்கள். சிருஷ்டிக்குட்பட்ட சகலமும் இந்த லிங்கத்தினிடத்து உற்பத்தியாகி அவ்விடத்தே லய மடைகின்றன. இந்தப் பூஜையைப் பற்றி வில்சன் என்ற பிரமுகர் கூறுவதாவது :

லிங்கம் இருவகைப்படும் ; ஒன்று அந்தரமாகவும், மற் றொன்று மார்ககமம் என்ற வெளிப் படையாகவும் உள்ள கருத்து. மூடாத்மாக்கள் தங்களுக்கு ஒரு அடையாளத்தை வைத்துக்கொண்டு பூஜிக்க வேண்டியபடியால் கடவுளை லிங்க ரூபமாக உபாசிக்கிறார்கள். லிங்கம் என்றால் ஒரு அடையாளம் அல்லது குறி என்றுதான் தாத்பர்யம். ஞானிகளோ இந்த வெளி அடையாளத்தைச் சூனியமென்றும், நாஸ்தி என்னும் வசனத்திற்குப் பிரதிபதமென்றும் அறிகிறார்கள். பரம

சிவனை இந்திரியங்களால் மட்டும் உணரக்கூடாத அநிர்வசனீயமுமான வஸ்துவாகவும் பிரகிருதி பேதங்களுக்குக் கட்டுப்படாத ஒரு வஸ்துவாகவும் சிந்தித்துக் கடைத்தேறுகிறார்கள்.

**லிங்கம் என்பதன் தாத்பர்யம்**

இந்தியாவில் லிங்க ரூபமாகக் கடவுளைப் பூஜிப்பதின் காரணம் எவ்வாறு இருந்தாலும் சில ஐரோப்பிய ஆசிரியர்களால் எழுதப்பட்டவாறு முரண்பட்ட யாதொரு தாத்பர்யததையும் சிவபுராணங்கள் சொல்லவில்லை. சிவனுடைய லிங்க ரூபமானது கடவுளானவர் நாமரூபபேதங்களுக்குக் கட்டுப்பட்டவரல்லவென்று மட்டும் குறிக்கிறது. பழுக்கக்காய்ச்சின பத்தரை மாற்றுத் தங்கக்கட்டிபோல் அவர் குறிப்பிடப்பட்டிருக்கிறார். இதுவும் விக்ருதிபேதங்களான ரூபபேதங்களின் நாசத்தையே குறிப்பிடுகிறது. ஏனெனில் பழுக்கக் காய்ச்சின தங்கத்தினிடத்து எவ்வித அசுத்தமும் விலகிவிடுகின்றதல்லவா? பரமசிவன் சதா அபிஷேகத்தில் பிரியம் உள்ளவரானதால் தினந்தோறும் அவருக்கு அபிஷேகம் செய்யப்படும். அபிஷேக தீர்த்தம் உடனே வடிந்தோடும்படி பீடம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோவிலில் பரமசிவனின் வேறு அநேக ரூபங்களும் காணப்படுகின்றன. அவைகளைப் பற்றி அந்தந்த இடங்களில் கூறுவோம்.

பரமசிவனின் கர்ப்பக் கிரகத்தைச் சுற்றி சுவரின் உச்சியிலுள்ள மாடங்களில் ஸ்தல புராணத்தில் சொல்லப்பட்டபடி உருவங்கள் சுண்ணாம்பினால் வேலை செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஒரு லிங்கத்தையும் அதைச் சுற்றிப் பல விருக்ஷங்கள் நிற்பதையும், இவைகளைச் சுற்றி ஒரு பெரும் நாகம் இருப்பதையும் ஒரு சித்திரத்தில் நாம் காண்கிறோம்.

**சித்திரங்கள்**

இது, மதுரையை ஸ்தாபித்த கீர்த்தி பூஷண பாண்டியராஜன் பட்டணத்தின் எல்லைகளைப் பற்றி சந்தேகப் பட்டுக்கொண்டு முடிவு தெரியாமல் தவித்தார். ஒரு நாகம் அச்சமயம் அவ்விடம் தோன்றி ஓரிடத்தை வலம் வந்து, முடிவில் தனது வாயால் வாலைக் கவ்விக்கொண்டு பட்டணத்தின் எல்லையைக் காட்டிய தாக ஒருகதை விளங்குகிறது. ஆனதுபற்றியே மதுரை நக ருக்கு ஆலவாய் நகரம் என்ற பெயர் வழங்கலாயிற்று. வேறு கதைகளும் சுண்ணும்பு வேலையினால் செய்யப்பட்டிருக்கின் றன.

## அத்தியாயம் 7

சோமசுந்தரர் சன்னதியில் துவஜஸ்தம்பமும் நந்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மண்டபத்திற்குக் 'கம்பத் தடி மண்டபம்' எனப் பெயர். இந்த மண்டபம் கி. பி. 1770-ம் வருடத்தில் கட்டப்பட்டது. உத்ஸவ காலங்களில் துவஜஸ்தம்பத்தில் சிவனுடைய விருஷபக் கொடி ஒன்று ஏற் றப்படுகிறது. எல்லாச் சிவன் கோவில் களுக்கும் துவஜஸ்தம்பம் அத்யாவசிய மானது. கோபுரமும் துவஜஸ்தம்பமும் முக்கியமானவை. இவைகளே ஜனங் களை உட்சென்று கர்ப்பக்கிரஹத்திலிருக்கும் கடவுளைத் தரிசிக்க லாயக்குள்ளவர்களாகச் செய்கின்றனவாம். கொடி மரம் நமக்கு "உனது மனதை உயரச் சுவர்க்கபர மாகச் செலுத்து. உன்னுடைய ஞானமும் அப்படியே முன்னேற்றம் அடையும். முதலில், இது விஷயமாக எல்லோரும் செய்யவேண்டிய காரியம் அந்தராத்மாவைப் பற்றித் தியானித்தலே. உன்னுடைய யாகத்தியாகங்களை யும் உள்ளும் புறமும் செய்தால் நீ கடவுளைக் கண்டிப் பாய் உன்னிடமே கண்டறிவாய். இந்தக் கோவிலும், உன்

கம்பத்தடி மண்டபம்

சரீரமாகிற கோவிலில் உன்னுடைய ஹிருதயமாகிற கர்பக்கிரகத்தில் இருக்கும் கடவுளை இவ்விடம் காண்பிக்கிறது" என்று சொல்வதுபோ லிருக்கிறது. ஞானக் கோவிலின் வெளிப்பிரகாரதத்திற்கு நுழையுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்தக் கொடி ஸ்தம்பானது சொல்வதாவது மகா கீழ்மை ஸ்திதியிலிருக்கும் பக்தர்களிடததிலும் தன்னுடைய கருணையினால் ஆசிர்வதிக்கவும் அவர்களுக்குத் தக்கபடி ஞானத்தைப் போதிக்கவும் கடவுள் தயாராயிருக்கிறார் என்பதுதான். இந்தப் பிரதிக்ஞை வேறு ஒரு அடையாளத்தாலும் வெளிப்படுகிறது. பரமசிவன் தனது கையில் ஒரு மானை ஏந்தியிருப்பதாக ஐதீகமிருக்கிறது. மானுக்கு வடமொழியில் 'மிருக' மெனப் பெயர். மிருகம் என்றால் 'தேடுகிறவன்' என்று தாத்பர்யம. கடவுள் தன்னை அறிவதற்கு முயற்சிக்கும் எந்த ஜீவனையும் தன்னுடைய பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளுகிறார் என்ற அர்த்தத்தை இந்த அடையாளம் காட்டுகிறது. (1905 ஆரம்ப சஞ்சிகை).

பரமசிவனை "லிங்க"மாகக் கொண்டாடினும் அவருக்கு வேறு பல உருவங்களுமுண்டு. அவையெல்லாம் கம்பத்தடி மண்டபத்திலுள்ள தூண்களில் வெகு மூர்த்தங்கள் நேர்த்தியாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் நாம் முக்யமாகக் கவனிக்கவேண்டியவை; அநுக்ரஹமூர்த்தி, யோகமூர்த்தி, சாந்தமூர்த்தி, நிருத்யமூர்த்தி, சம்ஹாரமூர்த்தி முதலியன.

இவரை எவ்வுருவத்தில் வரைந்தாலும் சிவனுடைய உருவந்தான் என்று அதைக் காட்ட சில அடையாளங்கள் உள. சிவனுடைய உருவம் எல்லாவற்றிற்கும் நான்கு கைகள் உண்டு. அவைகளில் இரண்டு மானும் மழுவும் ஏந்தியிருக்கும். இரண்டு எல்லோராலும் எளிதில் தெரிந்து

கொள்ளக்கூடிய முத்திரைகளை காட்டிக்கொண்டிருக்கும். அவருடைய ஜடாமுடியின் ஒருபக்கம் சந்திர பிறை யும், மற்றொரு பக்கம் அர்க்க புஷ்பம் சிவஸ்வரூபம் என்ற மணியும் இருக்கும். ஜடா முடிக்கு மேல் வலதுபக்கத்தில் கங்கா தேவி யின் முகம்மட்டும் தெரியும். அவர் மூன்று கண்களை யுடையவர். சாதாரணமாயமைந்த இரண்டும் சூர்ய சந்திரர் களை குறிக்கும். மற்றொரு கண அக்நியைக் குறிக்கும். அக்நிக்கண் நெற்றியின் மத்தியில இருக்கும். இவர் முழங் காலுக்குமேல் புலிதமேதாலே அணிந்திருப்பார். இவ்விதம் சிவன் ஆடைகளை யணிந்திருக்கக் காரணம் பின்வரும வரலாற் ருல் தெரியும்.

தாருகா வனததில் மீமாம்சத்தைப் பின்பற்றியும் யாகமே பலன் தருமென்றும் தெய்வம வேண்டாமென்றும் தம்பத்தினிகளின் கற்பே சிறந்ததென்றும் இறுமாப்புக் கொண்டு அநேக ரிஷிகள் தவம் செய்து வந்தார்கள். பரம சிவனும் மகாவிஷ்ணுவும் அவர்களைப் பங்கப்படுத்த நினைத்து மகாவிஷ்ணு மிக்க அழகான ஒரு ஸ்திரீ உருவததுடனும், சிவபிரான அதிரூபலாவணயத்துடன் கூடிய பிக்ஷாடனத் திருக்கோலத்துடனும் அவர்கள் எதிரில்சென்ருர்கள். இம் மாதின் ரூபலாவண்யததில் மதிமயங்கி முதலில் தங்களுக்குள் ரிஷிகள் சண்டையிட்டுக் கொண்டார்கள். அவ்வண்ணமே இருஷிபத்தினிமார்களும் சிவபெருமானது பிக்ஷாடனத் திருக்கோலத்தைக் கண்டு மதிமயங்கி அவர் பின் சென்ருர்கள். பின்னர் இவை எல்லாம் பரமசிவனல் விளைந்த தென்று தெரிந்து கொண்டு பரமசிவனை மந்திரங்க ளால் கொல்ல முயன்ருர்கள். யக்ஞசாலையிலிருந்து ஒரு

மகாகோரமான புலியை உண்டாக்கி அதைச் சிவன் மீது ஏவினார்கள். பரமனும் புன்சிரிப்புடன் அந்தப் புலியைப் பிடித்துத் தனது சுண்டு விரலின் நகத்தால் அதன் தோலை உரித்து அத்தோலைத் தனக்குப் பட்டாடை போல் மேலே அணிந்து கொண்டார். இப்படித் தோற்றதினால் மனந்தளராமல் மறுபடியும் அந்த ரிஷிகள் யாகஞ்செய்து ஒரு பிரும்மாண்டமான சர்ப்பத்தைச் சிருஷ்டித்தார்கள். அது சிவனிடம் வரவே அதைத் தனக்கு மாலையாகப் பரமசிவன் அணிந்துகொண்டார். உடனே பரமசிவன் நர்த்தனம் புரிய ஆரம்பித்து விட்டார். ஆயினும் அச்சமயம் அவரை எதிர்த்து ஒரு குள்ளனுருவத்தோடு முயலகன் என்ற மகா கொடூர அரக்கன் ஓடி வந்தான். அவன் முதுகின் மீது தனது காலை வைத்து அமுக்கி அந்தக் கொடியோனை ஒழிக்கவே அவனும் கீழே விழுந்து உருண்டான். எல்லாச் சத்ருக்களையும் ஒருவர் பின் ஒருவராகக் கொன்றபின் சிவன் ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். இந்தத் தாண்டவத்தைத்தான் ரிஷிகளும் தேவதைகளும் கண்டு களித்தனர்.

சார்த்தூலஹர மூர்த்தி

மாலை, ருத்திராக்ஷம், மேகலை, நவரத்ன மோதிரங்கள், கால் காப்பு ஆகிய ஆபரணங்களும் அவருக்கு உண்டு. மேலும் அவர் பூணூலும் தரிப்பார். இடது காதில் மட்டும் குண்டலம் தொங்கும். காலகூட விஷத்தை உண்டதால் கழுத்தின் இடது பாகம் நீலமான அடையாளத்தால் குறிக்கப்பட்டிருக்கும். சிவனின் இவ்வித உருவம கோவிலில் அநேக இடங்களில் காணப் படுகிறது. மேலும் அவருடைய அங்கங்கள் அதாவது கைகள், கால்கள், பாதங்கள், முகம், காதுகள், கண்கள், எல்லாவற் றிற்கும், அல்லாமலும் அவர் சரீரத்தின் பல ஸ்தானங்

களுக்கும், அவர் கையில் பிடித்திருக்கும் ஆயுதங்களுக்கும் அணிந்திருக்கும் ஆபரணங்களுக்கும் ரகஸ்யார்த்தங்கள் பல உள. இவைகளை வெகு ரகஸ்யமாக வைத்துக்கொள்ளும் படி பிரதிக்ஞை வாங்கிக்கொண்டு சிஷ்யர்களில் சிலருக்குமட்டும் ஆசாரியர்கள் வெளியிடுகிறார்கள்.

மகாவிஷ்ணுவின் ஆயுதங்களுக்கும் ஆபரணங்களுக்கும் விஷ்ணு புராணங்கள் ரகஸ்யார்த்தங்களைத் தெரிவிக்கின்றன. அவ்வாறே லலிதா சஹஸ்ரநாமமும் லலிதாம்பிகையின் ஆயிரம் நாமங்களைக் கூறும்பொழுது, தேவியின் சகல சக்தியையும் எடுத்துச் சொல்லுகிறது. மகாஞானியான திரு ஞானசம்பந்தர் பரமசிவனை முக்கண்ணோடு கூடிய மானிட சரீரத்துடன் காண்கிறார்.

அவருடைய சிவந்த தலைமயிர் சடை போடப்பட்டிருக்கிறது. அந்தச் சிகையிலிருக்கும் பிறைச்சந்திரன் அக்ஞானமாகிய அந்தகாரத்திலும் அவர் பிரசன்னமாக இருக்கிறாரென்று உறுதிபடுத்துகிறது. அவர் தலையிலிருந்து கங்கை பிரவாகிக்க ஆரம்பிக்கிறாள்.

சிவன் ரிஷிகளுக்கும் மேலானரிஷி. அவர் தலையிலிருந்து எழுந்து விழும் கஙகையின் மூலம் தனது ஆத்மா முழுவதையும் வெளியிட்டு அந்தக் கங்கையில் ஸ்நானம் செய்வோர்கள் அனைவரும் அதனால் பரிசுத்தப் படுத்தப்பட்டு முக்தியை அடையட்டும் என்று அவ்வாறு செய்தார். அவருடைய சடைமுடியை ஒரு பாம்பு சுற்றி நிற்கிறது. இதற்கு இரண்டு அர்த்தம் துவனிக்கும். ஒன்று சிவன் விஷம் போன்ற எல்லாப் பாபங்களையும் அடக்கியாளும் சக்தி உள்ளவரென்றும் மற்றொரு அர்த்தம் 'வாசுகி' என்ற பாம்புக்கு எஜமானன் என்றும் ஏற்படலாம்.

நான்கு திக்குகளையும் காப்பாற்றும் நான்கு கரங்களும் அவருக்கு உண்டு. இவர் எப்போதும் ரிஷபவாகனாரூடராகவே கருதப்படுகிறார். இந்த விஷயம் பரம்பரைக் கதைப்படி நான்கு வேதங்களையும் குறிக்கும். சிவபிரான் தனது கழுத்தில் அணிந்திருக்கும் மாலையானது மண்டைஓடுகளால் தொகுக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஓடும் ஒரு பிரும்மாவின் மண்டை யோட்டைக் குறிக்கும். அப்படி எவ்வளவோ பிரும்மாக்கள் இதுவரை இருந்துசென்றுவிட்டார்கள். பிரும்மாக்களும் காலத் திற்குக் கட்டுப்பட்டவர்கள் தான். பரமசிவன் மட்டும எப்போ தும் சாஸ்வதமான பொருள் என்றும் இதனால் ஏற்படுகிறது. அவர் அரையில் உடுத்தியிருக்கும் புலித்தோலாவது அல்லது யானைத்தோலாவது அவர் சகல மிருக ஜாதியிடத்தும் வல்லமை பெற்றவரென்றும் காட்டுகிறது.

சிலசமயம் சிவன் ராக்ஷதன்மீது காலை வைத்து மிதித் துக்கொண்டிருக்கும் நடராஜ மூர்த்தியாகவும் குறிக்கப்படு கிறார். அது கடவுளுக்குத் தன் சதுருவை துவம்சம் செய் வது ஒரு விளையாட்டுபோல் சுலபமானது என்று காண்பிக் கிறது. அவருடைய தாண்டவமோவெனில் அவருடைய வேலைகளாகிய சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம் அநுக்ரகம் செய்தல், இவைகளைச செவ்வனே வெகு சுலபமாக, இயந்திரம்போல ஒருவிதத் தடங்கலும் முரணு மில்லாதபடி செய்கிற அழகையும் வர்ணிக்கிறது.

கம்பத்தடி மண்டபத்தில் மேற்கே இரண்டு பெரிய தூண்களில் விருஷபாரூடராக பரமசிவனின் சிலைகள் இரண்டு அடுத்தடுத்து இருக்கின்றன. பரமசிவன் விருஷப வாகன மீதேறிக் காட்சி கொடுபபதே எல்லா ஜனங்களா லும் பாராட்டப்படுகிறது. சிவனென்றாலேயே விருஷப வாகன மேறின கடவுளென்று உடனே ஜனங்கள் அறி

கிறார்கள். சில மகோத்ஸவங்களில் ஒருநாள் பிரத்தியேகமாக இந்த வாகனத்திற்குக் கொடுக்கப்படுகிறது. ஆயினும் பார்வதி சமேதராய் விருஷபவாகனாரூடராக சிவன் கோவிலில் சிலைகள் காட்சியளிப்பது எங்கும் சகஜமில்லை.

விருஷப வாகன ஆரூடர்

வலது காலைப் பூமியில் அழுந்த ஊன்றிக் கொண்டு தனக்குப் பின் ரிஷபம் நிற்கவும் மற்ற இடங்களில் காண்கிறோம். இவ் விருதூண்களையும் நாம் நன்கு கவனித்தல் வேண்டும். பார்வதி பரமசிவனைச் சுற்றி வெகு விசித்திரமான பிரபை இருக்கிறது. ரிஷபத்தின் காட்சியோ தன் முதுகின் மீது இருப்பவர்கள் சகல லோகங்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் எஜமானரன்றோ என்ற காவதமோடு இருப்பது போல் தோன்றுகிறது. அது தன தலையைச் சற்று திருப்பி அந்தப் பரமாத்மாக்களின் காட்சியைத் தான் சிறிது கண்ணுற்றுச் சந்தோஷமடையப் பார்ப்பது போல சிற்பிகள் வெகு விசித்திரமாகச் சிலையை நிர்மித்திருக்கிறார்கள்! சிவனை நோக்கி இது தலையைத் தூக்கி இருப்பதை நன்கு கவனித்தல் வேண்டும்.

சிற்பி • இந்த ரிஷபத்தை வெகு அழகாகவும் ரிஷபங்களின் சகல லக்ஷணங்களும் பொருந்தியவாறும் அமைத்திருக்கிறான. தன எஜமானனிடத்திலுள்ள வாஞ்சையைக் காட்டுமபடி அது நாக்கை நீட்டிக்கொண்டிருப்பதும் ஒரு அழகான காட்சியே! ரிஷபத்தின்மீது வரையப்பட்ட அலங்காரங்களும் மனதைக் கவரும் வண்ணம் அவ்வளவு உண்மையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ரிஷபாரூட மூர்த்திக்கு வலப்பக்கம் அத்தூணை ஒட்டியே, லிங்கோதபவமூர்த்தி நிற்கிறார். லிங்கோத்பவ மூர்த்தி என்றால் லிங்கத்தினிடத்து உற்பத்தியான சிவன் என்று அர்த்தம். சிவன் லிங்கத்தி

லிருந்து உற்பத்தியாவதையும், அவரது இருகால்களும் கணைக்காலுக்குக் கீழ் லிங்கத்திற்குள் மறைந்திருப்பதையும் சிற்பி வெகு அழகாக காட்டியிருக்கிறான். அவருக்கு வலப் பக்கம் இடப்பக்கங்களில் பிரும்மாவும் விஷ்ணுவும் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய நான்கு கரங்களில் இரண்டில் தங்களுக்குரிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டும் இரண்டு கைகளால் சிவனைப் பூஜித்துக்கொண்டும் நிற்கிறார்கள். அன்ன உருவத்தோடு பிரும்மா உயரப் பறந்து போவதுபோல் காட்டப்பட்டிருக்கிறது. மகாவிஷ்ணுவும் வராக உருவத்தோடு பூமிக்குள் குடைந்து செல்வது போல் காட்டப்பட்டிருக்கிறது. பிரும்மா விஷ்ணு

லிங்கோத்பவ மூர்த்தி

ஆகிய இருவரைக் காட்டினும் சிவனே மேலானவரென்று துணிவதற்கு 'லிங்க புராண'த்தில் ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயம் பிரும்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவரென்று தர்க்கம் ஏற்பட்டது. இருவரும் சிவனிடம் மத்தியஸ்தத்திற்குச் சென்றார்கள். உடனே பரமசிவன் ஜோதி வடிவமாக நின்றார். இருவருள் யார் தன்னுடைய காலாக்னி ரூபத்தின் உச்சியையோ அடியையோ முதல் முதலில் கண்டுபிடித்துத் தன்னிடம் வந்து தெரிவிக்கிறாரோ அவர்தான் பெரியவரென்று சிவன் சொன்னார். உடனே பிரும்மா அன்ன ரூபமாக உயரப் பறந்து சென்றார். விஷ்ணு வராக உருக்கொண்டு பூமியைக் குடைந்து சென்றார். அநேகமாண்டுகள் கழிந்தன! ஆயினும் இவர்கள் அந்த ஜோதியின் அடிமுடியைக் காணவில்லை.

எவ்வளவோ தூரம் உயரச் சென்றும் முடியைக்காணாது நிற்கும்போது மேலேயிருந்து வருகிற ஒரு தாழம் பூவை பிரும்மா கண்டார். அதுவோ அவ்விடம் வருவதற்கு

முன் அநேகமாயிரம் ஆண்டுகளுக்குமுன் சிவனுடைய சிரசி லிருந்து விழுந்ததாகத் தெரிந்தது. பிரும்மா அதை எடுத் துக்கொண்டு சிவனிடம் சென்று தான் சிரசைக் கண்டுவிட்ட தாகவும், அந்தச் சிரசிலிருந்தே இந்தப் பூவை நேரில் எடுத் துக் கொண்டு வந்ததாகவும் சொன்னார். சக

பிரும்ம சிரச்சேத லமுமறிந்த அந்தப் பரபிரும்மமாகிய மூர்த்தி பரமசிவனை ஏமாற்றமுடியுமா? இவ்வாறு பொய்யைச்சொன்ன இந்தப் பிரும்மாவின்

சிரசுகளில் ஒன்றைஉடனே சிவன் கிள்ளி எறிந்து விட்டார். இதனால்தான் இதற்குமுன் ஐந்து தலைகளுடன் இருந்த பிரும்மாவுக்கு இப்போது நான்குதலைகள் மட்டும் இருப்பதால் அவரை நான்முகப் பிரும்ம தேவன்என்று சிலர் மொழிகின்ற னர். மேலும் அதன்படியே பிரும்மாவுக்குக் கோவில்களும் பூஜைகளும் கிடையாதென்றும் சபித்தார். இப்போது பிரும் மாவுக்கு இந்தியாவில் எவ்விடததிலும் கோவில் கிடையாது. இவவிதம் பிரும்மாவுக்கு உதவியாக இருந்த அந்தத் தாழம் பூவை இனித தனது பூஜைக்கு லாயக்கில்லை என்றும் விதித்தார்.

அதே கம்பத்தில் வடக்கு நோக்கிக் கைலாச பர்வதத் தின்மீது சிவன் விற்றிருக்கும் காட்சி மிகவும் நேர்த்தி யானது. வேலைப்பாடு வெகு ரம்யமாகவும் கைலாச பர்வதம் மகா சாமர்த்தியமுடனும் செதுக்கப்பட் டிருப்பதால் இதைப்பார்ப்போர் யாவ ரும் ஆச்சர்யத்தினால் அப்படியே பார்த்தபடியே ஸ்தம்பித்து நின்று விடுகின்றனர்.

கைலாசகிரியைத் தன் தலைமீது சுமந்து பத்துத்தலை இரு பது கைகளுடன் ராவணன் பெரிய உருவத்துடன் தவம் புரியும் காட்சி பார்க்கத்தக்கது. கைலயங்கிரிக்குமேல் சிவ

னும் பார்வதியும் வீற்றிருக்கிறார்கள். பரமசிவன் கணேச ருக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறார். ஓர் சமயம் ராவணன் கைலயங்கிரியைப் பார்வதி பரமேஸ்வரரோடு பெயர்த்து எடுத்துத் தனது தலைநகரை அலங்கரிக்கக் கொண்டு போக நினைத்தான். அந்த நோக்கத்துடன் வடக்கே சென்று கைலாச பர்வதத்தைக் கொண்டு போவதற்காக அதை அசைத்தான். பர்வதமகொஞ்சம் அசைந்தவுடன் பார்வதி தேவி பயந்து சிவனை இறுக கட்டிக்கொண்டாள். சிவ னும் தனது ஞானக்கண்ணால விஷயத்தைத் தெரிந்து கொண்டார. பகவானும தனது கால் கட்டைவிரலால் மலையின் உச்சியை அமுக்கவும், பர்வதம் பூராவும் மகாவேகத் துடன் கீழே இறங்கி ராவணனையும் பூமியோடு சேர்த்து அமுக்கிற்று. தப்பிச் செல்வதற்கு வேறு யாதொரு உபாய மும் காணுமல ராவணன கடவுளைத் துதித்துக் கீதம் பாடத் தொடங்கினன. தனது இருபது கைகளாலும் சாம வேதததை வீணையில் வாசிததான். இந்தக் கதை இந்தியா வில் வேறு எவ்விடத்திலும் இவ்வளவு அழகுடன் சிலை ரூபமாகக் காட்டப்படவில்லை.

இநதத் தூணிற்கெதிரேயே, சிவபிரான அநுக்ரஹ மூர்த்தியாகக் காக்ஷியளிக்கிறார். இவ்வநுக்ரஹ மூர்த்தியின் தாதபர்ய மென்னவெனில், சிவபிரான் தன் பக்தாகளின் தூய்மையான பக்திக்கும், கொடுந்தவத்திற்கும் மெச்சி, அவர்கள் கேட்ட வரங்களை வழங்குவதேயாகும். இக் கம் பத்தடி மண்டபத்தில அம்மாதிரி இரு விசித்திரமான சிலை களை நாம் காண்கிறோம். இவைகளில் ஒன்று சிவபிரான் மஹாவிஷ்ணுவிற்கு ஓர் வரமருளுவதுதான். இந்த மாதிரி சிலை கம்பத்தடி மண்டபத்தில மேலக்கோடியில் தெற்கு நோக்கி யிருக்கிறது. இச்சிலையில் சிவனும், பார்வதியும்

**கேசவ அநுக்ரக மூர்த்தி**

பத்ராஸனத்தில் அமர்ந்திருப்பதைக் காண்கிறோம். பரமனின் வலதுகால் கீழே தொங்கிக்கொண்டிருக்கிறது. நான்கு கைகளில், வழக்கம்போன்று இருகைகள் மானையும், மழுவையும் ஏந்தி நிற்கின்றன. அவரது வலது கீழ்க்கை மிகுந்த பயபக்தியுடனும், அடக்க வொடுக்கத்துடனும் நிற்கும் விஷ்ணுவிற்கு ஓர் சக்கரத்தைக் கொடுப்பதைக் காண்கிறோம். இடது கை அபய முத்திரையை காண்பிக்கிறது. சிவனுக்கிடது பக்கத்திலிருக்கும் பார்வதியம்மை தன் வலக்கையை சிவன் துடையி லழுத்திக் கொண்டிருப்பதையும், வலக்கை விஸ்வமயமாயிருப்பதையும் காண்கிறோம். சிற்பியின் மனோபாவத்துகந்தவாறு விஷ்ணு ஒரு சிறுவன்போல் காட்டப்பட்டிருக்கிறார். அவர் சிவனின் இடது காலைத் தொட்டவண்ண மிருக்கிறார். சிவனது வலதுகையிலிருந்து சக்கரம் நழுவிக்கொண்டிருப்பது போல் காண்கிறது. இம்மூன்று சிலைகளின் தனித்தனி பாவங்களை அறிந்துகொள்ளல் எளிது. சிற்பியின் திறனை மெச்ச, நாம் கதையை அறிந்துகொள்வது அவசியம். விஷ்ணு சிவனிடமிருந்து சுதர்சனச் சக்கரத்தைப் பெறும்பொருட்டு தினம் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களால் அவரை அர்ச்சித்து வந்தார். ஓர் நாள் ஓர் புஷ்பம் மட்டும் காணப்படவில்லை. ஆனாலும் விஷ்ணு தயங்கவில்லை. தனது கண்களிலொன்றைப் பிடுங்கி பூவிற்குப் பதிலாகச் சமர்ப்பித்தார். தன் பக்தனின் அபார பக்திக்கு மெச்சி, சிவன் சுதர்சனத்தைக் கொடுப்பதை இச்சிலை குறிக்கிறது. சிவனது முகத்தில் புன்னகை தவழுகிறது; விஷ்ணுவின் முகத்தில் பக்திக் களை காண்கிறது; பார்வதியின் முகத்திலோ சாந்தம் குடிகொண்டிருக்கிறது.

மற்றொரு அநுக்ரஹ மூர்த்தியின் சிலே, சண்டிகேஸ்வரரை சிவன ஆசீர்வதிதது, அநுக்ரகிப்பதேயாகும். உயர்ந்த பீடத்தில் சுகாசனத்தில் பார்வதியுடன் பரமன் உட்கார்ந்திருக்கிருர். அவரது இடது கால் தொங்கிய சண்டிகேஸ்வரர் வணணம் ஒரு சிறு (மாய) பீடத்திலிருந்தி யிருக்கிறது. இடப்பக்கத்திலிருக்கும் பார்வதியின் வலக்கால் மடக்கப்பட்டிருக்கிறது. இடக்கால் தொங்கிய வண்ணமிருக்கிறது. வழக்கம்போன்று சிவனுக்கு நான்கு கைகள் இருக்கின்றன. இரண்டு கைகளில் மான், மழுவேந்தியிருககிருர். மற்ற இரு கைகளாலும் தன் காலடியில் நிற்கும் பக்தனுக்குப் பூச்சூட்டிக்கொண்டிருக்கிருர். ஆகம சாஸ்திர முறைப்படி சண்டிகேஸ்வரர் குழந்தைகளுக் கேற்பட்ட ஆபரணங்களினுல் அலங்கரிக்கப்பட்டிருக்கிருர். காஸ்யபசில்பம் கூறுவது போனறு தக்ஷிணுமூர்த்திக் கடுத்தபடி பெருமை வாய்ந்தது சணடிசேஸ்வரரின் உருவந்தான. சண்டிகேஸ்வரரின பக்தியைக் குறிக்கும் கதை பின்வருமாறு :—

இச்சண்டிகேஸ்வரரின் உண்மைப் பெயர் விசாரசருமன் என்பது. பிராமணுய்ப் பிறந்திடினும், மாடு மேய்க்கும் தொழிலேயே மேற்கொண்டார். இவரிடம் உள்ள மாடுகளோ மிகுந்த சந்தோஷத்துடன் வாழ்க்கையைக் கழித்தது மட்டுமல்லாமல் அளவுக்கு மிஞ்சி, தாமாகவே பாலைச் சுறக்க வாரம்பிததன. அப்படிப் பால் வீணுவதைக் சண்டேசாநுக்ரக கண்ட விசாரசருமன், அப்பாலே எல்லாம் மூர்த்தி திரட்டி, தான் மண்ணுற் பிடித்த லிங்கத்தின்மீது அபிஷேகம் செய்தார். இது கண்டு பொருத சில விஷமக்கார மாட்டிடையர், அவரது தகப்பனுரிடம் சென்று, விசாரசருமன் பாலெல்லாம் கறந்து

மண்ணில் கொட்டுகிறான் என்று கோள்சொல்லினர். தகப்பனும் நேரில வந்து இச்செய்கையைக் கண்ணுற்றார். மிகுந்த சினங்கொண்டு அச்சிவலிங்கததைக் காலாலுதைத்தார். உடனே விசாரசருமர், தகப்பனென்று கூட யோசியாது, அருகிலிருந்த ஓர் கோடரியால் அவரது காலைத் துண்டித்து விட்டார். என்னே அவரது சிவபக்தி! சிவனும் பிரத்யக்ஷமாகி அவரை யனுக்ரஹித்தார்!

**அர்த்தநாரீஸ்வர மூர்த்தி**

வேறு ஒரு தூணில் பரமசிவன் அர்த்தநாரீஸ்வரராகக் காணப்படுகிறார். அவரே சிவன், அவரே சக்தி. பரமசிவனின் இவ்வித உருவத்தின் தாத்பர்யத்தை எடுத்துக் காட்ட ஓர் புராணக் கதை விளங்குகிறது. கடவுளைப் பிரதக்ஷணம் செய்து வரும்போது ஒவ்வொரு தினமும் பிருங்கி என்ற மகரிஷி ஈஸ்வரியையும் சேர்த்து பிரதக்ஷணம செய்யாமல் பரமசிவனை மட்டும் பிரதக்ஷணம் செய்து வந்தார். இவ்வாறு ரிஷி பிரதக்ஷணம் செய்து வருவதின் பொருட்டுத் தன்னை அவமானம் செய்வதாகப் பார்வதி கருதி, அந்த ரிஷியின் உடலில் தனது கூறாக உள்ள உதிர மாம்சங்களை, சிறிதுமில்லாமல் ஆக்ராணித்துக்கொண்டாள். சிவகூறாக உள்ள எலும்பையும் நரம்பையும் உட்கொண்ட ஓர் பதுமைபோல் ரிஷியானவர் தள்ளாடி நின்றார். அந்த ரிஷியும் பரமசிவனைக் குறித்துப் பிரார்த்திக்கவே கடவுளும் அவருக்கு மூன்றாவது கால் ஒன்று கொடுததார். தன் எண்ணம் இவ்வாறு தடைப் பட்டபொழுது பார்வதியும் பரமசிவனிடம் விருத்தாந்தததைச் சொன்னாள். பரமசிவனும் பிருங்கி ரிஷியால் தன்னைமட்டும் சுற்றிவர முடியாதவாறு பார்வதி தேவியையும் தன் சரீரத்தில் இடது பக்கததில் சேர்த்துக் கொண்டார். அர்த்தநாரீஸ்வர உருவத்தில் இடது பக்கம்

பார்வதி தேவியையும் வலப்பக்கம் பரமசிவனையும் காட்டப் பட்டிருக்கும். உருவத்தின் மீதுள்ள ஆபரணங்களும் வெகு நுட்பமாகவும் வேலைப்பாடுடனும் செதுக்கப்பட்டிருக்கின் றன. வலப்பக்கததில் பரமசிவனுக்கு ஆடையான புலித் தோல் முழங்கால் வரை மட்டும் இருக்கிறது. இடது பக்கத் தில் பார்வதி தேவியின் புடவையோ கணுக்கால்வரை இருக் கிறது. நமது தேசத்தில் வடக்கேயுள்ள சில கோவில்களில பல்லவர்காலத்துச் சிற்ப வேலைகளில அர்த்தநாரீஸ்வர சிலைகளில் ஸதிரீ பக்கததில் மிகையாகவும் சரிசமானமில்லா மலும் இருக்கிறது. இவ்விடத்தில் அப்படியில்லாமல் அர்தத நாரீஸ்வர உருவமானது இரு பக்கங்களும் சரிபாதியாக வைத்து வேலை செய்திருபபது முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. இந்த உருவத்தைப் பார்க்கும்போது இது ஒரு சாதாரணமான உருவமென்று நமக்குததோன்றாத வண்ணம் அவ்வளவு விசித்திரமான வேலைப்பாடுடன் இதை சிற்பி நிர்மித்திருக்கிறார்.

அந்த உருவத்திற்குப் பக்கத்தில் வேறு ஒரு தூணில் ஹரிஹரர் என்ற சேர்க்கை உருவமும் ஒன்று வைக்கப்பட் டிருக்கிறது. இந்த உருவத்தில் இடப்பக்கம் விஷ்ணுவும் வலப்பக்கம் பரமசிவனும் இருக்கிறார்கள். அவ்வாறே விஷ்ணு வுக்கு ஏற்பட்டவையான சங்கு, முத்து கேசவார்த்தமூர்த்தி மாலை, திருத்துழாய் மாலை, காதுகுண் டலங்களும் இடது பக்கத்தின் உருவத்தி னிடத்துக் காணப்படுகின்றன. வலப்பக்கத்திலோ மேற்கை யில் மானும், கீழ்க்கையில் பாம்பும் இன்னும பரமசிவனுக் குரிய ஆபரணங்களும் காணப்படுகின்றன.

கம்பத்தடி மண்டபத்தின் ஒரு தூணில் நாம் பார்க்கும் "கஜாசுரமூர்த்தி" என்ற உருவமே பரமசிவனின் சம்ஹார

ரூபங்களில் மிகவும் பயங்கரமானதாகும். பரமசிவன் ஒரு யானையைக் கொன்று அதன் தோலைப் பிரபைபோல போட்டுக்கொண்டு நர்த்தனம் செய்வதை நாம் இங்குக் காண்கிறோம். மற்றக் கோவில்களில் இம்மாதிரி மூர்த்திகளிருப்பினும் அவை எல்லாவற்றையும்விட இவ்விடமுள்ள மூர்த்தியே மிகவும் அழகு பொருந்தியது. கஜாசுரமூர்த்தியோடு மற்றவிடங்களில் சேர்த்துக் காட்டியிருப்பது போல் இவ்விடத்தில் விநாயகர், முருகக் கடவுள் இருவரையும் காணவில்லை. பரமசிவனின் பாதத்தில் கஜாசுரனின் தலையை நாம் காண்கிறோம். உயர யானையின் வாலும், பக்கங்களில் யானையின் பாதங்களும் தெரிகின்றன. பரமசிவன்மீது வெகு விசித்திரமான அநேக ஆபரணங்களும் காணப்படுகின்றன. சிவனுக்கு எட்டுக் கைகள் இருக்கின்றன. வலக் கைகள் மூன்றில் சூலம், உடுக்கு, பாசம் மூன்றும் இருக்கின்றன. இடதுகைகள் மூன்றில் இரண்டில் மண்டையோடுகளும் கேடயமும் இருக்கின்றன. மூன்ருவது கை விஸ்மய முத்திரைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. பரமசிவனின் அமைதியான,

கஜாசுர மூர்த்தி

சாந்தி பொருந்திய முகத்தை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. இந்த அசுரனைப் பரமசிவன் கொன்றதின் காரணங்கள் பலவிதமாகக்கூறப்படுகின்றன. ஆயினும் பரமசிவன் ஒரு யானையைக் கொன்று அதன் தோலைத் தான் உடுத்துக் கொண்டாரென்றுமட்டும் எல்லாம் ஒப்புக் கொள்கின்றன. கூர்ம புராணத்திலோ காசியிலுள்ள லிங்கத்திலிருந்து பரமசிவன் திடீரென்று கிளம்பி, லிங்கத்தைச் சுற்றித் தியானம் செய்துகொண்டு உட்கார்ந்திருக்கும பிராம்மணர்களைக்,கொல்வதற்காக யானை உருவோடு வந்த அசுரனைக் கொன்ருரென்று சொல்லப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில்

மாயவரத்திற்குத் தெற்கே யுள்ள வழுவூர் என்ற கிராமத்தில், பரமசிவன் இந்த யானை அசுரனைக் கொன்றதாக ஐதீகம் இன்னும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த ஒரு இடத்தில் மட்டுமே கஜாசுரமூர்த்தியின் விக்ரஹம் இருப்பதாகவே நினைக்கவேண்டியிருக்கிறது. இது போன்ற கஜஹரமூர்த்தி வசந்த மண்டபத்தில் ஓர் தூணில் இருக்கிறது.

---

## அத்தியாயம் 8

கம்பத்தடியில் தூண்களிலுள்ள சிலைகளில் ஜனங்களால் மிகவும் பாராட்டப்படுவது மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்களின் விவாகக் காட்சிச் சிலையே. இவ்விடம் மஹாவிஷ்ணு மீனாக்ஷியின் வலது பக்கம் நின்றுகொண்டு மீனாக்ஷி சுந்திரேஸ்வரர்கள் ஒருவருக்கொருவர் பிடித்துக் கொண்டிருக்கும் கைகளில் தாரை வார்க்கிறார். முற்காலத்து நாகரிகத்தின்படி பெண்டிர்களின் வினயத்தை ஒருவிதக் குற்றம் குறையுமில்லாமல் மீனாக்ஷியின் முகத்தில் சிற்பி காட்டியிருப்பது மிக்க விந்தையே. பரமசிவனை மூன்று கண்களோடும் நான்கு கரங்களுடனும் சிற்பி காட்டியிருககிறான். தமது வலக்கையால் சிவன் மீனாக்ஷியின் வலக்கையை பிடித்திருக்கிறார். மறறக் கைகளில் மானையும் மழுவையும் சிவன் பிடித்திருக்கிறார். இடது பக்கததின் கீழ்கையானது அபய முத்திரை காண்பித்துக் கொண்டிருக்கிறது. கீழே பிரம்மாவானவர் ஓம குண்டத்திற்கு முன் ஓர் தாமரைப்பூமீது உட்கார்ந்து ஓமம் செய்துகொண்டிருப்பதையும் கைகளில் ஜபமாலை, கலசம், அக்னீ, அகப்பை முதலியவற்றை ஏந்தி யிருப்பதையும் காணலாம்.

மீனாக்ஷி
சுந்தரேஸ்வரர்

திருபுராந்தக மூர்த்தி என்று சொல்லப்படும் மூன்று நகரங்களையும் எரித்த சிவனுடைய ரூபமானது அவரது முக்கியமான ரூபமாகும். இவ்வுருவம் கம்பத்தடிமண்டபத்திலும் புதுமண்டபத்திலும் காணப்படுகின்றது. கம்பத்தடி மண்டபத்திலுள்ளது அதிக வேலைப்பாடுடன் மிக்க அழகாகவும் அமைந்திருக்கிறது.

**திருபுராந்தக மூர்த்தி**

நான்கு குதிரைகள் கூடிய தன்னுடைய அழகான தேரில் ஏறிக்கொண்டு பரமசிவன் யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போகிற காட்சியை நாம் இவ்விடம் பார்க்கிறோம். பரமசிவனது வலதுகால் சற்று முன் வைத்துப் இடது கால் சற்று பின் வளைந்திருப்பதும் அவருடைய நடையின் அவசரத்தை நன்கு விளக்குகிறது. பரமசிவன தனது கால் கட்டைவிரல்களிலேயே நின்று கொண்டிருப்பதுபோல் காணப்படுகிறார். வலதுகை சிம்ஹா கர்ண முதநிரை யிட்டுக்கொண்டும வில்லில்தொடுத்த அம்புடனும் காணப்படுகிறது. ரதத்தை பிரும்மாவே செலுத்துகிறார். அவர் தலையைக் குதிரைகளின் தலைக்கு மேல் நன்கு காணலாம். இந்தத் தூணுக்கெதிரில் சிவனை எதிர்த்துச் செல்லும் தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்புன்மாலி என்ற மூன்று அசுரர்களையும் நாம் பார்க்கலாம். சகல பாபங்களும் உருவெடுத்தாற்போல் வந்த அரக்கர்களைக்கொல்லும் போதும் பரமசிவன் முகததில் அமைதியையும் கோபமற்ற குறியையுமே நாம் பார்க்கிறோம். இவ்வளவு சிரமசாத்தியமான கார்யங்களையும் செய்யும்போது முகத்தில் யாதொரு கஷ்டம், கோபம் முதலியவற்றை நாம் காணாமலிருப்பது கடவுளுக்கு இவை எல்லாம் கேவலம் ஒரு அரிய விளையாட்டுக்குச் சமானம் என்று நன்கு உணர்த்துகின்றன.

எதிர்த் தூணில் செதுக்கப்பட்டிருக்கும் மூன்று அசுரர் களும் தாரகாசுரன் என்ற அசுரனின் புதல்வர்கள். அரும் தவம் புரிந்து மூவரும் பிரும்மாவினிடமிருந்து மூன்று கோட்டைகள் வரணாகப்பெற்றார்கள். ஒன்று தங்கத்தினால்கட் டப்பட்டுச் சுவர்க்கத்திலும், மற்றொன்று வெள்ளியால் செய் யப்பட்டு ஆகாயத்திலும், வேறொன்று அசுராகள் இரும்பினால் இயக்கப்பட்டு பூமியிலும் வரம் பெறல் இருந்தன. ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை இம் மூன்று கோட்டைகளும் விரும்பிய இடத்திற்கு பெயரவேண்டும் என்றும் அப்புறம் மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தபோது சிவபெருமானே ஒரு கணையால் அழித்தாலன்றி வேறு யாவராலும் அழியாவரம் வேண்டும் என்றும் வரம் பெற்றார்கள்.

இம் மூன்று அரக்கர்களும் செய்த கொடுமைகளும் அட்டூழியங்களும தேவர்களால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் பிரும்மாவிடம் சென்று முறையிட்டார்கள். பிரும்மாவும் இவர்கள் கோட்டைகளை ஒரே காலததில் ஒரு அம்பினால் நாசம் செய்யத்தக்க ஆயுதம் பரம சிவனிடம்தான் இருக்கிறதென்று சொன்னார். அவரிடம் போய் எல்லோரும் குறையைச் சொல்லிக்கொள்ளவும் புத்திமதி கூறினார். அப் படியே இவர்கள் பரமசிவனிடம் சென்று அசுரர்கள் வுதம் முறையிடவே அவரும் இணங்கி யுத் தத்திற்குச் சென்றார். தேவர்களும் வெகு திருப்தியாகிப் பரமசிவனுக்குப் பலபணிவிடைகள் செய்தார் கள். விஷ்ணு பரமசிவனுக்கு அம்பாக ஆனார். அக்கினியை அதன் முனையாகவும் இயமனை அதன் சிறகுகளாகவும் பூமி யனத்தேராகவும்,சூரிய சந்திரர்களை தேர்ச்சக்கரங்களாகவும் கொண்டார். பரமசிவன் நான்கு வேதங்களை நான்கு குதிரை

களாகவும், மகமேருபருவதத்தை வில்லாகவும். வாசுகியென்ற பாம்பை நாண்கயிறாகவும் செய்துகொண்டார். பிரும்மா பரமசிவனுக்குச் சாரத்தியம் செய்தார். இந்த விஷயங்களைத்தான் இந்தத் தூணில் சிற்பி பொரித்திருக்கிறான்.

இப்படி யுத்தத்திற்குச் சென்ற பரமசிவனின் முகமும் இவ்விடத்தில் மிகவும் அமரிக்கையாகக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு மாபெரும் காரியமும் கடவுளுக்கு ஒரு லீலை என்று இது நன்கு விளக்குகிறது. பரமசிவனின் நகங்களும நரம்புகளும் சிலையில் வியக்தமாகத் தெரிகின்றன. ரதமும் வெகு விசித்திரமாக ஜோடிக்கப்பட்டுக் கடவுளை ஏறிச்செல்லும ரதம் எவ்வளவு அழகாக இருத்தல்வேண்டுமோ அவ்வளவு அலங்காரமாயும், அழகாயும் இருக்கிறது.


**காலஹர மூர்த்தி** சம்ஹார மூர்த்தியின் வேறு ஒரு உருவம் காலஹர மூர்ததி. இது அடுதத கம்பத்தில் காணப்படுகிறது. தன்னுடைய பரமபக்தனை மார்க்கண்டனின் உயிரைக்கொண்டு போக வந்த இயமனைப் பரமசிவன் கொல்லும் காட்சியும் இவ்விடம் காணலாம்.

மிருகண்டு ரிஷி வெகுகாலம புத்திரனில்லாமல இருந்தார். அவர்சிவபிரானைக் குறித்துத் தவம்புரிந்தார். பரமசிவன் மிருகண்டுவின் தபசிற்கு மெச்சி பிரத்தியக்ஷமாகி, "புத்தி


**மார்க்கண்டேயா** யற்ற, ஆனால் பூர்ணமான ஆயுசைபெற்ற நூறு பிள்ளைகள் வேண்டுமா? அல்லது வெகு புத்திசாலியாகவும் பதினாறுவயதே கொண்ட அற்பாயுசான ஒரே பிள்ளை வேண்டுமா?" என்று கேட்டார். புத்திசாலிப் பிள்ளையையே மிருகண்டுரிஷி கோர, அப்படியே மார்க்கண்டன் அவருக்கு ஆவிர்ப்பவித்தான்.

கடவுள் கொடுத்த வரன்படியே மார்க்கண்டன் மகாபுத்தி சாலியாக விளங்கினான். ஆயினும் பெற்றோர்கள் மார்க்கண்டனுக்கு வயது முதிர முதிர அதிகக் கவலைப்பட ஆரம்பித்தார்கள். மார்க்கண்டனும் விருத்தாந்தத்தைத் தெரிந்து கொண்டு சிவனைப் பூஜித்துக் காலக்கிரமத்தில் பரம பக்தன் ஆனான். குறிப்பிட்டகாலத்தில் மார்க்கண்டனுயிரைக் கொண்டுபோக இயமன் வந்துவிட்டான். இந்தச்சிலையில் மார்க்கண்டன் சிவலிங்கத்தைக் கட்டித்தழுவி இருப்பதும் காட்டியிருக்கிறது. சிவனின் இடது காலின் கீழ் இயமன் விழுந்து கிடக்கிறான். அவன் முதுகின்மீது பரமசிவன் நர்த்தனம் செய்கிறார். சிவனின் வலது கால் பெருவிரல் இயமனின் கழுத்தை அமுக்குகிறது. வலது கால் அவனது இடுப்பின் மீதிருக்கிறது. இயமனின் சரீரம் முறுக்கிக் கீழே விழுந்து கிடக்கும் காட்சியைப் பார்த்தால்தான் சிலையின் அழகுவிளங்கும். அது அவ்வளவு இயற்கையாய் அமைந்திருக்கிறது அதி ஆச்சரியமே! இயமனது ஒரு கையில் கேடயம் இருக்கிறது. மற்றொரு கையில் மார்க்கண்டனைக் கட்டியிழுக்கும் பாசக்கயிறையும் காணலாம். இயமனே பரமசிவனைக் குறித்து மன்னிப்புக் கேட்கும் முகக்களையுடன் காணப்படுகிறான். மானிட சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களும் நன்கு புலப்படுமாறே இந்தச் சிலை செய்யப்பட்டிருக்கிறது. தென் இந்தியக் கோவில்களுள் காணப்படும் சம்ஹார மூர்த்திகளில் இதே உருவம் ஒரு தனி வகுப்புக்காகவே என்று நாம் அறிய வேண்டும்.

இந்த மண்டபத்திலுள்ள மற்ற உருவங்களில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது பரமசிவனை நடராஜராகக் காட்டியிருக்கும் சிலையே. இது வெகு விசித்திரமாகவும் அங்கலக்ஷணத்திற்குச் சரியாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.



நடராஜர்.



சிவன்.

நடராஜ மூர்த்தியின் உதடுகள் சற்றுப் பிரிந்து முகத்துக்கு ஒரு புன்னகையின் அழகை உண்டாக்கி நடராஜமூர்த்தி இருக்கும் காட்சிவெகு நேர்த்தி. சிற்பியோ பரமானந்தமென்ற வெகு நுட்பமான ஒரு மனோபாவத்தை வெகு சாமர்த்தியத்துடன் கல்லில் விளக்கிக் காட்டியிருக்கிறான்.

சுறுசுறுப்போடு கூடிய மௌனமும் முகத்தில் காணப் படுகிறது. நர்த்தனத்தின் வேகதையும் மும்முரத்தையும் பரமசிவனின் ஜடைகள் காற்றில் பறந்து நாலாப் பக்கத்தில் சிதறி நிற்பதிலிருந்து ஊகிக்க வேண்டும். சரீரத்தைச் சுற்றி யிருக்கும் ஆடையும், அபஸ்மார ராக்ஷதனின் முதுகில் வைக் கப்பட்டிருக்கும் காலைச் சுற்றி ஆடி நிற்பதுபோல் காட்டி யிருக்கும் சர்ப்பமும் வெகு நேர்த்தியாகவே இருக்கிறது.

அபய முத்திரையிட்டிருக்கும் வலக்கையில் ஒரு பாம்பு சுற்றி இருக்கிறது. பூமியில் கிடக்கும் ராக்ஷதன் கையில் இருக்கும் பாம்பானது நடனத்தின்போது பரம சிவனின் கையிலிருந்து நழுவி விழுந்ததாக விருக்கலாம் என்று ஹேவல் துரை யவர்கள் அபிப்பிராயப்படுகிறார். பரம சிவனின் தாண்டவ ரூபங்களில் இதுவே அதிமாகப் புகழப் பட்டு பாராட்டப்பட்டு வருகிறது. இந்தத் தாண்டவத்தை வியாக்ஞானம் செய்வதில் அநேக பண்டிதர்கள் தங்களுடைய சாமர்த்தியத்தையும் வாக்குச் சாதுர்யத்தையும் வெகுவாகக் காட்டி யிருக்கிறார்கள்.

ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—"இந்த விதமானத் தாண்டவத்தின் அழகும், அத்தாண்டவத்தில் கானத்தின் இனிமையும், சிருஷ்டியில் சமஷ்டியினிடத்துக் கிளப்பிய லக்ஷணமே உருக்கொண்டு எங்கும் பரிணமிக்கக்கூடிய சக்தி உள்ளது என்று காட்டுகிறது. எவ்வித சந்தோஷதையும்

திருப்தியையும் வெறுத்து யாதொரு குற்றமுமற்ற யதிகள் போன்றவர்களுக்கு இதைப் பார்க்குமிடத்து எவ்வளவோ நுட்பமான தாத்பர்யங்களும் அர்த்தங்களும் தோன்றுகின்றன. ஆனந்தமென்ற ஆடையுடுத்தித் தனது பாதங்கள் தாளம் போடும்போது மறதி என்ற அந்தகாரத்தின்மீது இடையிடையே ஞாபகமென்ற வெளிச்சம் பிரகாசிப்பது போல் இந்த மூர்த்தி காட்டி நிற்கிறது.

வேறொரு தூணில மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனுக்குக் குதிரை வாங்கிவந்தக் கதையின் கடைசி பாகமும் சோமசுந்தர மூர்ததியின் சிலையின்கீழ் வெகு அழகாக வரையப்பட்டிருக்கிறது. மற்றுமொரு தூணில் மகா விஷ்ணுவின் தசாவதாரங்களும் வெகு நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. சிவன் கோவில்களிலெல்லாவற்றிலும் இந்த ஒரு கோவிலிலேயே அதிகமாக விஷ்ணு சம்பந்தமான சிலைகள் காணப்படுகின்றன.

தசாவதாரம்

கம்பத்தடி மண்டபத்திற்கு நடுவே, மிக்க சிறந்த வேலைப்பாடுகளுடன் நந்தி மண்டபம் அமைந்திருக்கிறது. இம்மண்டபம் ஒரே கல்லாலாக்கப்பட்டிருப்பது மிக ஆச்சரியமே! மேலும் மிக ஆச்சரிப்படக்கூடிய விஷயமொன்றிருக்கிறது. நநதி மண்டபத்தின் மேலே, நான்கு மூலைகளிலும் கல்லாலேயே, நன்கு தனிதனியாக காண்பிக்கப்பட்ட சங்கிலிகளின் இரு கண்ணிகள் தொங்குகின்றன.

நந்தி மண்டபம்

## அத்தியாயம் 9

கம்பத்தடி மண்டபத்தை விட்டுக் கீழ்வாசற்படி போகுமிடத்தில் பரமசிவனின் மூன்று உருவங்களும் ஒரு காளியின் சிலையும் காணப்படுகின்றன. பரமசிவன் பைரவராகவும் வீரபத்திரராகவும், நடராஜ மூர்த்தியாகவும் காட்சி தருகிறார். இந்த நான்கு சிலைகளும் தென் இந்தியாவிலுள்ள சிலைகள் எல்லாவற்றிலும் மிக்க மேன்மை பொருந்திய சிலைகளாகும். நான்கும் வெகு நேர்த்தியான வேலைப்பாட்டோடு கூடியவை. எல்லாம் முழு உருவங்கள். ஒவ்வொன்றும் அசைவுடன் கூடிய ஒரு நிலைமையைக் குறித்தே நிற்கிறது.

வீரபத்திரா

காளி

இந்த நான்கு சிலைகளிலும் வெகு அழகானது பரமசிவன் நூதனமாக ஒரு தாண்டவமாடிக்கொண்டு காட்சி கொடுப்பதுதான். இந்தத் தாண்டவத்திற்கு ஊர்த்வ தாண்டவமென்று பெயர். ஆகம சாஸ்திரங்களில் பரமசிவனின் தாண்டவங்கள் நூற்றெட்டு வகையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஒன்பது பிரசித்தி பெற்றவை. இவ்வொன்பதில் ஒன்றுதான் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது. இதில் பரமசிவன் தனது வலது காலைக் காது பரியந்தம் தூக்கி நின்று தாண்டவமாடுகிறார். இநதத் தாண்டவத்தின் விருத்தாந்தம் பின்வருமாறு ஸ்தலபுராணத்தில் கூறப்படுகிறது:—பரமசிவனுக்கும் காளிதேவிக்கும் ஓர் சமயம் தங்களில் யார் நன்றாகத தாண்டவமாடுவர் எனறு ஒரு போட்டி ஏற்பட்டதாம். காளிகாதேவியும தன்னை ஒவ்வொரு தாண்டவத்திலும் பின்பற்றி விடுவதைப் பரமசிவன் கண்டு வியப்புற்று மனந்தளர்ந்தார். அப்பால்

ஊர்த்வ தாண்டவமூர்த்தி

காளிகாதேவியின் கர்வத்தை அடக்கப் பரமசிவன் தனது வலதுகாலைத் தூக்கிக் காதுமட்டும் கொண்டுபோய்நிறுத்தினதும், அவ்வாறு அக்காரியத்தைத் தானும் செய்ய காளிகாதேவி மனந்துணியவில்லை. வெட்கத்துடன் அவள் தாண்டவத்தை நிறுத்திக்கொண்டாள். இந்தச்சிலையில் சிவன், காளி இருவரும் கூடவே நர்த்தனம் செய்வதைக் காட்டியிருக்கிறது. வேறொரு கதையின்படி பரமசிவன் தாண்டவம் செய்யும்போது தன் காது குண்டலத்தைக் கீழே போட்டுவிட்டாராம். அந்தக் குண்டலத்தைத் தன் கால் கட்டைவிரலால் எடுத்து தன் காதில் யாருக்கும் தெரியாதபடியும் தாண்டவத்தை நிறுத்தாமலும் அவர் அணிந்துகொண்டாரென்றும் கூறப்படுகிறது. பரத நாட்டியத்தை நன்குணர்ந்தவர்கள் "லலாட திலகம்" என்ற நர்த்தனத்தில் கால் கட்டைவிரலால் நெற்றியில் திலகம் இட்டுக்கொள்வது என்ற நர்த்தனமும் ஓர் வகை உண்டென்று ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

**காஞ்சனமாலை**

தாண்டவமாடும் சபாபதிக்குப் பின் மீனாக்ஷியின் தாயாகிய காஞ்சனமாலா தேவியின் ரூபமும் காணப்படுகிறது. இவளோ தன் மாப்பிள்ளையின் விகாரமான ஆடையையும் விசித்திர நடனத்தையும் கண்டு மாப்பிள்ளைக்குச் சரியான புத்தி இருக்கிறதோ இல்லாவிடில் பைத்தியக்காரனோ என்று ஒன்றும் புலப்படாமல் சந்தேகக் குறியுடன் கூடிய முகத்தையுடையவள்போல் காணப்படுகிறாள் போலும்!

**வீரபத்திரர்**

மற்றொரு தூணில் வீரபத்திர சுவாமியின் பிரதிமை காணப்படுகிறது. இதுவும் பரமசிவனின் ஓர் அவதாரம். இது மயானத்தில் பல பூதாபிசாசங்களுடன் கூடிக்கொண்டு பரமசிவனும் பார்வதியும் மெய்மறந்து கோரத்தாண்டவம்

புரியும் உருவம். இந்த உருவத்திற்குப்பத்துக் கைகள் உண்டு. பிரம்மாண்டமான இந்தக் காளியின் பிரதிமைக்கு முன் அபிஷேக பண்டாரத்தின் சிலை இருக்கிறது.

சோமசுந்தரேசுவரர் சுவாமி சன்னதியைவிட்டு அப்பால் போகுமுன் எல்லோரும் கவனிப்பது ஒன்று உண்டு. இந்தக் கோவில் எவ்விதத்திலும் மீனாக்ஷிக்குப் பெருமை கொடுப்பினும் கோவிலில் சுந்தரேஸ்வரருக்குள்ள பாகமானது மீனாக்ஷியம்மனுக்கு ஏற்பட்டதைவிட இரண்டு மடங்கு அதிகமிருக்கிறது என்பதுதான். சிற்ப அழகிலானாலும் பிரதிமைகளின் அழகிலானாலும் சோமசுந்தரக்கடவுளின் பாகமே மீனாக்ஷியம்மன் சன்னதியைவிட அதிகப் ப்ராபல்யமாகவிருக்கிறது. இதன் சன்னதிகளின் விமானங்களும் அவ்வாறே இருக்கின்றன. மீனாக்ஷியம்மன் விமானததைக் காட்டிலும் சுந்தரேஸ்வரர் விமானம் பெரிதாகவும் அழகாகவும் இருக்கிறது. இக்காரணங்களை நாம் யோஜிக்குமிடத்து ஆதிகாலம் தொட்டு சுந்தரேஸ்வரருக்கு இந்தக் கோவிலில் ஆதிக்யம் அதிகமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அம்பாளை அதிகமாகக் கொண்டாடுவது 17, 18-ம் நூற்றுண்டுகளில் அதிகமாகப் பாவியிருந்த சக்தி பூஜையின் காரணமாக இவ்விடம் ஏற்பட்டிருக்கலாம். ஜெசூட் பாதிரிமார்கள் தங்கள் கடிதங்களில் சொக்கநாதசுவாமி கோவில் என்றே இதை எழுதியிருப்பதன்றி மீனாக்ஷியம்மன் கோவில் என்று எழுதவில்லை.

---

# அத்தியாயம் 10

கம்பத்தடி மண்டபத்தை விட்டுவிட்டு இருபக்கங்களி லும் தாண்டவமாடும் பரமசிவன், காளிதேவி இவர்களின் சிலைகளுக்கு இடையேயுள்ள பாதை வழியாக வெளியே சென்றால் நாம் வீரவசந்த மண்டபத்துக்கு வருகிறோம். இது 1609-1623 கி.பி.க் களில் முத்துவீரப்ப நாயக்கர் என்ற திருமலைநாயக்கருக்கு முந்திய அரசனால் கட்டப்பட்டது. எதிரில் இந்த வாசற்படியைக் காத்துக் கொண்டு நந்தி இருக்கிறது. வெளிப்புறம வருமபோது இடதுபக்கம் ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறது.

வீரவசந்த மண்டபம்

தென்னிந்தியாவின் பெருமையும், பெயரும் மதுரை யைச்சாரும்; மதுரையின் புகழோ அதில் உள்ள கோவிலையே சாரும். ஆயினும் கோவிலின் பெருமை அதனுள் அமைந் திருக்கும் இவ்வாயிரக்கால் மண்டபத்தைச் சாருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இக்கோவிலின் சுவாமி சன்னதியாகிய கீழ்வாசலுக்குச் சமீபம் இருக்கும் இம்மண்டபம் தென் இந்தியக் கட்டிடங் களுக்கும் சிலாரூபமான சிற்பங்களுக்கும் மேலான எடுத்துக் காட்டாகும். வெளிப்பார்வைக்கு அது வெகு அழகாக நிறுத் தப்பட்ட தூண்களின் சபைபோல் காணப்படுகிறதே யல்லா மல் அத்தூண்கள் முழுதும் மொததம் ஆயிரம் தூண்கள் என்று ஒருவரும் நினைக்க முடியாதவாறு அடக்கமாக வரிசையாக அமைக்கப்பெற் றிருக்கின்றன. திராவிடர் காலத்திலேற் பட்ட எல்லாக் கோவில்களுக்கும் இம் மாதிரி ஆயிரக்கால் மண்டபங்கள் உண்டு. அக்காலங்களில்

ஆயிரக்கால் மண்டபம்

அவற்றைப் பொதுஜன சபைகள் கூட்டவும் ஜனங்கள் உபயோகித்தார்கள் என்றும் தெரிகிறது.

சோழ ராஜாக்களின் கல்வெட்டுகளை நோக்குமிடத்து கோவில்களை பொதுமக்களின் சுகவாழ்வு ராஜரீக விஷயங்களை எடுத்துரைக்கும் சபையாக உபயோகப்படுத்தப்பட்டனவென்று நன்கு விளங்கும்.

நாம் இதனிடத்துக் கவனிக்கப் புகுந்தது இதன் சரித்திர சம்பந்தமல்ல: இதன் சித்திரங்களின் அழகையும் சிற்ப வேலைப்பாட்டையும் தெரிந்துகொள்ளத்தான். கலைஞனுக்கு இது ராஜ சபையுமல்ல, சுக வாழ்வு மல்ல. இது சித்திரகலையின் ஜோடிப்புதான். இம்மண்டபம் இரண்டு யானைகளால் இழுக்கப்பட்ட ஒரு தேர் போன்ற அமைப்பில் கட்டப்பட்டுளது. இம்மண்டபத்திற்குள் நுழையும் வாசலில் சுமார் ஆறு சிலைகள் நிற்கின்றன. ஜீவகாலத்தில் ஏற்பட்டிருந்த ஆகிருதிக்கேற்றவாறே இவை தயாரிக்கப்பட்டவை. இவற்றுள் முக்கியமானவை தளவாய் அரியனாத முதலியாருடைய சிலையும் ஹரிச்சந்திரனுடைய சிலையும்தான். விஸ்வநாத நாயக்கரின் மந்திரியாகிய அரியநாத முதலியார் இந்த அழகான கற்கட்டிடத்தைக் கட்டுவித்தார். அரியனாத முதலியாரின் சிலையை வெகு நேர்த்தியாகச் சிற்பி தயாரித்திருக்கிறார். இந்தத் தளவாயின் அமைப்பிலிருந்தே இவருடைய தைரியமும், உழைப்பும், ஆர்வமும் தேஜசும் நன்கு தெரியவரும். ஒன்றைப் போல் மற்றொன்று நகல் செய்பவனை இழிவான தொழிலாளன் எனவே கருதவேண்டும். ஒரு மரத்தையோ, புஷ்பத்தையோ, அல்லது தான் கண்ணுறும் வஸ்துக்களை மேலெழுந்தவாரியாக எழுதுபவனை நாம் சித்திரக்காரன்

அரியநாத முதலியார்

என எண்ணுவோமாயின், அவர்களெல்லாரிலும் தலை சிறந்து விளங்குபவன் புகைப்படம் பிடிப்போன்தான். ஆதலால், உண்மையான ஒரு சித்திரக்காரன் செய்யவேண்டியது வேறு ஒன்று இருக்கிறது. ஓர் சித்திரத்தை வரைவதோடு மட்டும் நில்லாது அதன் குணாகுணங்களை நன்கு எடுத்துக் காட்டுவதேயாம்.

அரியநாத முதலியார் ஏறிச்சவாரி செய்யும் குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடுவதுபோல் காணப்படுகிறது. அதன் கடிவாளங்களை முதலியார் வெகு கெட்டியாக இழுத்துப் பிடிததுக்கொண்டிருந்த போதிலும் அது மீறிப்போவது போல் தென்படுகிறது.

லியனார்டோ டாவின்சி (Leornardo Davinci) என்ற மிகக்கீர்த்தி பெற்ற ஐரோப்பிய சிற்பி சொல்லுகிறார். "தன்னைத் தூண்டும் எந்தக் குணத்தையும் தன்னுடைய அவயவங்களின் அமைப்பில் நன்கு வெளிப்படுத்தும் உருவம் எதுவோ, அதுவே முதன்மையான உருவமாகும்" இந்தக் கருத்தை வெளிப்படுத்தக் கூடிய உருவங்களுள் மிகச் சிறந்தது இக்கோவிலில் இதுவே. இச்சிலையின் அமைப்பும், அதனிடத்துக் காட்டியிருக்கும் வேலைப்பாடும் குதிரையும் சவாரி செய்வோரும் மனோகாயங்களில் ஒரே உருவமாகக் குறிப்பிட்டிருக்கும் சாமர்த்தியமும் இச்சிற்பியை அக்காலத்துச் சிற்பிகளுள் முதன்மை பெற்றவராக விளக்குகின்றன. சித்திரவேலையில் மிக அபூர்வமானதும் எளிதில் சிக்காததுமான, சக்தி, கம்பீரம் ஆகிய இரண்டையும் இங்கு ஒருங்கே காட்டிய சிற்பியின் சாமர்த்தியந்தான் என்னே! பெருமை சக்தி இக்குணங்களைச் சிலைகளின் பெரும் உருவங்களால் மட்டும் காட்ட இயலாது. நுட்பமான ஒவ்வொரு பாகத்தையும் எடுத்துக் காட்டாமல் பொதுப்படையாக வேலை செய்வதி

ளேயும் அவ்வேலையைக் கௌரப்படுத்தவும் முடியாது. சிலையினிடத்தில் பெருமையும் சக்தியும் நாம் கோரவேண்டுமானால் அச்சிலை ஆகிருதியில் பெரிதாகவும் அசைவு என்பதை வெளியிட்டும் அமரிக்கையும உடையதாகவே இருத்தல் வேண்டும். சிலையின் பெரு உருவத்தாலாவது அல்லது அதனுடைய வேலையைக் காட்டும் குறிகளாலாவது சக்தியைக் குறிப்பிடலாம். ஆயினும் அதனிடத்தில் கௌரவத்தைக் குறிப்பிடுவதற்கு அமரிக்கை மிக்க அவசியமானது.

அரியநாத முதலியாரின் சிலைக்கு அருகாமையில் கண்ணப்ப நாயனார் கதையைச் சிலை ரூபமாக நாம் பார்க்கலாம.

**கண்ணப்ப நாயனார்**

கண்ணபபர் ஓர் பரமசிவபக்தன். ஓர் சமயம் தன் கண்ணைப்பிடுங்கி சிவலிங்கத்திற்கு அர்ப்பணம் செய்தவர். இவர் சிலையை நாம் நன்கு கவனித்தால் இக்கதை முழுவதும் அறியலாம்.

வாசலின் மறுபக்கத்தில் தன் வார்த்தையைப் பரிபாலனம் செய்வதின்பொருட்டு எல்லாவற்றையும் இழந்த ஹரிச்சந்திரன், சந்திரமதி சிலைகள இருக்கிறது. சிற்பியோ தன் எண்ணமாகிய மேற்கூறிய கருத்தை வெளியிடததக்க உருவமும் அதற்கு ஏற்ற ஆடையும் இச்சிலையில் கற்பனை செய்திருக்கிறார்.

**ஹரிச்சந்திரன்**

இந்திய சிற்பிகளுக்கு ஒரு உருவத்தின் முகத்தினிடத்திலமட்டும் சகல கலைகளையும் குணங்களையும் உணர்த்தல்மட்டும் போதாதவைகள். அவர்களுக்குத் தாங்கள் தயாரிக்கும் உருவம் சகல பாகங்களும் சேர்ந்து ஏகோபித்துக் காட்டக்கூடிய ஒரு பெரும் மலையோ அல்லது கோவிலோ போலாகும். அப்பெரும் உருவத்தில் முகம் ஒரு சிறு பாகம்

தான். ஹரிச்சந்திரன் முகத்தில் இந்தச் சிற்பியின் கருத்தை நாம் நன்கு அறியலாம். ஹரிச்சந்திரன் பக்கத்தில் சந்திரமதி தனது இறந்த குழந்தையைக் கரத்தில் ஏந்தி நிற்கும் உருவமும் வைக்கப்பட்டிருக்கிறது. ஹரிச்சந்திரனுடைய முகத்தையும் சந்திரமதியினுடைய முகத்தையும் நாம் பார்க்கும்பொழுதே சத்தியத்திற்காகச் சொல்லவொண்ணாத துன்பங்களை அனுபவித்த, ஹரிச்சந்திரனுடைய கதை நன்கு விளங்குகிறது.

**குறவன் குறத்தி**

இவ்விரு சிலைகளுக்குப் பக்கத்தில் இரண்டு தூண்களில் குறவன் குறத்திகளுடைய உயிருருவம் போன்ற இரண்டு சிலைகளும் இருக்கின்றன. குறத்தி உருவம் எங்கும் பெயர் பெற்று எல்லோராலும் தெரிந்து கொள்ளக்கூடிய உருவம். சிற்பியும் இந்தக் குறத்தியை 4 குழந்தைகளுடன் காட்டியிருக்கிறார். ஒன்று அவள் முதுகின்மீதும் ஒன்று கூடைக்குள்ளும், ஒன்று மார்பில் தொங்கிக்கொண்டும், ஒன்று கையைப் பற்றிக்கொண்டும் இருக்கின்றன. அந்தக் கூடை எவ்வளவு அழகாகச் சிற்பியால் செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ? பார்த்தால் தான் அதன் அழகு துலங்கும். குறவனுடைய உருவமோ அகன்ற மார்புடனும், தடித்த கொழுத்த சரீரத்துடனும் கடூரமான பார்வையுடன் கூடி நிற்பது யாரையும் மயக்காது விடாது. முகத்தின் உறுதி அவன் கஷ்ட ஜீவனத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது. இவன் அணிந்திருக்கும் ஆபரணங்களோ அளவற்றவை; அவைகளை வர்ணிப்பது சாத்தியமில்லை. இக்காலத்திலும் இக்குறவர்கள் இவ்வாறே ஆபரணம் பூண்டு கொள்ளுகிறார்கள். குறவன் உருவத்தோடு கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் ஒரு குரங்கின் உருவம் நமக்கு நகைப்பை உண்



கோரவன்.

டாக்குகிறது. இவ்வுருவங்கள் எல்லாம் அக்காலத்துக் கீழ் மக்களின் நடை உடைபாவனைகளை எடுத்துக் காட்டுகின்றன. இந்த உருவங்கள் அணிந்திருக்கும் கால்ஜோடுகளும் தலைப்பாகைகளும் நம்முடைய பூர்வகால ஆராய்ச்சிக்கு அனுகூலமாக இருக்கின்றன.

**பூதம்**

இந்த உருவத்திற்குப் பக்கத்தில் பரமசிவன் ஒரு பூதத்தைக் கொல்லும் உருவம் காணப்படுகிறது. பரமசிவனின் பாதத்தில் விழுந்து கிடக்கும் அந்த பூதத்தின் முகத்தில் தனக்கு யாதொரு கதியும் இல்லை என்பதை உணர்த்தும் களையும், அதனைக் கொல்லும் பரமசிவன் முகத்திலோ அமரிக்கையும், குறிப்பு அறியமுடியாத புன்னகையும், கலந்தவாறு பொரித்திருக்கும் இந்தச் சிற்பியின் வேலைத்திறம் மிகவும் மெச்சத்தகுந்ததே.

இன்னும் நாம் இந்தச் சபைக்கு உட்பக்கம் செல்லவேயில்லை. இந்த மண்டபத்திற்குள் நாம செல்வதற்கு முன்பே நாம் பார்க்கும் இவ்வுருவங்கள் நம்மை எதிர்கொண்டழைக்கின்றன. ஒவ்வொரு உருவமும் நாம் இவ்விடம் அதை பற்றிச் சொல்லியிருப்பதைவிட பன்மடங்கு அதிகம் வர்ணிக்கத்தக்கது. ஏனெனில் இவற்றைத் தயாரித்த சிற்பி தென் இந்திய சிலாசரித்திரத்திலேயே இவ்வளவு வேலைப்பாடுள்ள சிலைகள் வேறு எங்கும் இல்லை என்று சொல்லும் வண்ணம் அவ்வளவு திறமையையும் இவற்றினிடத்துக் காட்டியிருக்கிறான். சபைக்குட் சென்று முதல் வரிசையாக நிற்கும் வெகு நேர்த்தியான கற்றூண்களை நாம் காண்கிறோம். ஒவ்வொன்றிலும் ஒரு அழகான உருவம் வெளி நீட்டி நிற்கிறது.

இவ்வுருவங்களில் ஆச்சரியமானது சரஸ்வதியின் சிலைதான். உருவம் சாமானிய மானிட அளவுக்குச் சமமாக

இருக்கிறது. ஒருவன் கலையறியாதவனானாலும் அவனால், இந்த உருவத்தின் மெல்லிய இடுப்பையும், பெருத்துக் குவிந்திருக்கும் ஸதனங்களையும், வீணை வாசிப்பதில் சாமர்த்தியமுள்ள மெல்லிய விரல்களோடு கூடிய கைகளையும் பார்க்கும்போதே அந்த உருவத்தை வெகு எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும்.

**சரஸ்வதி**


வீணையும் அதன் கையில் சரியாக பொருந்தி இருக்கிறது. வீணையிலுள்ள தந்திகள் கூட சிலையில் வெகு விமரிசையாகக் காட்டப்பட்டிருக்கின்றன. முகமோ கம்பீரமும் சாத்வீகமும் பொருந்தியதாக யிருக்கிறது. இந்த ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள உருவங்களில் இது ஒன்றுதான் மிகவும் உன்னதமானது.

மற்றொரு உருவம் மயில்வாகனமேறி காக்ஷி தரும் சுப்பிரமணியக் கடவுள். இவர் தேவர்களின் படைத்தலைவரானபடியால் அதற்குததகுந்த நிலைமை

**சுப்பிரமணியா**

இவ்விடம் இவருக்குக் குறிபபிடப்படுகிறது. இவர் ஆறு முகங்களுடனும் இல்லாமல் ஒரு முகத்துடனே காக்ஷி தருகிறார். அதனால் இவர் பால சுப்பிரமணியர் என்று தெரிகிறது. மேலும் இவர் அசுரர்களின் மீது போர்புரியும் சமயம்போலும் காணப்படுகிறது. மயிலின் சுறுசுறுப்பு அதன் மெல்லிய கால்களிலும், சரீரத்திலும் காட்டப்பட்டிருக்கிறது.

சபைக்குள் இருபக்கமும் சிலைகளால் அலங்கரிக்கப்பட்ட தூண்களுக்கிடையே நாம் நிற்கிறோம். இவ்வாறு செதுக்கப்பட்ட உருவங்களில் நீண்ட தாடியும் பருத்த ஸ்தனங்களோடு கூடியதாக உள்ள ஓர் சிலையை நாம் காண்கிறோம். பார்ப்போர் இது ஏதோ விஷமமான ஒரு உருவமென்றும், சிற்பியின் குதர்க்க புததியினால் நிர்மிக்கப்பட்டதென்றும் நினைத்து அப்பால் செல்லலாம். அது தவறான அபிப்பிராயம்



ரதி.

ஆகும். இந்து தேசத்தில் ஒவ்வொரு கோவிலும் புராதனக் கதைகளை உணர்த்தும் ஒரு பொருட்காட்சிச் சாலை எனலாம்.

**அர்ஜுனனின் பேடி உருவம்**

அவ்வாறு ஒரு கதையை விளக்காத எவ்வித உருவமும் கோவிலில் வைக்கப்படுவதில்லை. இந்த உருவம் அர்ஜுனனின் பேடி ரூபத்தைக் குறிக்கிறது. இதன் கதையும் விசித்திரமானது. ஓர் சமயம் அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்குக் கைலாயகிரிக்குச் சென்று பரமேஸ்வரனைக் குறித்துப் பலநாள் தபஸ் செய்து, பின்பு அதைப் பெற்றான். அதை யறிந்த தேவேந்திரன் தன் சத்துருக்களான காலகேய நிவாதகவசர்களைக் கொல்வதற்காக அர்ஜுனனைத் தன் உலகிற்கு அழைத்துக்கொண்டு போனான். அப்படியே அர்ஜனன் அசுரர்களை வென்று பின் சிலநாள அங்குத் தங்கினான். அப்போது தேவதாசியான ஊர்வசி அவன் அழகைக்கண்டு அவன்மீது மையல் கொண்டாள். அர்ஜுனன் அவளுடைய ஆசையைத் தீர்க்க இணங்காமல் போனதால் இவ்வாறு அலியாகப் போகும்படி ஊர்வசியால சாபம் இடப் பெற்றான் என்று சொல்லப்படுகிறது.

**ரதிதேவி**

அர்ஜுனனுக்குச் சமீபத்தில் ரதிதேவியின் உருவம் காணப்படுகிறது. தென்னிந்தியக் கோவிலகளில இம்மாதிரி உள்ள ரதிதேவியின் உருவம் நாம காணப தரிது. இவ்விடததில காட்டியிருக்கும் உருவம் அற்புதமாகவும் நூதனமாகவும் இணையற்றதாகவும் இருக்கிறது. ரதிதேவி வீற்றிருக்கும் ஹம்சமும் நடந்து செல்வதுபோல் காணப்படுகிறது.

இதிலிருந்து மன்மதனுக்குப் பரமசிவனால் ஏற்பட்ட சாபமும் பிறகு அந்தச் சாபம் வேறுவிதமாய் மாற்றி அமைக்கப்பட்ட விதமும் ஆகிய கதா விஷயங்கள் நமக்கு ஞாபகம்

வருகின்றன. ரதிதேவிக்குப் பின் ஓர் அழகிய மாதின் உரு வச்சிலையும் இருக்கிறது. அவயவங்கள் ஒவ்வொன்றிலும் அமைந்திருக்கும் அழகும், அளவும் நமது வியப்பையும் கவனத்தையும் கவருகின்றன.

கலி

பிறகு தனது தோள்மீது ஒரு ஸ்திரீயைத் தூக்கிக் கொண்டு செல்லும் ஒரு மனிதனின் உருவதையும் நாம் காண்கிறோம். கலியுக தர்மத்தை சிற்பி கள் காட்டுவது இம்மாதிரிதான். ஏனெனில் கலியுகத்தில் ஸ்திரீகளே எல்லா ஆதிக்கங்களும் பெற்று விளங்குவார்களென்று புராணக் கதைகள் கூறுகின்றன. அவற்றையும் சிற்பி வெகு அழகாகக் காட்டி இருக்கின்றான்.

மேலும் ஆயிரக்கால் மண்டபத்தில் பல மிதுன உருவங்களைக் காணலாம். அவை வாத்ஸ்யாயனரின் காம சாஸ்திரத்தை அநுசரித்து அமைக்கப்பட்டிருக்கின்றன.

யாளியின் உருவம்

நமக்கு இடது பக்கத்திலிருக்கும் தூண் வரிசையில் நாம் அவசியம் கவனிக்கவேண்டியது ஓர் யாளியின் உருவமே யாம். இந்த யாளியின் வாயில் ஓர் உருண்டைக் கல் இருக்கிறது. ஆயினும் அதை வெளியே எடுக்க முடியாது. ஏனெனில், அக்கல்லுருண்டை யாளியின் வாய்த துவாரத்தைக் காட்டிலும் பெரிதாயிருக்கிறது. இவ்வாறு ஓர் வேலைப்பாட்டைச் செய்த சிற்பியின் சாமர்த்தியந்தான் என்னே! இதேபோன்ற மற்றொரு யாளி கிளிக்கூட்டு மண்டபத்தில், விநாயகருக்கு வலப்பக்கத்தில் இருக்கிறது.

மற்றத் தூண்களைப்பற்றி நாம் பூராவும் விவரித்து எழுதுவது மிகவும் அசாத்தியம். ஆயினும் இந்து தேச சிற்பசாஸ்திரத்தையும் அதன் பால் நம் தேசத்தில் உண்டாகிய சிலைகளை

யும் நன்கு கண்டு ஆனந்திக்க இந்தச் சபையே போதுமென்று நமக்குத் தோன்றுகிறது. மேலும் கிளிக் கூட்டு மண்டபத்தில் நாம் பார்த்த பஞ்சபாண்டவர்களின் உருவச் சிலைகள் இவ்விடத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

**ஆயிரக்கால் மண்டபத்தின் அமைப்பு**

இம்மண்டபத்தில் உள்ள தூண்கள் வரிசை வரிசையாகவும் எங்கிருந்து நோக்கினாலும் ஒரே வரிசையாகத் தெரிவதும் கட்டிட சாஸ்திரத்தில் ஒரு விசித்திரமான முறையைக் காட்டுகின்றன. ஒரு மனிதன் இந்தச் சபையில எந்த இடத்தில் நின்றாலும் மத்தியிலிருக்கும நடராஜமூர்த்தியின் உருவத்தைக் கண்டு தெரிசிக்கலாம். அக்காலத்தில் இந்தச் சபை ஒரு நர்த்தன சாலையாக உபயோகப்படுத்தப் பட்டிருந்தாலும் இருக்கலாம். இக்கோவிலின் ஒரு பாகமே இவ்வளவு விஷயங்கள் அடங்கியதென்றால் கோவில் முழுவதிலும எவ்வளவு விசித்திரங்கள் இருக்கக் கூடும் என்று நாமே ஊகித்துக்கொள்ளவேண்டும்.

**கல்யாண மண்டபம்**

நாம் பார்க்கவேண்டிய மற்றொரு மண்டபமும் உண்டு. இது மீனாக்ஷி சுந்தரேஸ்வரரின் கல்யாண மண்டபந்தான். இது ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து மீனாக்ஷி நாயக்கர் மண்டபத்திற்குப் போகும் பாதையில் இருக்கிறது. இதன் மேற் கூரை செப்புத்தகடுகளால் மூடப்பட்டு நூதனமாக ஏற்பட்டதாகக் காணப்படுகிறது. மீனாக்ஷி சோமசுந்தரேஸ்வரின் கல்யாணத்தின்போது விருந்தாளியாக இருந்த குண்டோதரனின் உருவம் மண்டபத்தின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மீனாக்ஷிக்கும் சுந்தரேஸ்வரருக்கும விவாகம்ஆனபின் அன்னக்குவியல்கள் ஏராளமாக மிகுதி யிருப்பதை மீனாக்ஷியம்மன் சோம

சுந்தரக் கடவுளுக்குத் தெரிவித்தனள். கடவுளிடம் தெரிவிக்கவும் உடனே குண்டோதரனுடைய உதரத்தில் ஜடராணியைச் செலுத்தி அவற்றைப் புசிக்கும்படி குண்டோதரனைக் கடவுள் அனுப்பினார். குண்டோதரனும் அடக்க முடியாத பசி மேலிட்டு வெகு சீக்கிரத்தில் அன்னவகை எல்லாவற்றையும் புசித்துவிட்டான். பசி இன்னும் தணிந்தபாடில்லை. கடவுளிடம் முறையிட்டான். அவர் ஆங்கே அன்னபூர்ணேஸ்வரியை வரவழைத்து குண்டோதரனுக்கு இருந்த பசியை தீர்க்கும்படி ஏற்படுத்தினார். அளவற்ற பசியும் ஒருவாறு அடங்கிற்று. ஆனால் உடனே தாகம் மேலிட்டது. மதுரையிலுள்ள குளங்களின் ஜலம் எல்லாவற்றையும் குண்டோதரன் குடித்தான். ஆனாலும் தாகம் தணியவில்லை. பரமசிவன் கங்கையை வேண்டினார். அவ்வாறே பரமசிவன் சிகையை விட்டுக் கங்கை கீழே இறங்கினாள். தன்னைப் பூலோக கங்கையைவிடப் பரிசுத்தமாகத் தன்னிடம் ஸ்நானம் செய்வோரையும் புனிதமாக்குவதாக வாக்கு அளித்தால் தான் பூலோகத்தில் ப்ரவேசித்துக் குண்டோதரன் தாகத்தைத் தீர்ப்பதாக ஒப்புக்கொண்டாள். பரமசிவனும் அதற்குச் சம்மதிக்கவே மதுராமாநகருக்கு வடக்கே வைகை நதியாக கங்காதேவி பிரவகித்தாள். குண்டோதரனும் ஆற்றின் நடுவில் உட்கார்ந்துகொண்டு இரு கைகளாலும் அணைபோல் ஜலத்தைத் தடுத்துத் தன்னுடைய தாகம் தணியும் வரை ஆற்று நீரை அருந்தினான்.

---

# அத்தியாயம் 11

சோமசுந்தரரின் சன்னதியாகிய கிழக்கு வாசற்படி வழியாக வெளியே வந்து கீழச் சித்திரை வீதியைக் கடந்து சென்றால் நாம் "புது மண்டபத்திற்கு" செல்கிறோம். இந்த அழகான மண்டபம் 333 அடி நீளமும் 105 அடி அகலமும் உள்ள ஒரு நாற்கோண வடிவமாக அமைந்துள்ளது. கி. பி. 1623-ல் ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்களில் இது கட்டி முடிக்கப்பட்டதாம். சமதளமான கூரையைத் தாங்கி 124 ஸ்தம்பங்கள் நிற்கின்றன. ஒவ்வொரு ஸ்தம்பமும் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியது. ஆயினும் ஒன்றுபோல் மற்றொன்று இல்லை. தூண்களில் யாளிகளும், மனிதர்களைக் கால்களால் மிதித்து நசுக்கும் குதிரைகளும், அக்குதிரைகளின் மீது வீரர்களும் இம்மாதிரி சிலைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இடை இடையே சில ஸ்தலபுராணக் கதைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வழகான மண்டபத்தைக் கட்டுவதில் திருமலை நாயக்கர் வெகு சிரத்தை எடுத்துக்கொண்டதாகத் தெரிய வருகிறது. இவர் வேலைக்காரர்களுக்குப் பல வழியில் உற்சாகம் கொடுத்து வேலை வாங்கினார் என்பதைப்பற்றி அநேக கதைகள் வழங்குகின்றன. ஒரு தூணில் வெகு சாமார்த்தியத்துடன் அலங்காரங்கள் செதுக்கிக்கொண்டிருந்த சுந்தர ஆசாரி என்ற ஒருவனுக்கு திருமலை நாயக்கர் தானே சுண்ணாம்பு தடவி வெற்றிலை மடித்துக் கொடுத்தாரென்று ஒரு கதை சொல்லப்படுகிறது.

புது மண்டபம்

மற்றொரு தூணில் பரமசிவன் பன்றியுருவாக வந்து சில பன்றிக குட்டிகளுக்குப் திருமுலைப்பால் கொடுப்பதைக் காட்

டும் சிலை வெகு நேர்த்தியாக அமைந்திருக்கிறது. ராஜராஜ பாண்டியன் காலத்தில் கடவுள் பின்வரும்

**பன்றிக் குட்டிக ளுக்குமுலைப்பால் கோடுத்தல்**

லீலையைச் செய்தார் என்று சொல்லப்படுகிறது. மதுரைக்குத் தெற்கில் குருவிருந்த துறை என்ற ஊர் ஒன்று உளது. தேவ குருவான பிருகஸ்பதி அவ்விடத்தில் குருநாதர் என்ற பரமேஸ்வரனைக் குறிததுத் தபம் செய்து வரும் காலத்தில் அவ்விடத்தில் சுகலன் என்ற வேளாளன் தன் மனைவியான சுகலை என்பவளுடன் வாழ்ந்து வந்தான். அவர்களுக்குப் பன்னிரு குமாரர்கள் நாளடைவில் பிறந்தனர். அவர்களின் தாய் தந்தையர்கள் இக் குழந்தைகளின் இளம்பிராயத்திலே இறந்துவிட்டபடியால் அவர்கள் ஆளுவார் அடக்குவாரில்லாமல் மூர்க்கர்களாக வளர்ந்து வந்தார்கள். ஒருநாள் சமாதியிலிருக்கும் தேவகுருவை அவர்கள் கண்டு பரிகாசம் செய்தார்கள். அதனால் அவர்களை "நீங்கள் பன்றியின் வயிற்றிலே பிறந்து பிறகு தாயையும் தகப்பனையும் இழந்து துன்பபபடக் கடவீர்கள்" என்று அந்தக் குரு கொடிய சாபமிட்டார். பின்னர் அவர்கள்மீது சோமசுந்தரக்கடவுளை இரக்கங்கொணடு தாயாக வந்து இப்பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுதது வளர்த்து, பாண்டிய மன்னருக்கு மந்திரியர்களாக்கிக் கடைசியில் முக்தியும் அளிப்பாரென்று சாபத்திற்கு விமோசனத்தையும் பிருகஸ்பதி பகவான் கூறினர். இசசாபத்தின் நிமித்தமாய்ச் சகோதரர்கள் பன்றிக் குட்டிகளாகக் குருவிருந்த துறைக்குப் பக்கத்தில் இருந்த ஓர் காட்டில் ஒரு பன்றி அரசனது பெண் பன்றியிடம் ஜனித்தார்கள். பின்னர் ராஜராஜ பாண்டியன் வேட்டையாடி அவ்வனத்திற்கு வந்தபோது காட்டுப்பன்றிகளாகிய இந்தக் குட்டிகளின் தாய் தகப்பனை இருபன்றிகளையும் கொன்றார். தகப்பனை ஆண் பன்றி இறந்ததும்

அது ஒரு பெரும் மலையாக அவ்விடமே மாறிற்று. அதற்குப் பன்றிமலை என்ற பெயர் இன்றும் வழங்குகிறது. ஆயினும் அப்பன்றியின் ஆவியானது ஓர் திவ்ய விமானத்தின் மீதேறி சுவர்க்கலோகம் சென்றது.

அச்சமயம் இக்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த ரிஷிகள் அகஸ்தியரை நோக்கி எவ்வாறு இந்த மகா நிகிருஷ்டப் பிராணியின் உடல் முனிவர்கள் இருந்து தவமியற்றுவதற்கு ஏற்ற ஓர் உத்தமமான மலையாக ஏன் மாறிற்று என்று கேட்டார்கள். அவர் இப்பன்றி உண்மையில் ஒரு வித்யாதரன் என்றும், தவஞ்செய்து கொண்டிருந்த புலஸ்தியமகா ரிஷியின் தவத்தைத் வீணுகானத்தால கெடுத்தற்காக இவ்வாறு பன்றியாகப் பிறக்கும்படி சாபம் பெற்றுனென்றும், பிறகு ராஜாதிராஜனுன பாண்டியன் காட்டில் வேட்டையாட வந்து பல மிருகங்களையும் அதனுடன் இப்பன்றியையும் கொல்லும் போது தனது சுயரூபத்தை அடைவானென்ற சாப விமோசனததையும் பெற்ருன் என்றும் கூறினுர். இறந்தவுடன் பன்றி உருவம் மாறிச் சுயரூபமான விதயாதர உருவத்தைப் பெற்றுத தன் உலகததை யடைந்தான. வித்தியாதரனுனபடியால் அவனது உடலோ புண்ணியமான மலை உருவத்தை பெற்றது. தாய்ப்பன்றியும் கொல்லப்பட்ட பின் குட்டிகள் பசியால் வருந்தித் தபிக்கும்போது சோமசுந்தரக் கடவுளே தம திச்சையாக அவ்வனமார்க்கமாக வந்து கொண்டிருந்த சமயம் அவர்களின் துர்பாக்கிய நிலையைக் கண்டு மனமிரங்கினுர். பன்றிக்குட்டிகளின் கஷ்டத்தைத் தீர்க்க எண்ணி அவற்றின் தாய்ப் பன்றியின் வடிவுடன் வந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்து, அவைகளுக்கு மிகுந்த பலமும், வீரமும், ஞானமும், பெருமையும், நற்குணங்களும் உண்டாகச்செய்து முகம் மூட்டும் பன்றிமுகமாகவும், உடம்பெல்லாம் மனிதவடிவமாக

வும் செய்து "கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயற்கண் மங்கை நாயகன்" அனுக்ரகித்து மறைந்தார்.

**நாயக்க மன்னரின் சிலைகள்**

இம்மண்டபத்தின் நடுவிலுள்ள இரு பக்கத்துத் தூண்களிலும் விஸவநாத நாயக்கர் முதல் திருமலை நாயக்கர் வரை யுள்ள எல்லா நாயக்க மன்னர்களின் சிலைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. சிலைகள் அம்மன்னர்களை உயிருடன் காண்பதுபோல் வெகு திறமையாகச் செதுக்கப் பட்டிருக்கின்றன. இந்திய சிற்பிகளும் முற்றிலும் கற்பனா சக்திக்கு ஈடுபடாமல உள்ளதை உள்ளவாறே கல்லில் செதுக்கும் சாமர்த்திய முள்ளவர்களென்று இது நன்கு விளக்கும்; இவ்விடத்தில் உள்ளதை உள்ளபடி கூறுவதைக் கேவலமான சிலைக்குக்கூட இவர்கள் கொண்டுபோய் விட்டார்களென்றும் தெரிகிறது. திருமலை நாயக்கரின் மனைவியருள் ஒருவருக்குத் துடையில் ஏதோ ஒரு வடு இருந்ததாம். சிற்பிகள் அந்த மாதின் சிலையைச் செதுக்கும் போது எத்தனை சிலைகள் செதுக்கினாலும் எல்லாவற்றிலும் துடை பாகத்தில் ஒரே இடத்தில் தங்களுக்குத் தெரியாமலே கல்லானது தெரித்துக் காயம் விழுந்தது என்றும், அதுவே அந்த அடையாளம என்றும் கோவில் பட்டர்கள் சொல்லுகிறார்கள். தனக்கு மட்டும் தெரிந்த இவ்வளவு ரகசியமான விஷயம் பிறருககு எவ்வாறு தெரிய வந்ததென்று திருமலை நாயக்கர் வெகு சந்தேகப்பட்டார். ஆயினும் சிற்பிகளுககு எவவித சாமர்ததியமும் கடவுளருளால் தான் ஏற்படுகிறதென்றும், இதுவும் அவ்வாறே ஒரு விசேடமென்றும திருமலை நாயக்கர் அறிந்துகொண்டார்.

இந்த மண்டபம் திருமலைநாயக்கர் காலத்தில் கட்டப்பட்டுக் கோவிலின் மற்றப் பாகங்களைவிட நூதனமாக ஏற்பட்டு

படியால் "புது மண்டபம்" எனப் பெயர் வந்தது போலும்! மண்டபம் முழுவதும் கருங்கல்லே உபயோகிக்கப் பட்டிருக்கிறது. இது கீழ்மேலாக அமைந்துள்ளது. மேற் பரப்பு பூமியிலிருந்து 25 அடி உயரம் இருக்கிறது. மேற்கூரை சமதளமாகவும் பூமிக்கும் அதற்கும் ஒரே உயரத்தை எல்லா இடத்திலும் உடையதாகவும் உளது. நாலாப் பக்கத்திலும் விநோதமாகத் தயாரிக்கப்பட்ட முகப்புகளால் சூழப்பட்டிருக்கிறது. வெளிப்புறம் தெற்கிலும்வடக்கிலும் பக்கத்திற்கு 30 வீதமும், உட்புறம் பக்கத்திற்கு 26 வீதமும் தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் இருபக்கத்திலும் உள்ள கஜஹாரமூர்த்தி, ஏகபாதமூர்த்தி இருவர்களின் சிலைகளையும் நாம் காணலாம். கஜஹாரமூர்த்தியைப்பற்றி முன்பே கூறியிருக்கிறது. ஏகபாத மூர்த்தியைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

"ஸர்வ சம்ஹார காலத்தில் உலகின்கண் உள்ள சராசர வஸ்துக்கள் யாவும் சக்தியில் ஒடுங்குகின்றன. அக்காருண்ய சக்தியார் தம்மிடம் ஒடுங்க, சிவபிரான் ஒருவரே அழியாதிருந்தருளுவர்"என்று வேத சிவாகம புராணாதிகள் சிவனின் ஏகதவத்தைப் ப்ரதி பாதிக்கின்றன. இவரே ஸர்வ காருண்யராகிய பகவான். அணிமாதி அஷ்ட சித்திக்கும் காரண மானவர். பிரணவ வாச்சியர்; பர்க்க பகவத் சப்த வாச்சியர். இதனால் இவரே ப்ரளயகாலத்தில் தனிப்பொருளாய் நிற்பவர் என்றும் மற்ற தேவர்களுக்கும் முதல்வர் என்றும் ஏற்பட்டது. இந்த வைபவங்களுடன கூடிய சிவபெருமான் ஸர்வ ஸம்ஹாரகாலத்தில் யாவரும் லயமடைய எல்லா வுலகும் தமது திருவடியில் பொருந்தி, தான் மட்டும் தனிப்பொருளாய் நிற்பதால் இவருக்கு ஏகபாதமூர்த்தி என்று பெயர் வந்தது.

ஏகபாதமூர்த்தி

உட்புறமுள்ள இரண்டு வரிசைத் தூண்களுக்கும் இடையே, மேற்குக் கடைசியில் முழுவ

வசந்த மண்டபம் தூம் கரும் சலவைக்கல்லால் கட்டப்பட்ட ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. இதற்கு வசந்த மண்டபம் என்று பெயர்.

தூண்களுக்கு வெளியே தெற்கிலும் வடக்கிலும் அகழ் போன்ற இரண்டு பாதைகள் இருக்கின்றன. இவற்றின் பக்கத்தில் புத்தகக் கடைகளும் பாத்திரக் கடைகளும் இருக்கின்றன. வசந்த மண்டபத்தில் வைகாசி மாதததில் வசந்த உத்ஸவமும், மார்கழி மாதத்தில் எண்ணெய்க் காப்பு உத்சவமும் நடைபெறும். வசந்த உதஸவத்தில் மீனாக்ஷியும் சோமசுந்தரக்கடவுளும் இவ்விடம் வருவார்கள். எண்ணெய்க் காப்பு உத்ஸவத்தில் மீனாக்ஷி அம்மன் மட்டும் வருவாள். அப்போது முற்காலத்தில மேலே கூறிய அகழ்களில் தண்ணீர் நிரப்பி, அநேகவித புஷ்பங்களையும் கொடிகளையும் இலைகளையும் மிதக்க விடுவார்கள், அது பார்ப்பதற்கு வெகு ரமணீயமாயிருக்கும். தற்காலததில் ஆங்கு கடைகள இருப்பதால அது மாதிரி இப்போது கிடையாது. அதற்குப் பதிலாக வசந்த மண்டபத்தின் எதிரே உள்ள ஓர் அஷ்டகோணமான நீர்த்தொட்டியில் நீர் நிறப்பி புஷ்பங்களையும் இலைகளையும் மிதககவிடுகிறார்கள்.


மற்றும் ஒரு தூணில் ஒரு யானை, அதன் பக்கலில் ஓர் அரசன் இவர்கள் சிலைகளைக் காணலாம். யானை தன் துதிக்கையால் அரசனிடம் இருந்து பலவந்தமாக ஓர் கரும்புக் கழியை இழுத்துக் கொண்டிருக்கிறது. அதன் வரலாறு பின்வருமாறு:—சிவபெருமான் உலகில் உள்ள ஆன்மாக்களை உஜ்ஜீவிக்கத் திருவுளம் கொண்டு சித்தராக

கல்லானைக்கு கரும்பருத்தியது

வந்து மதுரை வீதிகளில் அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருந்தார். அநேக இந்திர ஜால வித்தைகளையும் செய்து



முருகன்.



திருமலைநாயக்கர்.

காட்டிக்கொண்டிருந்தார். தூரத்திலிருக்கும் மலையைச் சமீபத்தில் வரச்செய்தும், சமீபத்தில் உள்ளதை தூரத்தில் போகச் செய்தும், கிழவனை குமாரனுக்கியும், குமாரனைக் கிழவனுக்கியும், ஆணைப் பெண்ணுக்கியும், பெண்ணை ஆணுக்கியும், மலடியைப் பிள்ளைப்பெறச் செய்தும், ஆகிய அநேக சித்து வித்தைகளை மதுரையம்பதி தெருக்களில காட்டிக்கொண்டிருந்தார். அரசனுன அபிஷேக பாண்டியன் சித்தரின் பெருமைகளைக் கேட்டு அவரை அரண்மனைக்கு அழைத்து வரும்படி சில ஆட்களை அனுப்பினுன். அவர்களும் சித்தரை அழைக்க, சித்தர் "அந்த அரசனுலே எமக்கென்ன பயன்? நாம் வரமுடியாது" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார். பாண்டியனும் சித்தரைக் கடவுள் என்று எண்ணுமல் மிக்க கர்வத்துடன் இருந்தான். பிறகு அரசனே நேரில் அவரைக் காணச்சென்றுன். சித்தரைப் பரீக்ஷிக்க எண்ணி, அன்று தைமாதப்பிறப்பாகையால் ஏராளமாக வந்திருந்த கருப்பங் கழிகளில் ஒன்றைச் சித்தரிடம் கொடுத்து அங்கு இருந்த கல்யானை கருப்பங்கழியை தின்னும்படி செய்ய வேண்டும் என்றுன். சித்தரும் அரசனைப் பார்த்து குறுநகை செய்து, பின் கல்யானையைக் கடைக்கண்ணுலே சைகை செய்ய, உடனே அந்த கல்யானை மும்மதங்களும் ஒழுக பெரிய சத்தமிட்டுக் கொண்டு, கருப்பங்கழியை அரசன் கையிலிருந்து தன் துதிக்கையால் பிடுங்கித் தன் வாயில்போட்டுக்கொண்டது. மேல் கூறிய புராண வரலாற்றைத் தூணில் உள்ள சிலைகள் காட்டுகின்றன.

கிழக்குத் திசையிலிருந்து மண்டபத்திற்கு நுழையும் இடத்தில கிழக்கு நோக்கி இரண்டு குதிரை வீரர்களின் சிலைகள் இருக்கின்றன. இச்சிலைகளைப்போல் வெங்கலத்தால் செய்யப்பட்ட மாதிரிஉருவங்கள் லண்டன் கண்காட்சி சாலையில் இருப்பதாக நாம் கேள்விப்படுகிறேம்.

*இம்மண்டபத்திலுள்ள ஒவ்வொரு தூணையும் சிலைகளையும் எடுத்து வர்ணிப்பதென்றால் முற்றிலும் அது சிரம சாத்தியமான காரியம். சுருக்கிச் சொல்லுமிடத்து, இத் தூண்களிலாவது சிலைகளிலாவது ஏதாவது ஒரு சிறு மாறுதலை நாம் செய்து பார்த்தோமானால் அது எவ்வளவு விபரீதமாக மண்டபத்தின் அழகைக் கெடுத்து விடும் என்பதை மட்டும் நாம் திண்ணமாய்ச் சொல்லக்கூடும். யாரால் தூண்டப்பட்டு இம்மண்டபத்தைத் திருமலை நாயக்கர் கட்டினாரோ அந்த நீலகண்ட தீக்ஷிதரின் சிலையை நாம் அவசியம் கவனித்தல் வேண்டும்.*

நீலகண்ட தீக்ஷிதரின் சிலை

*இந்த மண்டபத்திற்கும் கிழக்கே ராயகோபுரம் என்ற கோபுரம் இருக்கிறது. பூராவும் கட்டப்பட்டிருந்தால் இந்தியா தேசத்திலே மகாபெரிய கோபுரங்களில இது ஒன்றாகும். மொட்டையாக நிற்கும் இச்சமயத்தில் தென்வடல் 174 அடியும் கீழ்மேல் 117 அடியும் உள்ள அஸ்திவாரம் மட்டும் இப்போது இருக்கிறது. இதன் வாசல் 21 அடி 9 அங்குலம் இருக்கிறது. திருமலை நாயக்கரே இம்மாதிரி 10 ராய கோபுரங்களைக் கட்டுவிக்க ஆரம்பம் செய்தாரென்றும் ஒரு கதை விளங்குகிறது. ஆயினும் எல்லாம் முற்றுப்பெறாமல் இதே நிலைமையில் தான் இருக்கின்றன.*

ராயகோபுரம்

*ராயகோபுரத்திற்குக் கிழக்கே எழுகடலென்ற குளம் ஒன்று இப்போதும் இருக்கிறது. இந்தக் குளத்தின் உற்பத்தியைப்பற்றி ஒரு கதை உண்டு. மீனாக்ஷியம்மனின் தாயார் காஞ்சனமாலை கடல் நீராட வேண்டுமென்று அவா உள்ளவளாக இருந்தாள். அதை மீனாக்ஷி யம்மனிடம் தெரிவிக்க, மீனாக்ஷி சுந்தரேஸ்வரரிடம் கூறினாள். சோமசுந்தரக் கடவுள்*

அவள் விருப்பத்திற் கிணங்கி ஒருகடல்அல்ல, ஏழுகடலையும் இவ்விடத்தில் ஏழு கிணறுகள் மூலமாக ஏழு கடல் வரவழைத்தா ரென்று சொல்லப்படுகிறது. இப்போது இந்தக் குளத்தில் நான்கு கிணறுகள்தான் அகப்பட்டிருக்கின்றன.

---

## அத்தியாயம் 12

### கோவில்களைப்பற்றிய சில சிந்தனைகள்

ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தை நாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து நாம் நம் முன்னோர்களை இழிவாக நினைப்பது போல் நம்மையும் நமக்குப்பின் வருபவர்கள் நினைத்தல் கூடும் என்கிற பழமொழியை மறவாது கவனித்தல் வேண்டும்.

முற்காலத்து அரசர்கள் இவ்வளவு கோடிக்கணக்கான பொருள்களைச் செலவு செய்து ஏன் பிரும்மாண்டமான இக் கோவிலகளைக் கட்டுவித்தார்கள என்று நாம் முதல்முதல் வினவியும் அதற்குத் தக்க முகாந்தரத்தையும் தேடவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் பொது மக்களின் பணத்தை வீணுகச் செலவு செய்ததாகாதா? துரதிர்ஷ்டத்தினுலும் இக் காலததில் இக்கோவில்களை நடத்தும் மாதிரியிலிருந்தும் இவ் விதக் கேளவிகள் ஏற்படுகின்றன. ஆயினும் அக்காலத்தில் கோவில்களே பொது மக்களின் சகலவித முயற்சிகளுக்கும் பொது இடமாக விளங்கினவை என்றும் நாம் நினைத்தல் வேண்டும். பண்டைய, மத்தியகாலங்களில் கோவில்கள் கலா சாலைகளாகவும் இருந்தன. அக்காலத்தில் சங்கங்கள், சபைகள், பரிஷதங்கள் இவை யெல்லாம் கோவில்களுள் கூடின. அந் நியதேச மதப் பிரமுகர்கள் கோவில்களின் மத்தியில்தான் தங்களுடைய வாதங்களை நடத்தினுர்கள். கோவில்களிலேயே வேதங்களை ஆசாரியர்கள் ஓதி சிஷ்யர்களுக்கும் போதித்தார்

கள். சுருங்கச் சொல்லுமிடத்து கோவில்களிலிருந்து நாலாப் பக்கங்களிலும் சகல கலைகளும் வெளியேறி எல்லோருக்கும் பரவலாயிற்று. இவ்வாறு ஒருகாலத்தில் மகாமேதாவிகளும் கவிவாணர்களும் கூடி எககாலத்திலும் சத் விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தும, தர்க்கித்தும், பாடியும் ஆகிய இவற்றால் சோபையுற்ற இக்கோவில்கள், இக்காலத்தில் கூச்சலையும் கெட்ட சம்பாஷணைகளையும் செவியுறும்படி வந்த இந்நிலைமை யைப்பற்றி நாம் வியசனிக்காம லிருத்தல் முடியாது. காபி கிளப்புகளும், பழக்கடைகளும், தையற் கடைகளுமே வேத மோதப்பட்ட இக்கோவில்களில் இப்போது காணப்படுகின் றன. மத சம்பந்தமான வாதங்களுக்கும் ஞான வாதங்களுக் கும் பதிலாக இப்போது வியாபார சம்பந்தமான வாதங்கள் தான் நடக்கின்றன. ஆகையால் ஞானப்பற்றுள்ள ஜனங்கள் இக்காலத்துக கோவில்களை வெறுப்பதில் என்ன ஆச்சரியம்! பெர்குஸ்ஸன் துரையவர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"ஸ்ரீரங்கம் கோவிலின் வெளிப் பிரகாரம் முழுவதும் கடை களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இவற்றுள் யாத்ரா வாசிகள் தங்கவும், பூஜிக்கவும், தங்கள் பொருள்களை எல்லாம் இழக்கவும் ஏற்ற வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ராமேசு வரத்திலும், மதுரையிலும் காட்டுமிராண்டித்தனத்தால் விளைந்தவைபோல் எவ்வளவு ஊழல்கள் செய்யலாமோ அவ்வளவும் செய்யப்படுகின்றன. தகுதியற்றவர்களின் அதிகாரத்தில் வந்த இந்த உன்னதமான மகான்களின் வேலைப்பாடுகள் நிரம்பிய இக்கோவில்களைபற்றி யாத்திரா வாசிகள் அவமதித்துப் பேசுவதில் யாதொரு குற்றமும் இல்லை."

இந்தச் சந்தர்ப்பத்தில் இக்கோவில்களின் ஆதிகால நிலைமை என்னவென்று நாம் சற்று விசாரிப்போம். இக்

கோவில்கள் ஜன சமூகத்தை எப்படிக் கவர்ந்தனவென்றும் அக்கோவில்கள் எப்படி நடத்தப்பட வேண்டுமென்றும் விவரமாகத் தெரிவிக்கும் அநேக செப்புத்தகடுகளும் கல்வெட்டுகளும் நமக்கு இக்காலத்தில் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டவசம்தான். முன்னாளில் கோவில்கள் கட்டுவதில் அரசர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு கோவில்களைக்கட்டி அதனால் தங்கள் கீர்த்தியை வெளிநாடுகளில் ஓங்கும்படி செய்தார்கள். இவ்விதம் கீர்த்தி பெற்ற அரசர்களில் மகாராஷ்டிரர் வம்சத்து கிருஷ்ணதேவராயரும், சோழ வம்சத்து ராஜராஜரும், ராஜேந்திரரும், ஹொய்சால வம்சதது விஷ்ணு வர்த்தனரும் மிகச் சிறந்தவர்கள்.

இந்தக் கிருஷ்ணன் என்ற அரசன் காலததில்தான் நிஜாம் ராஜ்ஜியத்தில் "எல்லோரா" (Ellora) என்ற இடத்தில் மிகுந்த விஸ்தீரணமாகவும் வெகு அழகாகவும் நியமிக்கப்பட்ட குகைக்கோவில் ஏற்படுத்தப்பட்டது. இக்கோவிலுக்குக் கைலாசநாதர் கோவில் எனப் பெயர். சிற்பசாஸ்திர விதிகளுக்கு நேர் விரோதமானலும் வெகு விசித்திரமாக அமைக்கப்பட்டது. ஹொய்சால வம்சத்து விஷ்ணுவர்த்தனன் என்ற பிட்டிதேவரால், தொட்ட கட்ட ஹள்ளி (Doddagadda halli)யில் லக்ஷ்மிதேவி கோவிலும், பேலூரில் (Belur) கேசவர் கோயிலும், கப்பசென்னிகாராயா (Kappe - Chennigaraya) என்ற இரட்டைக் கோவில்களும், தலைக்காட்டில் (Talkad) கீர்த்தி நாராயணன் கோவிலும், மாரேல் (Marale) என்ற இடத்தில் கேசவ சித்தேஸ்வர கோவிகளும், ஹலேபீடு (Halebid) என்ற இடத்திலுள்ள பார்ஸ்வ நாதர் கோவிலும் கட்டுவிக்கப்பட்டன. கோவில்களில் அநேகம் அரசர்களாலும் அரசவம்சத்தைச் சேர்ந்தவர்களாலுமே கட்டுவிக்கப்பட்டன. இவற்றுள் சில

கோவில்களைக் கட்டுவித்த ராஜா ராணிகளின் பெயர்கள் இன்றும் விளங்கிவருகின்றன. தஞ்சாவூரிலுள்ள ராஜராஜேஸ்வர சுவாமி கோவில் பெயர்பெற்ற ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. விக்ரம சோழனால் கட்டுவிக்கப்பட்ட ஒரு கோவில் அவன் தகப்பன் குலோதுங்க சோழன் பெயரால் விளங்குகிறது. மைசூர் ராஜ்ஜியத்தில் சாமராஜ நகரில் ஒரு கோவில் அதைக் கட்டுவித்த அரசன் பெயரால் சாமராஜேந்திரேஸ்வரர் கோவிலென்று விளங்குகிறது. அரசர்களால் கட்டப்பட்ட கோவில்களானபடியால் இவைகளுக்கு ஏராளமான சொத்துக்களும் மானியமாகக் கொடுக்கப்பட்டன. ராஜராஜ சோழரும் அவருக்குப் பின்வந்த ராஜேந்திர சோழருமே அநேக கோவில்களுக்கு ஏராளமான கிராமங்களைத் தானம் செய்திருக்கிறார்கள். கோவில்களுக்குத் தீர்வை கிடையாது. இக்காலத்தில் நடப்பது போல அக்காலத்திலும் கோவில் நடவடிக்கைகள் கமிட்டிகளால் நடத்தப்பட்டன. ஆயினும் பூஜைகளுக்கு வேண்டிய திரவியங்கள் கோயில் குருக்கள் கைவசம் இருந்தன. கோவில் கமிட்டிகளும் அரசனுடைய மேற்பார்வைக்கும் கணக்குப் பரிசீலனைத்திற்கும் உட்பட்டிருந்தன. உத்தம சோழன, பராந்தக சோழன், ராஜராஜ சோழன் இவர்கள் கோவிலின் சரியான நடத்தையை வெகுவாகக் கவனித்து வந்தார்கள். கோவில் கமிட்டிகளோ தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட இந்தப் புனிதமான பாரத்தைச் சரிவர எல்லோருடைய திருப்திக்கும் ஏற்றவாறே நடத்தி வந்தார்கள். திருக்கோவிலூரில் அகப்பட்ட கலவெட்டு ஒன்றிலிருந்து அந்தக் கோவில் கமிட்டியார்கள் ஒரு மனிதனிடமிருந்து பதது பசுக்களைப் பெற்றார்களென்று தெரிகின்றது. இதற்குச் சாக்ஷியம் அக்கோவிலின் கணககில அகப்பட்டது. இந்த மனிதனின் பாட்டனார் ஒரு பிரபுவிடமிருந்து கோவிலைச் சேர்ந்த மடத்தில் பிராமமணர்களுக்குத் தயிர்

கொடுப்பதற்காக இந்த பசுக்கள் விடப்பட்டன என்று தெரியவருகிறது.

இக்காலத்துக் கோவில்கள் போலல்லாமல் பண்டைய மத்திய காலங்களில் கோவில் சொத்துக்களில் அதிக பாகம் சமூகத் தொண்டுக்காக உபயோகப்படுத்தப்பட்டது. நமக்கு இதுசம்பந்தமாகக் கிடைத்திருக்கும் கலவெட்டுகளில அநேகமாய் எல்லாம் ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்தும் அன்னதானத்திற்காகப் போதுமான ஏற்பாடுகள் உள்ளவையாக இருந்தனவென்றே தெரியவருகிறது. ராஜேந்திர சோழரின் கல்வெட்டு ஒன்றில் அரசனின் அத்தையான குண்டவ பாங்வார் என்ற பெருமாட்டியின் பெயரால் ஏற்படுத்தபபட்ட ஒரு மடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களின் பொது நன்மைக்காக ஒரு பூமி தானம் செய்யப்பட்ட விவரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இப்போதோ திக்கறறவர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம என்பது கோவிலில் இலலை. அன்னதானம் நடந்து கொண்டிருந்த சில கோவில்களிலும் ஜாதி மதச்சண்டைகளால் அதுவும் நின்றுவிட்டது. இவ்வாறு ஏழை எளியவர்களுக்கு அன்னமிடுவதைவிட வேறு எவ்வித உயர்ந்த வழியில் கோவில் சொத்து செலவிடக்கூடியது என்று நாம் நினைக்கக்கூட அதிகாரமற்றவர்களாக விருக்கிறோம்.

புராதன காலத்திலும் மத்திய காலத்திலும் கோவில்கள் சர்வகலாசாலைகளாகவும் கலாசாலைகளாகவும் உபயோகிக்கப் பட்டும் வந்தன. சோழவம்சத்தார் கோவிலகளில் அநேக தர்க்க வைதீகப் போட்டிகள் நடந்துவந்தன. காவ்யம், தர்க்கம், இலக்கணம், வைத்தியம், ஞானம், மற்றுமுள்ள சாஸ்திரங்களும் இக்கோவில்களில் அப்பியாசிக்கப் பட்டும் வந்தன. திருவொற்றியூர் கோவில் பண்டய சாஸனங்களில் தசாவதாரம், ராமாயணம், மஹாபாரதம், மனு

தர்மசாஸ்திரம், வைகானச சாஸ்திரம், வேதங்கள் இவைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தேவாரம், நாலாயிர பிரபந்தம் இவற்றைப் பாராயணம் செய்துவர கட்டளை ஏற்பட்டிருந்ததையும் அநேக சாஸனங்கள் குறிப்பிடுகின்றன. சேந்தில் கல்வெட்டுகளில் ஒன்று சுந்தரேஸ்வர சுவாமி கோவிலில் மஹாபாரதம் படிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டக் கட்டளையைக் குறிப்பிடுகிறது. அதே மாதிரி கும்பகோணம் நாகேசுவர சுவாமி கோவிலில் வேதாந்தத்திற்குக் கட்டளை ஏற்படுததப்பட் டிருக்கிறது. திருவொற்றியூர் கல்வெட்டு ஒன்றில், பாணினிமுன் தோன்றி பதினான்கு நாட்களில் 14 சூத்திரங்களையும் போதித்தக் கடவுளுக்குப் பூஜைகள் செய்யவும், வியாகரண தானம் செய்யவும், வியாகரண மண்டபத்தை நல்ல ஸ்திதியில் எக்காலத்திலும் வைத்து வரவும் ஏற்பாடுகள் வரையப்பட்டிருக்கின்றன. காஞ்சீபுரத்துக்குக் கருகாமையிலுள்ள திருக்கூடல் வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவில் அக்காலத்தில் ஒரு வைதிய சாலையையும், கலாசாலையையும், அதைச் சேர்ந்த ஒரு சாப்பாட்டு விடுதியையும் நடத்தி வந்தது. பட்டினப் பாலையிலிருந்து அக்காலத்தில் பண்டிதர்களும் கீர்த்தி பெற்ற வித்வான்களும் தங்கள் பாண்டியத்தை யாரும் எதிர்தது வாதாடலாமென்று பறை மூலம் தெரிவித்தார்களென்று நமக்கு விளங்குகிறது. நியாய சாஸ்திரங்களை எல்லாப் பிரிவுகளிலும் எடுத்துரைக்கும் ஆசார்யர்களுக்கு ஏராளமாக நிலங்கள் மானியமாக விடப்பட்டன. ராஜகேசரி வர்மரின் 11-வது ஆண்டில் செய்யப்பட்ட இம்மாதிரி தானம் ஒன்று திருக்கோஷ்டியூர் கல்வெட்டுகள் ஒன்றில் காணப்படுகிறது. கோவில்களில் குருக்களும் ஆசாரியர்களும் மிக்க பிரதானமான கௌரவத்தைப் பெற்றிருந்தார்கள். சைவ மதம் விஷ்ணுமதம் ஏற்பட்ட காலங்கள் தொட்டு இம்மதப்

பிரசாரம் செய்யும் ஆசார்யர்கள் சமூகத்தில் மேன்மையான ஸ்தானத்தைப்பெற்றார்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும் தங்களுடைய ஸ்தோத்திரப்பாக்களில் இக்கோவில்களைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள். இவர்களுடைய திவ்யப் பிரபந்தங்கள் எல்லோருக்கும் பரவி சங்கீத சுரங்கள் அமைக்கப்பெற்றன. இவைகளைக் கோவில்களில் பாடவும், தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சங்கீதக் கலையை விருத்தி செய்வதற்கும் கோவில்களே தகுதியான இடங்களாக ஆயின. இப்படிப் பிரபந்தங்களை இயற்றியவர்கள் கடவுளினிடத்து அவர்கள் காட்டிய பக்தியின் மேன்மையால அவர்களே பூஜிக்கப்பட்டும் வந்தார்கள். மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர் இப்படிப்பட்ட ஞானிகளின் தேவாரத் திருவாசகஙகள் வேத சாம்யத்தையே அடைந்துவிட்டன. இவ்வாறு இப்பெரும் ஞானிகளே அக்காலத்தில் தென் இந்தியாவில் ஆதரியாமலிருந்தால் அநேகம் அரும்பெரும் காவ்யங்கள் நமக்கு கிட்டியிருக்காதெனை அறிதல் அவசியம்! தேவாரம் திருவாசகம் பாடுவோர்களுக்குள் போட்டியும் கோவிலில் ஏற்பட்டு வெற்றி பெற்றோர்க்கு வெகுமதிகளும் அளிக்கப்பட்டன.

முற்காலங்களில் இக்கோவில்கள் மடங்களை அடுத்து ஒத்துழைத்து வந்ததில் கோவில்களின் செல்வாக்கும் அதிகப்பட்டு வந்தது. கீர்த்திபெற்ற சன்யாசிகள் மடாதிபதிகளாக இருந்தார்கள். யாத்திரை வாசிகளுக்கு அன்னமிடுவதில் கோவிலும் மடமும் போட்டிபோட்டு வந்தன. ஆதிகாலத்தில் அடிக்கடி மடஙகள் கோவிலிலேயே இருந்து வந்தன. பிறகு மடங்களுக்கு அலுவல்கள் அதிகரித்த காலங்களிலே யிருந்துதான் இவை பிரத்தியேகமாக கட்டடங்களும் சிப்பந்திகளும் ஏற்படுததிக் கொண்டன. திருவாடாணையில் அப்பட்டண வாசிகளாலேயே ஒரு வைஷ்ணவ மடம் ஏற்படுத்தப்பட்டு

அன்னதானத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. கோவிலில் பயிற்சிசெய்து முன்வந்த அநேக பண்டிதர்கள் இம் மடங்களில் தக்க உத்தியோகம் பெற்றார்கள். இக்காலத்திலோ மடங்களும் கோவில்களும் போராடுவதைப் பார்க்க நம் மனது மிக்கத்துக்கப்படுகிறது.

கோவில்களே மேலும் சமூக வேலைகளுக்காக மத்திய ஸ்தானமாக விளங்குகிறது. சிறுவர், பெரியோர் எல்லோரும் கூடவும் இடங்கொடுத்தது. கோவில்கள் சம்பந்தப்படாத எவ்வித முயற்சியும் அக்காலங்களில் கிடையா. கோவிலுக்குப்போவது என்பது கிராமவாசிகளுக்கு ஒரு நித்தியக் கடனாக ஏற்பட்டு விட்டது. ராஜராஜ சோழன் காலத்தில் ஒரு கோவிலுக்குச் சேர்ந்ததாக ஒரு நாடகசாலையும், ஒரு நர்த்தனசாலையும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஆரம்பக்கூத்து என்ற நாடகத்தின் ஏழு அங்கங்களையும் நாடகமாக நடத்தியதற்காக ஒரு நடிகனுக்கு பூமிசாசனம் செய்யப்பட்டதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மூன்றுவது குலோத்துங்கன் காலத்தில் நானாவித நாடகசாலை ஒன்று நடத்துவதற்குப் பூமிதானம் செய்யப்பட்டதை மற்றொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. சங்கீதமும், நடனமுமே ஜனங்களின் முக்கிய விளையாட்டாகவும் பொழுதுபோக்கும் உபாயமாகவும் இருந்ததாகத் தெரிகிறது. கோவில்களும் ஜனங்கள் இவ்விதக் கலைகளினிடதது அதிக நோக்கத்தைச் செலுத்தும்படியும் செய்தன. இதற்குச் சாட்சியாகத் திருவண்ணாமலைக் கோவில் மதில்களில் பரதநாட்டியத்தையே சிலரூபமாகக் காட்டியிருப்பதை நாம் பார்க்கலாம். தென் இந்தியா முழுவதும் தேடி நானூறு நடன மாதர்களை ராஜராஜன் பொறுக்கி எடுத்ததாக நாம் அறிகிறோம். அவ்வாறே அவர் மகன் ராஜேந்திர சோழனும் ராஜராஜேஸ்வர நாடக

மென்ற ஒரு நாடகத்தை ஆடினதற்காகச் சொத்துக்கள் சாஸனம் செய்து கொடுத்ததாகவும் அறிகிறோம். தக்கபடி அபிநயத்தோடு நர்த்தனம் செய்யவேண்டி அமர்த்தப்பட்ட ஒரு நர்த்தன உபாத்தியாயரைப்பற்றி மூன்றாவது ராஜராஜனின் ஒரு கல்வெட்டும் கூறுகிறது. இவ்விதமான காரணங்களால் நடன ஸ்திரீகள் அக்காலத்தில் வெகு கௌரவத்துடன் நடத்தப்பட்டார்கள் என்று தெரிகிறது. கொலுமண்டபத்தில் இவர்கள் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் முன்னிலையில் நடனமாடினார்கள். கடவுள் முன்னிலையில் நர்த்தனமாடுவதால் மரியாதையுடனும் பயத்துடனும் ஜனங்கள் அவர்களைப் பாராட்டினார்கள். இக்காலத்தில் அவர்களை எவ்வளவு இழிவாக நாம் கருதுகிறோம்! அக்காலத்தில் நடன ஸதிரீகள் எந்த மண்டபங்களில நடனமாடினார்களோ அதே மணடபங்களில் இக்காலத்தில் கிளப்புகளும் கடைகளும ஏராளமாக ஏற்பட்டு மண்டபங்களின் அழகையே மாற்றிவிட்டன. தேவதாசிகளும் தங்கள் நர்த்தனதொழிலையே வெறுதது விடும்படி அவ்வளவு அவமானததிற்கு பாததிரர்களாகவும் ஆகிவிட்டார்கள்! நம் அருங்கலைகளின் கதி இதுதான் போலும்!

கோவில்கள் ஏழை ஜனங்களுக்கு ஒரு நாணயமாற்றுச் சாலைபோலவும் இருந்துவந்தன. ஓர் சமயம் கிராம சபையோர்கள் அக்கிராமக் கோவிலிலிருந்து கடன வாங்கி குடிகள் வசிக்க இடங்கள் வாங்கினார்கள் என்றும நமக்குத் தக்க ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. கடன் வாஙகிய தொகைக்கு வட்டியும் கொடுககப்பட்டது. ராஜேந்திர தேவரின் ஆளுகையில் மூன்றாவது ஆண்டில் ஏற்பட்ட ஒரு தஸ்தாவேஜியிலிருந்து பஞ்சத்தால் வருந்தும் ஒரு கிராமத்திற்கு ஒரு கோவில் உபகாரம் செய்ததாகவும் தெரியவருகிறது. குடிகளின் தாபத்தைத் தீர்க்கக் கோவில் நகைகளைக்கூட ஓர் சமயம் விற்

றிருக்கிறார்கள். கஷ்டகாலங்களில் ஜனங்களின் சுகத்திற்காகக் கோவில்கள் ஏராளமாகச் சொத்துக்களை செலவிட்டன.

கோவில்களைக் கவனிபபதிலோ யாதொரு சண்டை சச்சரவு இல்லாமலே காரியங்கள் நடைபெற்றன. கிராமசபையே இதற்குப் பொறுப்பானது. ஆயினும் சிலலரை விஷயங்கள் எல்லாம் சிறிய சபையொன்றால் கவனிக்கப்பட்டு வந்தன. இவ்விஷயங்களில் எல்லாப் பொறுப்பையும் கோவில் கணக்கனே ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனதுபற்றி அவன் வேலை அடிக்கடி மேல்பார்க்கப்பட்டது. பணமோசடியும் நிர்வாகக் குறைவும் அநேகமாகக் காணப்படவில்லை. இப்போதுள்ள ஆசாரஹீனமானதும், சவரக்ஷணையற்றதும், சரியான பார்வையுமற்ற கோவில்களை விட்டுவிட்டு அக்காலததுக் கோவில்களைப்பற்றி நினைத்தாலே நமக்கு மனதுக்கு ஒரு உற்சாகம் ஏற்படுகிறது.

சிலைகளிலும் சித்திர உருவங்களிலும் கடவுளுக்கு ஏன் இவ்வாறு அதிக அங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்ற ஒரு கேளவிக்குச் சமாதானம் செய்யவேண்டியதவசியமாகும். மேல்நாட்டுச் சிற்பிகளும் சிற்பக்கலை வாதிகளும் இவற்றை விகாரரூபமென்று கூறுகிறார்கள். இது கீழ் நாட்டார்களின் மனதையும் கருத்தையும் அறியாததினாலேயே கூறப்பட்டதாகும். இந்திய சரித்திரத்தைக் காட்டும் இந்திய சிலைகளையும் கட்டடங்களையும் ஒருவர் அறிந்துகொள்வதானால் இந்தத் தேசத்தில் வேலை செய்யும் சிற்பிகளின் மனதை நன்குணர்ந்தால்தான் அது சாததியமாகும். இந்தத் தேசததில் மதங்களை ஆதாரமாகக் கொண்டு உள்ள சிற்ப சாஸ்திரததை நன்கு தெரிந்துகொள்ளாதலால் அநேக ஆராய்ச்சியாளர்கள் தமக்குத தோன்றியவாறு பேதமான அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

இந்துதேச சிற்பிகள், கண்களால் பார்த்து ஆனந்திப்ப தற்கு மட்டுமபோதுமானது என்று சிலைகளையும் சித்திரங்களை யும் உருவங்களையும் தயாரிக்கவில்லை. யவனதேசததுக் கலை யைப்போல் வெளி இந்திரியங்களுக்கு மட்டும் இன்பம் பயக்குமாறு பிரதிமை சாஸ்திரம் ஏற்படுத்தவில்லை. இந்து தேச வேலைக்காரர்கள் இயற்கையைச் சகல உலகங்களுக்கும் பொதுவான ஒரே சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாகவே மதிக்கிறார்கள். இவர்கள் கடவுளை எல்லா இடத்திலும் தேடிக் கண்டுபிடிக்க முயன்றார்கள்.

உருவங்களைச் சாதாரணமாக அவை உள்ளபடியே தயாரிக் கப்பட வேண்டுமென்ற நோக்கமே கிடையாது. காந்தார தேசம் தவிர வேறு எங்கேயும் இந்தியா முழுவதும் ஸ்வபாவத்தின்படியே உருவங்கள் தயாரிக்கப்பட்டதாகக் காணேம். மத்ஸ்ய புராணததில சொல்லியவாறு கடவுளைப் பூஜித்து அவர் பெருமையை ஸ்துதி செய்வதே உயர்ந்த கர்ம யோகம் ஆகும். அதுவே மோக்ஷமும அளிக்கும். கற்களில் மானிட உருவத்தைச் செதுக்குவதினின்றும் சிற்பிகள் தடுக் கப்பட்டார்கள். இவ்வாறு தயாரிப்பது கலையைக் கெடுத்த தாக மதிக்கப்பட்டது. சுக்ரநீதி இயற்றிய சுக்ராச்சாரியார் சொல்வதாவது:—கடவுளின் பிரதிமைகள் மனிதர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுதது முடிவில் முக்தியும தருகின்றன. மனிதர்கள உருவமோ துக்கததைததான் கொடுக்கும். முடி வில் சுவர்க்கம் அடைய முடியாதபடியும் செய்யும்.

“பார்ஹுத” எனற இடத்திலும் “சான்சி” என்ற இடத்திலும் ப்ரசேனஜித், அஜாதசதரு இவர்களுடைய சிலை கள் காணப்படுகின்றன. மதுரையில் நாயக்க வம்சத்து மன் னர்களின் உருவச்சிலைகளும் இருக்கின்றன. ஆயினும் இவை

எல்லாம் கீழ்ப்பட்ட ஸ்தானங்களிடையே தான் வைக்கப்பட்டிருக்கின்றன. சிற்ப சாஸ்திரமே இந்தியாவில் மத சம்பந்தமாகத் துலங்குவது அமானுஷ்யமான குணாதிசயங்களும் சாந்தமுமே உருகி வருந்தாற்போல் தயாரிக்கப்பட்ட உருவங்களை உத்தமம் என்பது அதன் நோக்கம். இவ்வாறு நோக்கமுள்ள சிற்பிகளுக்குச் சாதாரணமாக முகக்களை என்ற ஸ்வபாவத்தன்மையில் யாதொரு பற்றும் இல்லை. ஸ்வபாவத்தையே மட்டும் இச்சிலைகள் தழுவினால் அவை ஒருக்காலும் மேன்மையை அடையா. உன்னத அறிவாலும் அதிக யோகாப்பியாசங்களாலும் அடக்கப்பட்ட இந்திரியங்களையுடைய மகா மேதாவிகளிடத்து மட்டும் குடிகொள்ளக்கூடிய சாந்தி, தாயை, தாக்ஷண்யம் முதலிய அரியபெரிய குணங்களைத்தான் நம் சிலைகள் குறிப்பிடும். காரியங்களில பற்றற்று இருந்தலே இந்திய ஞான சாஸ்திரத்தின் முடிவான போதனை.

இவ்விதமான கருத்தை இந்து தேச விக்ரகங்கள் நன்கு விளக்குகின்றன. உருவங்கள் மிக்கத் தாத்பர்யங்கள் கூடியவை. மதுரைக் கோவிலில் நாம் பார்க்கும் இளங்குமரனை சுந்தரமூர்த்தி சுவாமியின் முகத்தில் வெகு சிரத்தையுடன் எதிர்பார்த்து நிற்கும் பாவனையும் மிக ஆச்சர்யத்தைக் குறிப்பிடும் முக லக்ஷணமும் வெகுவாக நம்மனதைக் கவர்கின்றன. தக்ஷிணாமூர்த்தியின் முகத்தில் காணப்படும் கலக்கமற்ற அமரிக்கையையும் சாந்தத்தையும் யார்தான் போற்றமாட்டார்கள்! இந்தியக் கலைகள் விஷயங்களை லக்ஷிக்கும்படி உணர்த்துமே தவிர அதை ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டா.

கடவுளைப் பூஜிப்பவர்களாகிய நமக்குக் கடவுளின் அமானுஷ்யமான சக்தியையும் குணாதிசயங்களையும் காண்பிப்பதற்

குச் சிற்பிகள் கடவுளின் சிலைகளிலும் உருவங்களிலும் பல அடையாளங்களைக் கொடுத்தார்கள். மனிதனுக்கு இரண்டு கைகளானால் கடவுளுக்கு நான்கும் அதற்கு மேலிட்ட கைதளும் வேண்டாமா? கடவுளின் உருவத்தை சிற்பி வரையும்போது அக்கடவுளின் சரித்திரத்தை நன்கு உணர்ந்து அதற்குத தக்கவாறு அடையாளங்களும் அமைத்தான். விஷ்ணுவின் பிரதிமைகளுக்குச் சங்கமும், சக்கரமும, கதையும் தாமரைப் புஷ்பங்களும் அடையாளமாகக் கருதப் பட்டன. பரமசிவனின் பிரதிமைகளுக்கு மான், மழு, டமருகம், சூலம் முதலியன அடையாளமாகக் கருதப்பட்டன. இதே போன்று மற்ற விநாயகர், சுப்ரமண்யர், தேவி முதலியவர்களுக்கும் பல அடையாளங்கள் இருக்கின்றன. உருவதைப் பார்த்த மாத்திரததில் பார்ப்போர்களுக்கு எவ்வளவு பக்தி சிரத்தையை அவ்வுருவங்கள் ஊட்டுகின்றன. எந்த உருவத்திற்கும் இருக்கவேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் அது உபாசகர்களிடத்தில் பக்தியை உண்டாக்கக்கூடிய சக்தியோடு கூடியிருப்பதே. உருவங்களைச் சிருஷ்டிப்பவன் தக்க யோகப்பியாச முள்ளவனாகவும் சிந்தனா சக்தியுள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். இந்திய சிற்பிகளுக்கு அவயங்களின் ஒழுங்கைக் காட்டிலும் மேற்கூறிய யோகதியானங்களே மேலானவையாகக் கொள்ளப்பட்டன. யவன தேசத்து உருவங்கள் அழகில் சோபித்தாலும், எகிப்து தேச உருவங்கள் சுவபாவத்தன்மையில் விசேஷித்தாலும் இந்திய உருவங்கள் மனிதனுக்குப் பக்தி, தியானம் இவைகளை உணர்த்துவதாலும் மிக சிரேஷ்டமானவை.

இந்திய சிற்பத் தொழிலுக்குரிய ஞானபாகங்களைக் கருதும்போது மேற்கூறியபடி உருவங்கள் தியான பாமானது என்று நன்கு விளங்கும். "புத்த விக்ரஹங்கள்" என்ற

புத்தகத்தில் 'பூச்சர்' என்ற துரை சொல்லுகிறார். "சிற்பி வஸ்துக்களின் சூன்யத்தில மனதைச் செலுத்தித் தியானம் செய்யவேண்டும். ஏனெனில் இவ்வித எண்ணம் முற்றிப் பலித மாகும்போது அவனுக்கு "நான், என்னுடையது" என்ற சகல மமதைகளும் தொலைந்து, அக்கினியினால் பரிசுத்தமாவதுபோல் அவன்மனது சமநிலையை அடையும். அப்பால் தான் வரைய ஏற்படுத்திக் கொள்ளும் கடவுளின் பீஜ மந்திரத்தை உச் சரித்துக்கொண்டு தியானோபாசனம் செய்து அக்கடவுளையும் சிந்திக்கச் வேண்டும். அக்கடவுளுடன் தானும் லயிக்க வேண்டும். பிறகு அக்கடவுளின் தியான மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே வரும்போது அக்கடவுளின் குணாதி சயங்கள் எல்லாம் தன மனதுக்கு நன்றாக அவலோகனம் ஆகிவிடும். அக்கடவுளும் பிரதிபிம்பம்போல் அவன் மனதில் தோன்றுவார். அல்லது சொர்ப்பனத்திலேனும் தரிசனங் கொடுப்பார். இந்த உருவம்தான் சிற்பிக்கு அக்கடவுளின் மாதிரிப் பிரதிமையாகும். சிற்பியையும், சித்திரக்காரனையும் இம்மாதிரி கடவுளோடு லயிக்கும்படியே கட்டளையிடுகின் றன வேதங்கள்."

சிற்பி ஞானோபாசனை செய்தால் மட்டும் போதாது. இதர கலைகளையும் நன்கறிந்தவனாக இருத்தல் வேண் டும். "விஷ்ணு தர்மோத்தரம்" என்ற காவ்யத்தில் சித் திர சாஸ்திரதை அறியாதவன் பிரதிமா லக்ஷணங்களை அறியமாட்டானென்று சொல்லி யிருக்கிறது. நர்த்தன சாஸ் திரம் தெரியாதவனும், சங்கீத சாஸ்திரம் பயிலாதவனும் சித்திர சாஸ்திரத்தை அறியமுடியாதென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

சிற்ப சாஸ்திரத்தில் உருவங்கள் செய்யும் வகையைப் பற்றி வெகு நுட்பமான விதிகள் காணப்படுகின்றன. "சுக்ர

நீதி," "பிருஹத் சம்ஹிதை" "மாய சாஸ்திரம்" முதலிய நூல்களில் வேறு அநேக விதிகளும் சிற்பசாஸ்திரத்திற்காக ஏற்பட்டிருக்கின்றன. சரீரதநின் அங்க அவயங்களைமட்டும் சரியான அளவுப்படி நிர்மிக்க வேண்டுமெனறிருந்தால் இந்திய சிற்பிகளும் அவ்வாறேசெய்து யவனர்களைத் தோற்கடிப்பார்கள். "மோஹெஞ்சோ–தாரோ" (Mohenjo Daro) வில் கண்டெடுக்கப்பட்ட நர்த்தனப் பெண்ணின் வெங்கலச் சிலை ஒன்று யவனர்களாலும் இயற்கைக் குகந்ததுபோல் அவ்வளவு அழகாக இதுவரை தயாரிக்கப்படாதபடி அமைந்திருக்கிறது. இந்த உருவத்தின் முதுகிலும், கால்களிலும், முகம் எதையோ எதிர்பார்த்தவண்ணம் நிற்கும் பாவனையிலும், கெம்பீரத்திலும் சிற்பியின் இயற்கையை ஒட்டிய கற்பனு சக்தி வெளிப்படுகிறது மானிடப் பிறவியை உள்ளதை உள்ளவாறு காண்பிக்கும் அநேக சிலைகள் சிற்ப சாஸ்திரத்தின் மேலைத் திறத்தை எடுத்துக் காட்டுவதுபோல் மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலிலும் மதனகோபாலசுவாமி கோவிலிலும் இருக்கின்றன.

ஸ்திரீ உருவஙகளில் அளவுக்கு மீறின ஸ்தனங்கள் ஏற்பட்டிருப்பது ஒரு பெருங் குற்றம் என்று நம் சிற்பிகள் மீது புகார் ஏற்படுகிறது. இப்போதுபோல அல்லாமல் அக்காலஙகளில் சிலைகளுக்குச் சமீபத்தில் யாருமே நெருங்கக் கூடாதென்று இருந்தது. தூரத்தில் இருந்து பார்க்கும்போது சரியான அளவுடன் காணப்படும் பிரதிமை சமீபத்தில் நெருங்கிப் பார்த்தால் விகாரமாகவே இருத்தல் கூடும். மேலும் "எந்தெந்த ஜாதிப்பெண்களுக்கு எந்தெந்த விதமான அவயவக்கூறு இயற்கையில் அமைந்திருக்க வேண்டுமோ அவைகளுக்குத்தக்கவாறு சாஸ்த்ரீக முறைப்படி அமைப்பதில் நமது தேசச் சிற்பிகளே தலைசிறந்து விளங்குபவர்கள்" என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

கோவிலில் உள்ள தூண்களை உற்றுநோக்குமிடத்து அவற்றின் மீது அநேக மிருகங்கள் வரையப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அவற்றுள் சில பழையகதைகளைத் தழுவியிருக்கும். சில உண்மையானவையாகவும் இருக்கும். மீனாக்ஷியம்மன் கோவிலில், அநேக குதிரை, காளைமாடு, சிங்கம், புலி, யானை, மீன், முதலை, குரங்கு, பூனை இன்னும் வேறு மிருகங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் சங்கேதம் என்று கூறுவது முட்டாள்தனமானாலும் இவற்றுள் சில பெரும் வம்சங்களின் யோகங்களைக் குறிக்கின்றனவென்று நாம் சொல்லவேண்டியிருக்கிறது. 'ரூபம்' என்ற நூலில் மிருகச் சின்னங்களைப்பற்றி ஒரு பிரமுகர் எழுதுகிறார்:—

" இம்மாதிரி மிருகச் சின்னங்களில் உபநிஷத்துக்களில் குறிப்பிட்டுக் காட்டும் மிருகச்சின்னங்களையே பிரதிமைகளிலும் காட்டப்பட்டிருக்குமென்று நான் கருதுகிறேன். குதிரைகள் இந்திரியங்களையும், ரதம் மனதையும் கடோபநிஷத்தில் சொல்லியவாறே இவ்விடமும் குறிப்பிடப்படுகின்றன. பின்னர் வேதாந்த பரிபாஷைப்படி மனதை ஒரு காளை மாட்டுக்குச் சமானமானபடி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் காளைமாட்டை அடக்கிச் சரியான மார்க்கத்தில் நடத்தாவிடில் அது வெருண்டு யதேச்சையாக ஓடுவது போல், மனதும் அடக்கப்பட்டு சரியான பாதையில் செலுத்தப்படாவிடில் ஓடிவிடும் என்பதை இது காணபிக்கிறது. புராணங்களிலும் தந்திர சாஸ்திரங்களிலும் இதை இன்னும் விஸ்தரித்துக் கூறியிருக்கிறார்கள். மார்க்கண்டேய புராணத்தில் பிராணசக்தி ரூபமான துர்க்காதேவி சிங்கத்தை வாகனமாக அடைந்திருக்கிறாள். புராணங்களில் சொல்லிய படி இப்பூமியைத் தாங்கி நிற்கும் கஜங்களில், பூமி சம்பந்த

மான அல்லது அன்னமய சுபபந்தமான கோசங்களை நாம் அறிந்துகொள்வது அசாத்தியமில்லை."

தத்துவ ஞானத்தில் இருப்பது போலவே சிற்ப சாஸ்திரத்திலும் ஆத்மாவின் கோசங்கள் ஒரே வரிசைதான். ஸ்தூல சரீரம் யானை ; ப்ராணவாயுக்கள் சிங்கம்; இந்திரியங்கள் குதிரை; மனம் எருது; தெய்வ ஞானம் ஸ்தூபி. "ஹோய்சாலர்"களின் சிலைகளில் காணப்படும் முதலை மாயைக்குச் சமானமானது. அதைப் பிடிப்பதோ "பஞ்ச தசப்ரகரணம்" என்பதில் சொல்லியிருப்பதுபோல அஹங்காரத்தை அடக்கினதாகும். இம்மாதிரி வழிகளில் மற்ற உருவங்களின் சின்னங்களையும் அர்த்தப்படுத்தலாம். கருடன் பாம்பை கடித்துத் தின்பது நாசமில்லா வஸ்துவானது நாசத்திற்குட்பட்ட வஸ்துவுடன் அமைந்திருப்பதையும் பின்னர் முக்தி யடையக் கூடிய தன்மையை அது உடைததாயிருப்பதையும் குறிக்கிறது. வேத வேதாந்தங்களையும், புராணங்களையும் கோவில் கட்டுபவர்கள் நன்குணர்ந்தவர்களாயினும் கோவில் சுவர்களில் காட்டப்பட்டிருக்கும் உருவங்கள் இம்மாதிரி சின்னங்களே. எல்லாம் இம்மாதிரி சின்னங்கள் என்று சொல்வதற்கும் இடமில்லை. பிராகாரங்களில் காணப்படும் மிருக உருவங்களிலும் ராஜரீக விஷயங்களையும் நாம் சில சமயம அறியலாம். தென் இந்திய ராஜவம்சம் ஒவ்வொன்றுக்கும் ஒருமிருகச்சின்னம் உண்டு. அது பழையகுடிகளுக்கு ஏற்பட்டிருந்த வகுப்புச் சின்னமோ அல்லது வேறோ என்பது நமக்குத் தெரியாது. பாண்டியர்களுக்கு மீனும், சோழர்களுக்குப் புலியும், சாளுக்யர்களுக்குப் பன்றியும் வம்ச மிருகச் சின்னங்கள். இந்த உருவங்கள் கோவில் சுவர்களிலும், மண்டபங்களின் தூணகளிலும் சிலசமயம் குறிக்கப்பட்டிருக்கும். சிலசமயம் அந்தக் கட்டடம் அந்த மிருகச் சினனமுடைய வம்சத்தாரால்

கட்டுவிக்கப்பட்டது என்று குறிக்கும். அதிகமான தடவை களில் இவ்வித அடையாளங்கள் காணப்படின் அது ஒரு வம்சம் மற்றொரு வம்சத்தின்மீது அடைந்த வெற்றியைக் குறிப்பிடுபவை யாகின்றன. ஜைன காஞ்சியில் சிங்கம் புலி சண்டையிடுவதும், மகாபலிபுரத்தில் ஏழு ரதங்களில் ராய மண்டபம் என்று சொல்லப்பட்டதில் மீன் உருவமும், ஹோய்சாலக் கட்டிடங்களில் புலியைக் கொல்லுதலும் இந்த விஷயத்தை ஞாபகப்படுத்துகின்றன. தேசச் சரித்திரத் தைப் படிப்போர்கள் முதலில் சோழர்களும் பல்லவர்களும் போராடினதையும் பின்னர் சோழர்கள் ஹோய்சாலர்களோடு சண்டைகள் செய்ததையும் ஞாபகப்படுத்திக்கொள்வார்கள். அதன் பெயர் குறிப்பிடுகிறபடி ராய மண்டபம் விஜயநகர ராஜ்ய அரசர்களால் கட்டப்பட்டதுதான். அதில் காணப் படும் மீன் அடையாளமும் விஜயநகர மன்னர்கள் கடல் சண்டைகளில் வெற்றிபெற்று விளங்கினதைக் காட்டும் சின்னமேயாகும்.

சிற்பியின் மனதில் என்ன கருத்துக்கொண்டு உருவம் தயார் செய்யப்பட்டதென்று நாம் அறிவதற்கு ஒரு வழி இருக்கிறது. ஞான மார்க்கப்போதனையைக் காட்டும் உருவ மானல், மிருக உருவங்கள் சுவற்றின் மீதோ அல்லது வேறு எந்த இடத்திலானலும் வரிசைக்கிரமமாக ஒரு பத்தியாக வரையப்பட்டிருக்கும். வேறு கருத்தான பக்ஷத்தில் அவ் வுருவங்கள் துண்டாகவும் யாதொரு சந்தர்ப்பததைத் தழுவி யும் இரா.

அநேகரால் பார்த்து வெறுக்கப்பட்ட உருவங்களில் சில அசந்தர்ப்பமானவைகளும் நமது கோவிலில் காணப்படு கின்றன. இந்தச் சிலைகளுக்குச் சரியான தாத்பர்யங்களை எந்தப் பண்டிதனும் இதுவரை எடுத்துக் காட்டவில்லை.

மதுரைக் கோவிலில் இவ்வித உருவங்கள் ஏராளமாயிருக்கின்றன. சில ஆயிரக்கால் மண்டபத்திலும், சில கோவிலின் வேறு சிற்சில பாகங்களிலும் காணப்படுகின்றன. இவைகளுக்குச் சிலர் சமாதானங்களையும் கூறுகின்றார்கள். இருப்பினும் அவை அனைத்தும் முடிவில் போலிச் சமாதானமாகவே வந்து முடியும். இக்காரணம்பற்றி அவற்றுள் அநேகம் சிற்பியின் குதர்க்க புத்தியினால் உண்டானவையென்றே நாம் கருதுகிறோம். அந்தச சிற்பியும் ஜனங்களின் பழிக்கு அஞ்சினான் என்பதை இவ்வுருவஙகள் மூலையிலும் இடுக்கிலும் வைக்கப்பட்டிருப்பதிலிருந்து நாம் ஊகிக்கலாம். வாத்ஸ்யாயனரின் காம சாஸ்திரத்தையே உருவங்களால் எடுத்துக் காட்டியதுபோல சில தெரிகின்றன.

லிங்கமே ஆண் குறியைக் குறிக்கிறது. சிருஷ்டிகர்த்தாவையும் காலத்தையும் குறிப்பிட லிங்கத்தைத் தவிர வேறு தக்க உதாரணமோ அடையாளமோ யாதுளது? புத்திர சந்தானமில்லாத தம்பதிகளுக்குப் பிரார்த்தனைக்குத் தக்க சக்திவாய்ந்த உருவம் வேறு எது உண்டு? ஆயினும் சித்த சுத்தியடையாத ஆத்மாக்களுக்கு இவை பாதாளத்துக்குக் கொண்டு செல்லும் கடவுளின் அடையாளமாகும்.

அன்னியன் என்ன வேண்டுமென்றாலும் நினைத்துக் கொள்ளட்டும. நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அஃதாவது, சிருஷ்டியை ஹிந்துக்கள் ஒரு உன்னத பூஜார்கமான விஷயமென்றும், கோவிலில் காட்டியிருக்கும் சரீர சம்பந்தமான உருவங்கள் தெய்வ சிருஷ்டியைக் குறிக்கிறது என்பவைதாம். மிதுன உருவங்களைப்பற்றி மிஸ்டர் ஓ. இ. காங்குலி என்ற ரூப காவ்ய கர்த்தா எழுதுகிறார்:— "மிதுன உருவத்தை ஒரு சித்திரமாகக் கட்டிடங்களில் காட்டுவது உபநிஷத்துக்களில் உரைக்கப்பட்டவாறு மானி

டப் பிறவியின் சிருஷ்டியைக் குறிக்கும் எளிதான அடை யாளமே யாகும். பிரஜாபதியானவர் ஜகத் சிருஷ்டியில் தனக்கு சக்தியில்லை என்று கண்டு தனக்கு இரண்டாவதாக ஒரு துணையைவேண்டினார். பிறகு அவர் ஸ்திரீபுமான் ஆலிங்கனம் செய்யும் நிலைமை போன்ற உருவத்தை எடுத் துக் கொண்டார். தன்னுடைய சரீரத்தை இரண்டுபாக மாக்கி அவற்றிலிருந்து ஸ்திரீபுமான்களை உண்டாக்கி னார். இந்தக் காரணத்தினாலே யாக்ஞவல்க்ய முனிவர் தன்னை ஒரு தான்யத்தின் விதையில் பாதியாகக் கருதினார். ஆகையால் அதற்குமுன் ஜீவனில்லாப் பிரதேசம் ஒரு மாதால் ஆக்ரமிக்கப்பட்டது. சிருஷ்டிகர்த்தா அந்த மாதுடன் கலந்து சுகித்தார். அச்செய்கையினின்றும் மானிடப் பிறவி உண்டாயிற்று."

கோவில் கட்டுவதற்குத் தகுந்த இடத்தைத் தேடி எடுப் பதைப்பற்றி ஏற்பட்ட ஒரு சாஸ்திரத்தில் எந்த இடத்தில் மானிட தம்பதிகளோ, மிருக மிதுனங்களோ, வசித்து, வளர்ந்து, சந்ததிகளும் பெற்றதோ அந்த இடமே மிகுந்த உத்தமமான இடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேன்மையான சுரபி என்ற பசுக்கள் கலந்து சுகித்த இடமும், லக்ஷணமான ஸ்திரீகள் தங்கள் நாயகர்களோடு கூடிக் குலாவிய விடமும் எவ்வித ஜனங்களுக்கும் மேன்மை யான இடமாகும். ஆகையால் கோவில் நிர்மாணிக்கும்பொழுது குறிப்பிட்ட இடம் இவ்வாறு தம்பதிகளால் புனிதமாக்கப் பட்ட இடமா என்று கவனிப்பார்கள். ஆகையால் அவ்விடத் தில் சிற்பிகளும் கட்டிட வேலைக்காரர்களும் மானிட மிருக தம்பதி உருவங்களை நிர்மித்து, அந்த இடத்தைச் சற்று பரிசுததப்படுத்த முயன்றார்களென்று நாம் நம்புவதற்குக் காரணங்கள் பல உண்டு. நமக்குத் தெரிந்த ஆதிக் குகைக்

கோவிலில் இவ்வகையான உருவங்கள் ஏராளமாகக் காணப் படுகின்றன.

நமது கோவிலிலுள்ள சிலைகளிலிருந்து, நாயக்க மன்னர் கள் காலத்தில் ஜனங்களின் நடையுடை பாவனைகளைப் பற்றிப் போதுமான அறிவை நாம் அடையலாம். அநேக மாக எல்லா ஜனங்களும் ஏழைகளானாலும் சரி, தனவந்த ராணாலும் சரி, காது, கழுத்து, கை, கால் மணிக்கட்டு, விரல்கள் ஆகிய அவயவங்களில் ஏராளமாக, ஆபரணங்களும் தங்க நகை களும் அணிந்திருந்தார்கள். எல்லாச் சிலைகளின் முகங்களி லும் ஆண் உருவங்களில் மீசை காணப்பட்டாலும் அவற்றில்- சில உருவங்கள்தான் தாடியோடு கூடியதாக விருக்கின்றன. பாதரக்ஷையான செருப்பும் சர்வ சாதாரணமே. இந்தச் சிலைகளில் நாம் பார்க்கும் தலைப்பாகை தினுசுகளும், கால் ஜோடு தினுசுகளும் நம் ஆராய்ச்சிக்கு ஏராளமான விஷயங் களை கொடுக்கின்றன. ஸ்திரீ தரித்துக்கொள்ளும் ஆடை சிலை யில் காண்கிறபடியே அக்காலத்தின் ஏட்டுப் புததகஙகளிலும் உள்ளன. ஒரு ஸ்திரீயின் ஆடையைப்பற்றி பார்போசா என்ற மேல்நாட்டார் கூறுகிறார். ஆறுகஜம் நீளமுள்ள மெல்லிய நூலாடை அல்லது பட்டாடைகளை ஸதிரீகள் அணிந்து கொள்ளுகிறார்கள். அவைமிகக் கப்பான வர்ணங்கள் உள் ளவை. அச்சிலையின் ஒரு பாகத்தை இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டு மற்றொரு பாகத்தை ஒரு தோள்மீதுபோட் டுத் தங்கள் ஸ்தனங்களை நன்கு மறைக்குமாறு அதை அணிகிறார்கள். ஒரு கையும் ஒரு தோளும ஆடையால் மூடப்படாமல் இருக்கின்றன. பட்டினால் அலங்கரிக்கப் பட்ட தோல் செருப்புக்களையே கால்களுக்கு மாட்டிக் கொள்ளுகிறார்கள். தலைகளை மூடாமல் கூந்தலை வாரி முடியிட்டுக்கொள்ளுகிறார்கள். தலைமயிரில் ஏராளமான வாச

முள்ள பூக்களை சூட்டிக்கொள்ளுகிறார்கள். மூக்கில் துவார மிட்டு வைரம், சிவப்புக்கல், முதது இவைகளால் இழைக்கப் பட்ட மூக்குத்தி அல்லது மூக்குப்பொட்டுகளும் தரித்துக் கொள்ளுகிறார்கள். காதுகளிலும் துவாரங்கள் இருக்கின் றன. காதோலைகளும் அணிந்துகொள்ளுகிறார்கள். கழுத் தில் தங்க மாலைகளையும் முத்து மாலைகளையும் பூண்டு கொள்கிறார்கள். கைகளுக்குத் தங்கக் காப்புகளும் அங்கி களும், முத்துமணி வளயல்களும் அணிந்துகொள்கிறார்கள். இப்படி யிருப்பதால் ஜனங்கள் அநேகமாக எல்லோரும் தன வந்தராக இருந்தார்களென்று நன்கு விளங்குகிறது.

மதுரை மீனாக்ஷி கோவில் தென் இந்தியாவில் அதிக சொததுள்ள கோவில்களி லொன்றாகும். கோவிலினுள் இருக் கப்பட்ட கடைகளிலிருந்து மட்டும் வருடந்தோறும் 20,000 ரூபாய் வாடகை கிடைக்கிறது. கோவிலுக்கு எல்லாவிதத்தி லும் வருஷவரும்படி ஒரு லக்ஷ ரூபாயாகும். சோமசுந்தரக்கட வுள் மீனாக்ஷியம்மன் இவர்களின் ஆபரணங்களைப் பல பேர் பல விதமாக மதித்திருக்கிறார்கள். அவற்றை நாம் இருபது லக்ஷ ரூபா பெறுமானவை என்று மதித்தல் அதிகமாகாது. இவ்வாப ரணங்களில் கிழக்கு இந்தியாக் கம்பெனியாரால் கொடுக்கப் பட்ட பவுன்மாலை ஒன்றாகும.பாண்டிய அரசன் ஒருவனால் ஒரு பதக்கமும், திருமலை நாயக்கரால் கொடுக்கப்பட்ட முத்துகளி லும் சிவப்பு கற்களாலும், அலங்கரிக்கப்பட்ட தலை ஆபரண மொன்றும், ரவுஸ் பீடர் (Rous Peter)என்பவரால் கொடுக் கப்பட்ட தங்கக்கால்அங்கப்பட்டி ஜோடியும் முக்கிய ஆபரணங் கள். ரவுஸ் பீடர் என்பவர் ஒரு காலததில் மதுரை கலெக்டராக விருந்தவர்; இவர் ஓர் சமயம் யானைகளிடமிருந்து உயிர் தப்பி வந்ததின் ஞாபகார்த்தமாக இக்கோவிலுக்கு அநேக ஆபரணங் களைக் கொடுத்திருக்கிறார். சிவன் கோவிலில் ஒரு அறையில்

இவை பந்தோபஸ்தாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வரும் தனித்தனியாக ஒருசாவி கொண்டுவந்து 7 பேர்கள் ஒரே காலத்தில் திறந்தால்தான் அந்த அறையின் கதவைத் திறக்க இயலும். ஆபரணங்களை எல்லாம் யாரேனும் பார்ப்பதானுல் கோவிலுக்கு இருபது ரூபாய் கொடுக்கவேண்டும்.

இக்கோவில் ஏற்பட்ட காலம் இனனும் நன்கு புலப்பட வில்லை. ஆதிகால தஸ்தாவேஜிகளில் ஏராளமாக இக் கோவிலைப்பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. ஒரு கதையின் படி இக்கோவிலைச் சுற்றியே இந்த நகர் உண்டாயிற்று. ஆகை யால் நகரைவிட கோவில் முற்காலத்தியது என்று விளங்கு கிறது. நாம் முன்னமேயே இந்நகரைப்பற்றி அநேக கிரந்த கர்த்தாக்கள் எழுதியிருப்பதாகப் பார்த்திருக்கிறோம். ஆகை யால் கோவிலின் ஓர் பாகம் அதிகப்பழமையானது. 14-வது நூற்ருண்டின் துவக்கததில் 'மாலிக்காபூர்' தென்இந்தியாமீது படை எடுததுவந்தபோதும் இக்கோவில் இக்கரினிடம் ஒரு அழகாகவிளங்கிற்று. மேஜா நீவெல் சொல்லுகிறூர். "பாண் டிய மன்னர்களால் கட்டப்பட்ட இக்கோவிலின் முக்கிய பாகங் கள் எல்லாம் மாலிக்காபூருடைய முகம்மதியர்களால் அழிந்து நாசமாக்கப்பட்டன. இவர்கள் சுவாமி அம்மன் சன்னதி களில உட்பாகததைமட்டும விட்டுவிட்டார்கள். கோவிலுக் குள்ளிருந்த அநேக சிறு கோவில்களும் வெளிச்சுவர்களும் அவற்றிற்கிடையே யிருந்த பதினென்கு கோபுரங்களும் முற்றி லும் நாசமாக்கப்பட்டன. நாயக்க மன்னர்களாலும் அதில் முக்கியமாகத் திருமலை நாயக்கராலேயே இப்போதுள்ள கட்டிடங்களில அநேக பாகங்கள் கட்டுவிக்கப்பட்டன. இவ் வாறு இக்கோவில் ஒரு நூற்ருண்டின் வேலைப்பாடில்லை. பல நூற்ருண்டுகளின் வேலைகளை எல்லாம் இக்கோவில் குறிப்பிடு கின்றது.


பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களாலும் அநேக கட்டடங்களும் சேர்க்கப்பட்டன. ஆகையால் இக்கோவிலைக் காலத்திற்கேற்றவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

(1) திருமலைநாயக்கருக்கு முற்காலத்தது

(2) திருமலை நாயக்கர் காலத்தது

(3) திருமலை நாயக்கருக்குப் பிற்காலத்தது.

என்பனவாம்.


NORTH TOWER
ADI VEEDHI
SIXTEEN PILLAR MANDAPAM
1000 PILLER MANDAP
SANGATTAR TEMPLE
BALL PARK
ELUKADAL
FROM RY STN
WEST TOWER
ADI VEEDHI
MANTAP
SUNDARESWAR
NANDI
KALI
MUKKURINI PILLAYAR
EAST TOWER
PUDUMANDAPAM
RAYAGOPURAM
KALYANA MANDAP
ASHTA SAKTI MANDAP
DARK MANDAP
MINAKSHI
JAVANDESWAPAR
SOUTH TOWER
DINDIGUL ROAD
W
E
-SRI MEENAKSHI TEMPLE-
-MADURA-

# இரண்டாம் பாகம்

## திருவிழாக்கள்

சைத்ரோத்ஸவம் 'கண்ணுதற் பெருங் கடவுளும் கழக மோடமர்ந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'கமாகிய இம்மா மதுரை நகர் பல விதங்களில் பெருமையுடைத்தா யிருக்கிறது. முதல் இடை கடையாகிய முத்தமிழ்ச் சங்கங்களின் மூலம் தமிழைப் போற்றி வளர்த்த பெருமை யொருபுற மிருக்க,பாண்டிய மன்னர்களின் பண்டைத் தலைநகராயிருந்த பெருமையையும் இம்மதுரை கொண்டுளது. தற்காலத்தில், ஒரு பக்திமானுக்கு இந்தப் புனித க்ஷேத்திரமானது, மூவிசேடங்களாகிய, ஸ்தல விசேடம், மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று, மிகுந்த கவர்ச்சியுடன் விளங்கா நிற்கிறது. பெரிய வியாபாரஸ்தலமாகவும் இது விளங்குகிறது.

ஏற்கனவே பலவகைப்பட்ட இயற்கைப் பெருமைகளை யுடைய இப்பெருநகர் செயற்கையழகாலும் அலங்கரிக்கப் பட்டால் கேட்பானேன்! இந்நகரின் பெயரும், பெருமையும் இமயமுதல் கன்யாகுமரி வரையில் பரவியிருக்கக் காரணம் இங்கு நடைபெறும் உத்சவங்களேயாம். வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரண்டுவிதமான திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. திருவிழாக்காலங்களில் சுவாமி சுந்தரேஸ்வரரும், அம்மன் மீனாக்ஷி தேவியும் பகலிலும் இரவிலும் தெருக்களில் பவனி வருவார்கள். இந்நகரின் வீதிகளோ, விழாக்களுக்கென்றே ஒழுங்காகவும், அழகாகவும், கோவிலை

சுற்றிச் சதுரமாகவும், அமைந்திருக்கின்றன. தெருக்களின் பெயரும் மாதங்களைத் தழுவியனவாகும். மாத மொரு முறை நடக்கும் உத்சவங்கள் தவிர சில்லரை உத்சவங்கள் அநேகம் கொண்டாடப்படுகின்றன. ஆதலால் சதா சர்வதா காலம் விழா மயமாகவே யிருப்பதால் இந்நகரை 'விழா நகர்' (A city of Festivels) எனக் கூறுவது மிகையாகாது! இப்படி மாதாமாதம் முறையே கொண்டாடப்படும் உற்சவாதி வைபவங்களில், மிக முக்கியமானதும், பெரிதாகக் கொண்டாடப்படுவதும், வருடத்தில் முதன் முதலாக வருவதும் சித்திரைத் திருவிழாதான்.

சாதாரணமாக இத்திருவிழாவானது அமாவாசைக்குப் பிறகு, இரண்டொருநாட் கழித்து துவஜாரோகணம் (கொடியேற்றம்) செய்யப்பட்டுத் துவக்கும். பிறகு சித்திரா பௌர்ணமி தினத்தன்று, தீர்த்த வாரியுடன் முடிவடைந்து விடும். சிததிரா பௌர்ணமி தினத்தனறு காலை தான் திருமாலிருஞ்சோலைக் கள்ளழகர் வைகை ஆற்றிலிறங்குவார். இவ்வழகர் திருவிழா மூனறு நாட்கள் நடந்தேறும். இத்துடன் சிததிரை விழாவும் முடிவடையும்.

மதுரை மீனாக்ஷியம்மன் திருவிழாக் கொண்டாட்டம் சித்திரை மாதம், பௌர்ணமி தினததிற்குள் முடியவேண்டியதால, சில வருடங்களில் பங்குனி மாதத்திலேயே அமாவாசை தினததிற்கு இரண்டொருநாட் கழித்து துவஜாரோகணஞ் செய்யப்படும்.

கொடியேற்றத் தினத்தன்று இரவு சுவாமியும், அம்மனும் 'நகர் சோதனை'யின் பொருட்டு நகரை வலம் வருவார்கள். சித்திரைத் திருவிழாவில் சுவாமியும், அம்மனும் நான்கு மாசி வீதிகளிலேயே தான் பவனி வருவார்கள்.

இந் "நகர் சோதனை" நாளையே முதல் நாளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சாதாரணமாகப் பகலில் பவனி வரும்பொழுது தனித் தனியாகத் தங்கச் சப்பரங்களில் சுவாமியும், அம்மனும் அலங் கரிக்கப்பட்டு சுமந்து செல்லப்படுவார்கள். இரவில்தான், சிறந்த அழகான வேலைப்பாடமைந்த வாகனாதிகளின்மீது ஆரோகணிக்கப்பட்டு வருவார்கள்.

மறுநாள் இரவில் சுவாமிக்கு மாத்திரந்தான் பூத வாக னம். அந்தப் பூத வாகனத்தின் கம்பீரமான அமைப்புதான் என்னே! வெள்ளித் தகட்டினால் ஆக்கப்பட்டு எவ்வளவு பளபளப்பாகவும், அழகாகவும் அமைந்திருக்கிறது. சுவாமி யும், அம்மனும் சுமார் ஏழு மணிக்கு கோவிலை விட்டு கிளம்புவர். ஆஹா! வழியிலேதான எததனை மண்டகப்படி கள்! அவைகளின் அலங்காரங்களினால் ஒன்றை ஒன்று தோற் கடிதது விடும்போலிருக்கின்றனவே! எவ்வளவு உயர மான பந்தல்கள்! எவ்வளவு ஜோடிப்பு! எத்தனை மின் சார விளக்குகள்! இதென்ன வீதிதானா! அல்லது இந்திரனின் தலைநகரமான அமராவதியின் ராஜாபட்டையா! மாலை ஏழு மணிக்கே புறப்பட்டும், இரவு ஒரு மணி அல்லது இரண்டு மணி சுமாருக்குத்தான் கோவிலுக்குள் சுவாமி நுழையுமென் றால் எத்தனை மண்டகப்படிகள் என்று யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

கோவிலுக்குட் புகுந்ததும் "தட்டு சுத்து தீவாராதனை" நடக்கும். அதாவது சுவாமியையும், அம்மனையும் நடுவி லிருததி எல்லோரும் அவர்களை வலம் வந்த பிறகு தீபா ராதனை காண்பிக்கப்படும். இப்படியே ஒவ்வொரு நாளும். சுவாமிக்கு முன் சிறு சிறு சப்பரங்களில் விநாயகப் பெருமா னும், சுப்பிரமணியக் கடவுளும் செல்வர். அவர்களுக்கும்

முன்னதாக எத்தனையோ விதமான விருதுகளும் குடைகளும் கொண்டு செல்லப்படுகின்றன. பெரிய யானையிலிருந்து சிறிய யானை வரையிலும் வரிசைக் கிரமமாகப் பவனி செல்வது மிக அழகு. அந்த கோணைக் கழுத்து ஒட்டகத்தின் ஒய்யாரந்தான் என்னே! சுவாமி முக்குத் திரும்புவது அதிர் வெடியின சத்தத்தின் மூலம் ஊரிலுள்ளோருக்கு அறிவிக்கப்படும். யானை மீது அடிக்கப்பெறும் நகாராச் சத்தமும், ஜாலராச் சத்தமும், "கடவுள் இதோ வந்து விட்டார்" எனப் பறை சாற்றும்.

அடடா! தீவர்த்திகள் எத்தனை வகைகள்! நக்ஷத்திர தீவர்த்தி, சின்ன தீவர்த்தி, அடுக்கு தீவர்த்தி முதலியன. இவைகளுடன் 'காஸ்'லைட்டுகளும்கூட வருவது ஓர் ஹாஸ்ஸியத்தை உண்டாக்குகிறது.

அந்த நாயனக்காரன் சமயதத்திற்குத் தக்கவாறு ஆலாபனை செய்யும் ராகங்களின் ஜாலந்தானென்னே! எவ்வளவு இனிமை, எவ்வளவு மாதுரியம்! இச்சமயங்களில் கண்ணிற்கு காட்சி, காதிற்கின்பம், மனத்திற்குச் சாந்தி! என்னே ஈசுவரனின் திருவிளையாடல்!

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுடன் கடவுள் பவனி வருவது கண்கொள்ளாக் காக்ஷியேயாம். இக்காக்ஷியை வெறும் வார்த்தைகளால் வர்ணிப்பது முடியாத காரியமேயாம்!

சுவாமியும், அம்மனும் முன் செல்ல பின்னுக்கு, வேதமே உருவெடுத்து வருவதுபோன்று பிராமண சிரேஷ்டர்கள் மூன்று வரிசையில் முறையே 'ரிக்' 'யஜுஸ்' 'சாம' மாகிய மூன்று வேதங்களையும் கம்பீரமான, இனிமையான சாரீரத்துடன், சுருதியுடன் ஒத்து சொல்லிக்கொண்டு வருவது மிக அழகு. ஆஹா! எப்பேர்ப்பட்ட தத்துவம் இதில் பொதிந்து கிடக்கிறது. கடவுள் வழிகாட்ட நான்கு வேதங்

களும் அவரைப் பின்தொடர்கின்றன. வேதம்படித்த யாரும் கடவுளை எளிதில் பின்பற்ற முடியுமல்லவா!

இவ்வரிசைக்குப் பின் கடவுளின் பெருமையைப் பாட்டு மூலமாக, பக்தி சிரத்தையுடன் பாடிவரும் திருப்புகழ்ப் பஜனைக் கோஷ்டியும், தேவாரக் கோஷ்டியும் நம் கவனத்தை கவருது விடா. திருப்புகழ்ப் பாசுரங்களுக்கு வியாக்யானம் செய்யும் அப்பெரியாரின் வாக்கு வன்மை தான் என்னே! இக்கோஷ்டிகள் காலையிலும், மாலையிலும் இறைவனை இடைவிடாது பின்தொடரும்.

மூன்ரும் நாளிரவு ஸ்வாமி கைலாய வாகனத்தில் வீற்றிருப்பார். அம்மனுக்குக் காமதேனு வாகனம்! என்ன பொருத்தம்! காமதேனு கேட்ட வரத்தைக் கொடுக்கும். அதை வாகனமாகக் கொள்ளும் மீனுக்ஷியின் அருளையும் அன்பையும் பற்றிச் சொல்லவும்வேண்டுமா! தேவி அங்கயற் கண்ணி, தன் கடைக்கண்ணுல் சிறிது நோக்கின் நமது மலை போன்ற பாபங்களும் சூரியனைக் கண்ட பனித்துளிபோல் பறந்துவிடாதா?

நான்காவது நாள் காலை சுவாமியும் அம்மனும் கோவிலை விட்டுப் புறப்பட்டு வில்லாபுரம் பாவக்காய் மண்டபத்திற் தங்குவர். பிறகு இரவில் தங்கப் பல்லக்கில் ஆரோகணித்துப் பவனி செல்லுவார்கள்.

ஐந்தாம் நாளிரவு குதிரைவாகனங்களின் மீதேறி சுவாமியும், அம்மனும் வலம வருவர்.

ஆரும் திருநாள் மிகமிக முக்கியம். ஏனெனில அன்று பிரானும், பிராட்டியும் ரிஷப வாகனத்தில் அலங்கரிக்கப் படுகிருர்கள். அந்த ரிஷப வாகனத்தின்மீது அமைந்திருக்கும் பூவேலைப் பாட்டை என்ன சொல்வது! இன்றுதான் சமணரைக் கழுவேற்றிய ஆகமம் நடைபெறும். ஒரு பட்

டர் அவ்வாகனத்தின் மீதேறி எல்லோருக்கும் அந்த ஆகமத்தின் கதையை விஸ்தரித்துச் சொல்வார். பிறகுதான் சுவாமி கோயிலை விட்டுக் கிளம்பும். அவ்வாகமக் கதை, திருஞான சம்பந்தரருளினல் சைவ மதமானது ஜைன மதமாகிய, சமண மதத்தின்மீது வெற்றிகொண்டதைப் பற்றியது. கதை பின் வருமாறு. கூன் பாண்டியனுக்குக் காய்ச்சலும், வயிற்று வலியுங் கண்டது. அவன் ஜைன மதத்தைத் தழுவியவன். சமணர்களால அவன் வியாதியைச் சுவஸ்தப்படுத்த முடியவில்லை. இது கண்டு சைவபிராணுகிய திருஞான சம்பந்தரின் உதவியை நாடினன் அம்மனனன். திருஞான சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்று சொல்லித் திருநீரைப் பாண்டியன் சரீரததில் பூசினர். அவ்வளவுதான் பாண்டியனின் வியாதி ஒரே நொடியில் பறந்தோடியது. உடனே மன்னனும் சமண மதத்திற்குக் கடும் விரோதியானன். சமணர்கள்கள் பலவிதத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். ஞான சம்பந்தர் அவர்களை வாதுக் கிழுததார். அவர்களுஞ் சம்மதித்தனர். சமணர்கள் தங்கள் மதக் கொள்கைகளை ஏட்டில் எழுதி நெருப்பில் போட்டார்கள். ஞானசம்பந்தரும் சைவ மதக் கொள்கைகளை ஒரு ஏட்டில் எழுதி அவ்வாறே செய்தார். ஆனல்...என்னே ஆச்சரியம்! திருஞான சம்பந்தர் போட்ட ஏடு எறியாது பச்சைப்பசேரென்று இருந்தது. சமணர்கள் போட்ட ஏடோ எறிந்து சாம்பராயிற்று! பிறகு திருஞான சம்பந்தருடைய கொள்கையடங்கிய ஏடும், சமணர்களின் கொள்கையடங்கிய ஏடும் வேகவதியான வைகை நதியில் விடப்பட்டன. ஆனல் ஞானசம்பந்தருடைய ஏடு மட்டும் நீரோட்டததை எதிர்த்து வந்தது! அவ்வேடு எதிர்த்து வந்து அகபபட்ட இடந்தான் இப்பொழுது திருவேடகம் எனக்கூறப்படுவது. சமணர்களின் ஏடு ஆற்

றுடனேயே சென்று கடலை அடைந்தது. பிறகென்ன? தோல்வி யுற்றபடியால் சமணர்கள் எண்ணாயிரம் பேர்களும் கழுவிலேற்றப்பட்டனர்.

இதையேதான் திருவிழாவின் ஒரு அம்சமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் நாம் ஒரு விஷயத்தில் வருத்தமடையத்தான் வேண்டும்! நம் சைவமதம் எப்பொழுதும் சாத்வீக முறையைக் கையாளுவது. ஒரு சமயம் அது சமணமதத்தை விரோதித்துப் பல கொடுஞ் செயல்கள் புரிந்தது வாஸ்தவந்தான். ஆனால் இப்பொழுது அதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு, அச்செயல்களை உத்சவதினங்களிலும் கலந்து கொண்டாடுவது விசனிக்கத்தக்கதே! இம்மாதிரி ரிஷபவாகனம் ஒவ்வொரு மாதத்திலும் முக்கியமாக ஆறுந்திருநாளன்று கொண்டாடப்படுகிறது. மேலும அதனுடன் சேர்த்து "சமணரைக் கழுவேற்றிய லீலை"யும் கொண்டாடப்படுகிறது. வன் இந்த லீலை இவ்வளவு முக்கியஸ்தானம் வகிக்கிறதென்பதெல்லாம் புரியவில்லை!

ஏழாம் நாளிரவு சுவாமிக்கு நந்தி வாகனம், அம்மனுக்கு யாளி வாகனம். இந்த ஏழு நாட்களும் முக்கியமானவையல்ல. இனி வரும் நாட்கள்தான் முக்கியம். எட்டாம் நாள் அமமனுக்குப் பட்டாபிஷேகம. அன்று பகல் மேலை மாசி வீதியிலுள்ள கட்டுச்செட்டி மண்டபத்தில் அம்மன் தங்கியிருக்கும். பிறகு கோவிலுககுச் சென்று பட்டாபிஷேக வைபவம் நடைபெறும். மீனாக்ஷி தேவியின் தகப்பன் மலையத்துவஜ பாண்டியன சுவர்க்கமேகிய பிறகு மீனாக்ஷி, மதுரை ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு செங்கோல் புரிவதே இவ்விழாவின் தாத்பர்யம்.

ஒன்பதாம் நாளன்று அம்மன் திக்குவிஜயம் நடைபெறும். அரசி மீனாக்ஷி மதுரையில் ஒப்புயர்வற்ற தனி

யரசு செலுத்தி வருகிறாள். வெற்றி மேல் வெற்றி கொள்ள வேண்டுமென்ற ஆசை மேலீட்டினால் எல்லா அரசர்களையும் கப்பஞ் செலுத்தும்படி செய்த பிறகு, திக்குப் பாலகர்களாகிய இந்திரன் முதலிய அஷ்ட தேவதைகளையும் போருக்கிழுக்கிறாள். இந்திரனாகட்டும், குபேரனாகட்டும், யமனாகட்டும் இவள் விடும் அஸ்திர, சஸ்திரங்கள் முன் நிற்கமுடியாது, முறியடிக்கப்பட்டு ஓடுகின்றனர். இவ்வாறு முறையே எழு திக்குப் பாலகர்களும் தோற்கடிக்கப்பட்டனர். கடைசியில் பரமசிவனதிபதியாகவிருக்கும் ஈசானிய திக்கிற்கும் வருகிறாள். தேவிக்கும் பரமேசுவரனுக்கும் கோரமான யுத்தம் நடைபெறுகிறது. சிவனும் சக்தியுமே சண்டையிடுவதென்றால் பயங்கரமா யில்லாது வேறெப்படி யிருக்கமுடியும்? ஆனால் முடிவில் தேவி மீனாக்ஷி தோல்வியை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியதாயிற்று! ஏனெனில் மீனாக்ஷி தேவிக்குப் பிறந்ததிலிருந்து மூன்று மார்புகளுண்டு. யாரைப் பார்த்தவுடன் அம்மூன்றாவது மார்பு மறைகிறதோ அவனே இவளது மணாளன். பரமசிவன்முன் அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்து விட்டது. பிறகென்ன? கல்யாணந்தான்!

பத்தாம் நாள் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கலியாணம் அல்லோல கல்லோலப்படும். அன்று அக்கலியாண மண்டபம் ஒரு தனிச் சொகுசுடனும், சோபையுடனும் விளங்கும். விதவிதமான விளக்குகள், சரவிளக்குகளென்ன? லஸ்தர் குளோப்புகளென்ன? மின்சார விளக்குகளின் மாய ஜாலங்கள்தானென்னே? கண்ணைப் பறித்திடும் வெளிச்சம்! பல வர்ணமுள்ள ரசகுண்டுகள். எல்லாம் ஒருங்கே சேர்ந்து இதென்ன மதுரைக் கோயிலின் ஓர் பகுதியா அல்லது இந்திர சபையா வென ஐயுற வேண்டித்தான் வரும். ஏன்? நம் போன்ற மனிதர்கள் கலியாணத்திற்கே பிரமாத

மான ஏற்பாடென்றால் தேவதைகளின் விவாகத்திற்குச் சொல்லவும் வேண்டுமோ? நல்ல சுப முகூர்த்தத்தில் சுந்தரேஸ்வரருக்கும் தேவி மீனுக்ஷிக்கும் விவாகம் இனிது நடந்தேறும். ஆஹா! எவ்வளவு கரகோஷம்! எத்தனை ஜனங்கள்! எள்ளுப் போட்டாலும் கீழே விழாது! ஜனங்களுக்குத்தான் எவ்வளவு பூரிப்பும், ஆநந்தமும்! கலியாணத்திற்கு திருப்பறங்குன்றம சுப்பிரமணியரும வருவார்.

அக்கலியாண மண்டபத்தின் தென்புறச் சுவரில் குண்டோதரனின் சிலை செதுக்கியிருக்கிறது. அச்சிலையின் முன் அன்னம் பரப்பப்பட்டிருக்கும. குண்டோதரனைப் பற்றி, திருவிளையாடற் புராணததிற் சொல்லப்பட்ட கதை பின்வருமாறு :—

குண்டோதரன், சிவபிரானுக்குக் குடைபிடிக்கும் ஓர் பக்தன். அவன் பெறுவயிறு படைததவனுதலால் அவனுக்கு அப்பெயர் வந்தது. கலியாணத்திற்குப் பிறகு, ஏராளமாக சாதமும், கறி முதலிய பதார்த்தங்களும் எஞ்சிவிட்டன. இதைப் பார்வதி தேவியார் சிவபிரானிடம் முறையிட்டாள். பரமனும உடனே, குண்டோதரனுக்கு அடக்கமுடியாத பசியை உண்டாக்கினுர். அவனும் எஞ்சிய பதார்த்தாங்களெல்லாவற்றையும் உண்டான். பசியாறியபாடில்லை. சிவனை வேண்டிநின்றான். சிவனும் அன்னபூரணியைத் தியானித்தார். அத்தேவியினருளினுல் அன்னக்குழிகள் தோன்றின. (அப்படித் தோன்றிய விடந்தான் இப்பொழுது அன்னக் குழி மண்டபம் எனக் கூறப்படுகிறது) குண்டோதரனும் வயிறுர உண்டான். ஆனுல் மீளாத் தாகமுண்டது. அவன் ஊரிலுள்ள கிணறு, குளங்களிலுள்ள தண்ணீரையெல்லாம் குடித்தான். தாகம் தீரவில்லை. சிவபிரான் அவன் பரிதவிப்பதைப் பார்த்துத் தன் தலையிலிருந்து கங்கா தேவியை ஓர்

புண்ணிய நதியாக ஓடச்செய்தார். குண்டோதரனும் இரண்டு கைகளாலும் அணைபோட்டு தாகந்தீரக் குடித்தான். அவ்வாறு அவன் கை வைத்துக் குடித்ததால்தான் அவ்வாற்றிற்குப் பெயர் "வைகை" எனப்பட்டது போலும்!

இரவு ஸ்வாமிக்கு யானை வாகனம். அம்மனுக்குப் புஷ்பப் பல்லக்கு! கலியாணமாகி விட்டதோ யில்லையோ மாப்பிள்ளைக்குக் குஷி. யானை மீதேறி விட்டார். அம்மாளுக்கு வெட்கமோ யில்லையோ, பல்லக்கிற்குள் புகுந்துவிட்டார்.

மறுநாட்காலை இரதோற்சவம். சுவாமியும், அம்மனும் தனித்தனியே பிரும்மாண்டமான தேரில் ஆரோகணிக்கப்பட்டு நான்கு மாசி வீதிகளிலும் இழுத்துச்செல்லப்படுவார்கள். இரதத்தின் ஆக்ருதிதான் என்ன? கயிற்றின் பரிமாணந்தான் என்ன? இரண்டு கைக்கும் அடங்காதிருக்கிறது. மலையையே இழுத்து வருவது போன்று, அதை இழுக்கும் ஜனங்களின் தொகைதான் என்ன? இரவு சுவாமியும் அம்மனும் தேர்த்தடம் பார்க்க பவனிவருவார்கள். சப்தாபரண சப்பரத்தில் அலங்கரிக்கப்படுவர்.

மறுநாள் தீர்த்தவாரி. அன்று சித்திரா பௌர்ணமியாதலால் மதுரை மீனாக்ஷி யம்மன் திருவிழா முற்றுப் பெறுகிறது.

சித்திரா பௌர்ணமி தினத்தன்று ஆற்றிலிறங்கவேண்டியதாகையால், அழகர் பிரான் முதல் நாட் காலை தன்னிருப்பிடமாகிய திருமாலிருஞ்சோலை யெனப்படும் அழகர் மலையை விட்டுக் கிளம்பிவிடுவார். அழகர் மலை, மதுரைக்கு வடக்கே பன்னிரண்டு மைலகளுக்கப்பாலுள்ள ஓர் சிறு ஊர். அங்கிருந்து, அழகர் பல்லக்கில் சுமக்கப்பட்டு வருவார்.

மதுரைக்குப் பன்னிரண்டு மைல்களுக்கப்பாலிருந்து அழகர் வருவானேன் எனக்கேட்க வேண்டியது அவசியந் தான். திருமால், மீனுக்ஷியின் சகோதரர் அல்லவா? அவர் தன் தங்கையின் கலயாணத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு, ஆயிரம பொன் சப்பரம் முதலிய, பலவகைப்பட்ட அரும்பெரும் சீர்வரிசைகளுடனே மதுரைக்கு வருகிறார். வந்தபின கல்யாணம் நடந்த விஷயம், மதுரை கூடலழகப்பெருமாள் மூலம் தெரிகிறது. அவ்வளவுதான். கோபம் வந்து விடுகிறது. தன்னூருக்கு மூட்டையைக் கட்டுகிறார். இதுதான் உண்மையான கதை. மதுரை எல்லையை அடையுமுன்பே அழகரை ஜனங்கள் எதிர்கொண்டு தரிசிப்பார்கள். இதுதான் " எதிர் சேர்வை " என்பது.

மதுரை எல்லையை அடைந்ததும் அம்பலக்காரர் மண்டகப்படியில் சில மணிநேரங்கள் தங்கியிருந்த பிறகு பல்லக்கு மீது ஆரோகணித்து ஆற்றிலிறங்கக் கிளம்பிவிடுவார். அம்பலக்காரர் மண்டகப்படியில் நடைபெறும் வாணவேடிக்கை மிக அற்புதமே.

இரவு எட்டுமணி சுமாருக்கு, அம்பலக்காரர் மண்டகப்படியை விட்டுக்கிளம்பி ஒவ்வொரு மணடகப்படியிலும், சிறிது அவகாசம் எடுததுக் கொள்வார். பிறகு தல்லாகுளததிலுளள பெருமாள்கோயிலில இரவு முழுதும் கழிந்த பிறகு, அதிகாலையிலேயே புரவிமீது கள்ளத் திருக்கோலத்துடன் ஆரோகணித்து ஆற்றிலிறஙகக் கிளம்பி விடுவார். ஆற்றிலிறங்கும்பொழுது, விடிந்துவிடுமென்றால் எத்தனை மண்டகப்படிகள் என்று கணக்கிட்டுக்கொள்ள வேண்டியது தான்!

எவ்வளவு கூட்டம். எங்குப்பார்த்தாலும் ஒரே மனிதமயந்தான். ஆற்றங்கரையிலும், ரோட்டிலும், மண்டகப்படி

களிலும் ஒரே கூட்டந்தான். மனித வெள்ளம் வருவது போலத்தான் தோன்றும்! ஊரிலிருக்கும் ஜனங்கள் போதாதென்று, அக்கம்பக்கத்திலிருக்கும் கிராமங்களிலிருந்தும் ஜனதிரள் வந்து குவியும். அடடா! எத்தனை விதமானப் பட்டாடைகள்! முண்டாசுத்தலைகளெத்தனை! பூக்கொண்டைக் கூந்தல்கள் எததனை? அந்தக் கூட்டதகைக் கணக்கிட முடியாது!

இவ்வளவு கூட்டம எவ்வாறு சமாளிக்கப்படுகிறதென்று கேட்பது நியாயந்தான. அதற்கென்ன? சாரணப்படை இருக்கிறது, சமூகத்தொணடையே தொழிலாகக் கொண்ட சமூகத்தொண்டர் படையுமிருக்கிறது. வியாதி யுள்ளவர்களுக்கும், காயமுற்றவர்கட்கும சிகிச்சை செய்ய சுவஸ்திக் மண்டாலும், ரெட் கிராஸ ஸொஸைட்டி (Red Cross Society) யும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மதுரை முனிசிபாலிட்டியும், போலீசும் இருக்கிறது.

அழகர் இறங்கிய ஒவ்வொரு மண்டகப்படியிலும் பற்பலவிதமான அன்னங்கள் வருவோருக்குப் படைக்கப்படும். சாப்பாட்டிற்கும் கவலையில்லை! பொழுது புலர்ந்ததும், சித்திரா பௌர்ணமி தினத்தன்று அழகர் ஆற்றிலிறங்கி விடுகிருர். பக்தர்களின் ஆநந்தந்தானென்னே! அன்று இரவை கள்ளபிரான் தேனூர் மண்டபத்தில் கழிப்பார். மறுநாட் காலை சோலைமலையான சேஷவாகனமீது காக்ஷியளிப்பார். வண்டியூரிலிருக்கும தேனூர் மண்டபத்திலிருந்து மாலை கருட வாகனத்தில் ராமாராயர் மண்டபத்திற்குச் சேருவார். அன்றிரவு தசாவதாரக் காக்ஷி நடைபெறும். ஆண்டவன் தரித்த அவதாரங்களின் மகிமைதானென்ன! அம்மண்டபத்தினெதிரில் நடக்கும் வாணக் காக்ஷி கண்கொளாக் காக்ஷியேயாம்! அருணேதயத்தில் ஸ்ரீ கள்ளபிரான் மோகனவ

தாரத்தில் காக்ஷியளிப்பது நம்மெல்லோரையும் மோகித்து விடுமென்பதில் ஐயமில்லை! அங்கிருந்து ஊரை நோக்கிக் கிளம்பி விடுகிறார் அநந்தராயர் பல்லக்கில். பிறகு மைசூர் மண்டபதகை யடைந்ததும் புஷபப் பல்லக்கு ஜோடிக்கப் படும். இரவு பெருமாள் கோயில் போய்ச் சேர்வார். மறுநாட் காலை அழகர் பிரான் கள்ளர் திருக்கோலத்துடன் திருமலைக்கு எழுந்தருளுகிறார்.

கள்ளழகர்! எப்பேற்பட்ட பொருததமான பெயர்! வரும்போது கையை வீசிக்கொண்டுவந்து, பலவகைப் பணடஙகளை உண்டு, ஊருக்குத் திரும்பும்பொழுது, வண்டி நிறையப் பணத்தையும், நம்மனத்தையும் ஒருங்கே கவர்ந்து செலகிறார். என்னே இக்கள்வனின் தீரம்! இவ்வாறாக மதுரை யாறறின் வடகரையிலேயே நம்பிரான் மூன்று முழு நாட்களையும், ஒரு முழு இரவையும் கழித்த பிறகு, தன்னூர் திரும்புகிறார்.

மதுரையில கொண்டாடப்படும், திருவிழாக்களில் ஒன்றாகிய, சைத்ரோத்சவமட்டுமே இவ்வளவு தனிப்பெருமை எய்தினால், பன்னிரு திருவிழாவையும் கொண்ட மதுரையின் பெருமைதான் என்னே! இல்லை அத்திருவிழாக்களை வர்ணிக்கப் புகுந்தால்தான் இலேசில் ஆகக்கூடிய காரியமா? இவ்விழாக்களை வருணிப்பது ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும் முடியாது!

வஸந்தோற்சவம்: இவ்வஸந்தோற்சவம், வருடாவருடம், வைகாசி மாதத்தில் கொண்டாடப்படும். வஸந்த காலத்திற்கேற்பட்ட பலவகை விளையாட்டுகளில் கடவுள், தன் மனையாட்டியுடன் காலங் கழிப்பதாக ஐதீகம். இவ்வுற்சவம், சுவாமி சன்னதி யெதிரிலிருக்கும் புது மண்டபத்தில் கொண்டாடப்படும். அம் மண்டபத்திற் கெதிரில் ஓர் தண்

ணீர்த தொட்டியிருக்கிறது. அதில தண்ணீர் நிரப்பப்பட்டு அழகு படுத்தப்படும். சுவாமியும், அம்மனும் மண்டபததில் அலங்கரிக்கப்படுவா. பிறகு தீர்த்தததொட்டியைச் சுற்றிவரும். அதன் பிறகு சுவாமியும், அம்மனும் சிததிரை வீதிகளையும் வலம் வந்தபின் கோவிலுக்குள் செல்லும். அன்றைய விழா அததுடன் முடிவடையும். இவ்வுறசவம பத்து நாட்கள் நடந்தேறும். கடைசி நாளன்று ரிஷப வாகனம் குறிப்பிடத் தக்கது.

ஊஞ்சல் உற்சவம் : இவ்வுற்சவம், ஆனிமாதத்தில் பத்து நாட்களுக்கு நடந்தேறும். இவ்வுற்சவத்தில சுவாமியும் கலந்துகொள்வார். அலங்காரம், சுவாமி பிராகாரத்தில், சனீஸ்வர பகவான் பக்கத்திலுள்ள, நடராஜர் மண்டபததில் செய்யப்படும். ஊஞ்சலானது பலவித புஷ்பங்களாலும், விளக்குகளாலும் அலங்கரிக்கப்படும். இவ்வுற்சவத்தில் சுவாமியும் அம்மனும் வெளியே வலம் வராது. அம்மண்டபத்தில், சுவாமியினெதிரே அநேகம் பெண்டிர் இனிமையாகப் பாடிக் களிப்பர்.

முளைக்கோட்டு உற்சவம் : இம்முளைக்கொட்டு உற்சவம், ஆடி மாதம் கொண்டாடப்படும். இவ்வுற்சவததிற்கு அறிகுறியாகப் பச்சைப்பயிறு, பாசிப் பயறு, கடலை, எள்ளு, நெல் முதலிய தானியங்கள் விதைக்கப்படும். அவைகளும உற்சவம் முடிவதற்குள் முளை தழைத்துவிடும். பிறகு அம்முளைகள் கடைசி நாளன்று பொற்றாமரைக் குளத்தில் கொட்டப்படும். இவ்வுற்சவத்தில் அம்மன மட்டும் காலையிலும், மாலையிலும் கோவிலைச்சுற்றி ஆடி வீதியில் வலம் வரும். ஆடி வீதியென்பது கோவிலுக்குள்ளாகவே யிருக்கும் ஓர் கருங்கல் பாவப்பட்ட வீதி. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வாகனமுண்டு. முதல் நாள் சிமமவாகனம், இரண்டாம் நாளன்று

அன்னவாகனம், மூன்றும் நாள் சிம்மாசனம், நான்காம்நாள் யானை வாகனம், ஐந்தாம் நாள் ரிஷபவாகனம், ஆறும் நாள் கிளி வாகனம், ஏழாம் நாள் புஷ்பப்பல்லக்கு. இந்தப் புஷ்பப் பல்லக்கு நன்கு ஜோடிக்கப்படும். ரிஷப வாகனம் எவ்வளவு விசேஷமாகக் கருதப்படுகிறதோ, அதேமாதிரிப் புஷ்பப் பல்லக்கும் விசேஷமாக எண்ணப்படுகிறது. சுவாமியும், அம்மனும் இரவு மாலை மாற்றிக்கொள்ளும். மறுநாளாகிய எட்டாம் நாள் குதிரைவாகனம். ஒன்பதாம் நாள் புஷ்பவிமானம். காலையில் சட்டத்தேரில் அம்மன் அலங்கரிக்கப்படும். தேர் கோவிலைச் சுற்றி சித்திரை வீதியில் இழுத்துச் செல்லப் படும். இரவு நாயக்கர் மண்டபததில் சைத்யோபசாரம் நடை பெறும். பத்தாம் நாள் கனகதண்டியலுடன் இத்திருநாள் முடிவடையும். காலையில் பொற்றாமரையில் அம்மன் தீர்த்தம் கொடுக்கும்.

ஆவணிமூல உற்சவம் அல்லது பிட்டுத்திருநாள்: சித்திரை உற்சவத்திற்கு அடுத்தபடியாக, மிக விசேஷமாகவும், பெரிதாகவும் கொண்டாடப்படுவது ஆவணி மூல உற்சவந்தான். இவ்வுற்சவத்தில் சுவாமியும், அம்மனும் தினம் காலையிலும, மாலையிலும், சப்பரங்களிலும், வாகனாதிகளிலும் அலங்கரிக்கப்பட்டு, நான்கு ஆவணி மூல வீதிகளையும் வலம் வருவர். இவ்வுற்சவகாலத்தில் அநேகமாக, பகவானின் திருவிளையாடல்களே கொணடாடப்படும். மேலும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், திருவாதவூரி (இக்கிராமம் மதுரைக்கு வடகிழக்கேயுள்ள மேலூரிலிருந்து ஆறு மைல் தெற்கிலிருக்கிறது) லிருந்து மாணிக்க வாசகப் பெருமானும் மதுரைகு வந்து இவ்வுற்சவத்தில் கலந்து கொள்வர். அக்கம் பக்கதது ஊர்கள் இதில் கலந்து கொள்வதால் ஜனத்திரள் மிகவும் அதிகமாகத்தா னிருக்கும்.

ஆகையால்தான் இது சித்திரைத் திருநாளுக்கு அடுத்தபடியாகப் பெயர் பெற்றது. இந்த ஆவணி மூல உற்சவத்தில், பிட்டுத் திருவிழாதான் மிகவும் சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. இந்தப் பத்து நாள் உற்சவத்தில் மூன்று நாட்கள், ரிஷபவாகனத்திற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும்போலேற்பட்ட ஆறுந்திருநாள் ரிஷபவாகனம் தவிர, பிட்டுத் திருநாளன்றையும், கடைசி தினத்திலும் ரிஷபவாகனம் விசேஷமாக கொண்டாடப்படுகின்றது.

திருவிளையாடல்களெல்லாம் சாதாரணமாகக் காலையில் தான் நடைபெறும்.

முதல் நாளன்று, கோவிலுக்குள் குசவ மண்டபத்தில் கருங்குருவிக்கு உபதேசம் செய்த திருவிளையாடல் நடைபெறும். ஆகமம் பின்வருமாறு :

மதுரையில் சுகுண பாண்டியன் செங்கோல் செலுத்தி வந்த காலம். தான் முற்செய்த தீவினையின் பயனாய் ஒருவன் கருங்குருவியாக ஜன்மமெடுத்தான். அக்கருங்குருவி துஷ்டப் பறவைகளால் துன்புறுத்தப்பட்டது. துன்பதைப் பொருக்கமாட்டாது அது சாலையோரத்திலிருந்த ஓர் மரத்தில் ஒண்டிக்கொண்டது. கீழே தவவேடந் தாங்கிய ஓர் பெரியார் மதுரையின் மூவிசேடங்களையும், தன் வாயாரச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட அக்குருவி மதுரை சேர்ந்து, பொற்றாமரையில் மூழ்கி, சுவாமியைத் தரிசித்து வந்தது. இவ்வாறு மூன்று நாட்கள் செய்யவும் சுவாமி அதன்மீது இரக்கங்கொண்டு அதற்கு மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தனராம். இரவு சுவாமிக்கு கற்பக விருக்ஷம், அம்மனுக்கு சிம்மவாகனம்.

இரண்டாம்நாட் காலை, முத்துச்செட்டி மண்டபத்தில் தங்குவர். அன்று நாரைக்கு முக்திகொடுத்த ஆகமம் நடைபெறும். கதை பின்வருமாறு :

பாண்டி நாட்டின் தென்திசையிலுள்ள ஓர் ஊரில் ஒரு நாரை ஓர் தாமரைத் தடாகத்தில் மீன் புசிப்பது வழக்கமாகக் கொண்டிருந்தது. அக்குளம் வெயிற் காலத்தில் வறண்டு விட்டபடியால், இரையின் நிமித்தம், காட்டிலுள்ளதோர் குளக்கரையை யடைந்தது. அக்குளத்தில் சிவனடியார் பலர் குளித்துக்கொண்டிருந்தனர். நாரைக்கு ஞானம் பிறந்தது. "ஆஹா! இப்பெரியோரின் உடலைத் தீண்ட இம் மீன்கள் என்ன புண்ணியம் செய்தனவோ. இவைகளை புசித்தல் பாவம்" என எண்ணி வாளாவிருந்தது. கரையில் சிவனடியார் மதுரைப் புராணத்தைப் பாடி மகிழ்ந்தனர். நாரை மதுரையின் பெருமையைக் கேட்டு, மதுரை சேர்ந்து பொற்றாமரையில் ஸ்நானஞ் செய்தது. சிவபிரான் அதன் தூய்மைக்கும், பக்திக்கும் மெச்சி அது கோரிய வரத்தைத் தருவதாக வாக்களித்தார். அதுவும், "இக்குளத்தில் மீன், தவளை முதலிய நீர் வாழுமுயிர்கள் ஏதுமில்லாமல் செய்ய வேண்டுமென்று" வேண்டிக்கொண்டது. அதன்படியே அக் குளத்தில் இன்று மட்டும் மீன தவளை யேதும் கிடையா. நாரையும் சிவலோகம் சேர்ந்தது. இரவு சுவாமிக்கு பூத வாகனம், அம்மனுக்கு அன்னவாகனம்.

மூன்றாம் நாட்காலை, சுவாமியும, அம்மனும் தெற்கு ஆவணி மூலவீதி ஆயிர வைசிய காசுக்காரச்செட்டிமார் மண்டபத்திற் தங்குவர். அன்று மாணிக்கம் விற்ற லீலை நடைபெறும். லீலை பின்வருமாறு :

வீர பாண்டியனுக்குச் சகல பாக்கியங்களிருந்தும், மற்ற ஸ்திரீகள் மூலம் பெற்ற அநேக பிள்ளைகள் இருந்

தாலும், தனக்குப் பிறகு பட்டத்திற்குவரப்பட்ட மகிஷியின் மூலமாக ஓர் மகவும் வெகு நாளாக உண்டாகவில்லை. பிறகு சிவபிரானருளால் ஓர் அருமந்த செல்வன் பிறந்தான். ஓர் நாள் வீர பாண்டியன் வேட்டையாடச் சென்றிருந்தபோது, விதி வசத்தால் ஓர் புலியால் கொல்லப்பட்டிறந்தான். இதை யறிந்த அவனது ஏனைய சகோதரர்கள் பொக்கிஷத்தையும் கிரீடத்தையும் களவு செய்து மந்திரிகளுக்கும் தெரியாமல் ஒளிந்துகொண்டனர். மந்திரிமார் அரச குமாரனுக்கு மகுடாபிஷேகம் செய்யும் பொருட்டு பொக்கிஷத்தைத் திறந்து பார்த்தனர். அதில் ஒன்றும் காணப்படவில்லை. ஒன்றுந் தோன்றாது, அரச குமாரனை அழைத்துக்கொண்டு, ஈசன சன்னிதி யடைந்தனர். இவர்கள் கோவிலினுள் நுழையு முன்பே ஓர் வைசியன் எதிர்ப்பட்டான். அவனும் இவர்கள் மனக்கிலேசத்தை யுணர்ந்து, தன்னிடமிருக்கும் மாணிக்கத்தைத் தந்து உதவினன். மந்திரிமார் விலைகொடுக்க அவனைப் பார்க்க, அவ்வைசியன காணப்படவிலலை. என்னே! ஈசன் திருவிளையாடல் 'தன் பக்தர்களை ரக்ஷிக்கும் பொருட்டு என்னென்ன சிரம மெடுத்துக்கொள்ளுகிறார். பகுத்தறிவற்ற ஜீவ ஜந்துக்களிடமே கருணை கொள்ளும் எம்பிரான் அருள் தான் என்னே? இன்றிரவு சுவாமிக்குக் கைலாச வாகனம், அம்மனுக்கு காமதேனு வாகனம்.

நான்காம் நாட் காலை, ராமசாமி பிள்ளை மண்டபத்தில் தங்குவர் பிறகு நாயக்கர் மண்டபத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த திருவிளையாடல் நடைபெறும!

ஓர் நாள், வம்ச சூடாமணி பாண்டியன் தன தேவியுடன நந்தவனத்தில உலவிக்கொண்டிருந்தான். திடீரென்று மனைவியின கூந்தலினின்று நறுமணம வீசியது. அம்மணம்

இயற்கையோ, செயற்கையோ என ஐயங்கொண்டதால், தன் சந்தேகத்தை நிவர்த்திப்போனுக்கு ஆயிரம் பொன் தரப்படு மென்று அறிவித்து, பொன்னை மூட்டையாகக் கட்டி சங்க மண்டபத்தில் கட்டுவித்தான். இதையறிந்த ஓர் சிவபக்தன், தருமி யென்பான், தான் அதை அடைய வேண்டி, சிவனைப் பிரார்த்தித்தான். சிவனும, அரசன் சந்தேகம் நீங்க, ஓர் ஏட்டில் ஓர் பாட்டை எழுதி தருமிக்குக் கொடுத்தார். தருமியும் பரிசைப் பெற்றுனென்பது கதை. இரவு சுவாமிக் குத் தங்கச் சப்பரம். அம்மனுக்கு யானைவாகனம்.

ஐந்தாம் நாள், சுவாமியும் அம்மனும் கருப்பண்ண பிள்ளை மண்டபத்திற் தங்குவர். அன்று காலை உலவாக் கோட்டை யருளிய திருவிளையாடல் நடந்தேறும்!

முன்னொருக்கால் மதுரையம்பதியில் அடியார்க்கு நல லான் என்ற ஓர் சிவ பக்தன் இருந்தான். அவன் சிவனடி யார்க்கு அமுது படைத்தே ஏழையாகி விட்டான். பிறகு கடன் வாங்கிப் போஜனம் படைக்க ஆரம்பித்தான். கடவு ளின் சோதனைதான் தெரியுமே! கடனும் கொடுக்கப்படா மல் செய்தார். ஆகையால் வேறு வழியற்ற அச்சிவபக்தன், தன் மனைவியுடன் கோவிலுக்குச் சென்று பிராணனைவிடத் தீர்மானித்தான். உடனே சிவபிரான் அவன்முன் தோன்றி எடுக்க எடுக்கக் குறைவுபடாத நல்ல சம்பா நெல்லுக் கோட் டை ஒன்றை அவனுக்குக் கொடுத்தருளினர். அவனும் அன்று முதல், சிவனடியார்க்கு அமுதுண்பித்துக் கொண்டிருந்தான். இரவு சுவாமிக்கு நந்திகேஸ்வர வாகனம், அம்மனுக்கு யாளி வாகனம்.

ஆரும்நாட் காலை 'பாணனுக்கு அங்கம் வெட்டிய லீலை' புதுமண்டபத்தில் நடைபெறும். குலோத்துங்க பாண்டியன்

காலத்தில் முதியோனென்பான், மதுரையில் சிஷ்யர் பலருக்கு வாள்வித்தை பயிலுவித்து வந்தான். அவன் சீடர்களி லொருவனான சித்தன் என்பான் அந்த வித்தையிலே தன்னை நன்கு மதித்து, மிகவும் கருவம் கொண்டு தன் ஆசிரியனுக்கு எதிராக தனிப்பள்ளியை யாரம்பித்தான். இது போதா தென்று குருபத்தினியையும் புணர இச்சை கொண்டு கைப் பிடித்திழுத்தான். அப்பதிவிரதை சோமசுந்தரக் கடவுளைத் தியானித்தாள். கடவுளும் அவளது கணவன்போல் வேடம் புனைந்து, சித்தனைப் போருக்கிழுத்து அவனது அங்கங்களை வெட்டி வீழ்த்தினார். இரவு ரிஷபவாகனத்தில், சுவாமி யும், அம்மனும் அலங்கரிக்கப்படுவர். சமணரைக் கழுவி லேற்றிய லீலையும் நடைபெறும்.

ஏழாம் நாட்காலை, நன்மைதருவார் கோயில் மண்டபத் தில் வளையல் விற்ற லீலை நடைபெறும்.

ஒரு சமயம், சிவபிரான் தேவதாரு வனத்திலுள்ள, ரிஷி பத்னிகளின் கற்பைப் பரிசோதிக்கும்பொருட்டு,பிக்ஷாட னர் உருவம்கொண்டு சென்றார். ரிஷி பத்னிகளும் அவரழகி லீடுபட்டு உடைநழுவ நின்றனர். இது கண்ட ரிஷிகள் மனங்கலங்கி, அவர்கள் மதுரையில் வைசியப் பெண்களாகப் பிறக்கும்படி சபித்தனர். "எப்பொழுது எங்களுக்கு விமோ சனம்" என்று பத்தினிமார் வினவ, "சிவபிரான் உங்களைத் தீண்டுங்காலை உங்கள் சாபம் விலகும்" என அவ்விரிடிகள் வாக்குக் கொடுத்தார்கள். அவ்வாறே யவர்களும் வைசியப் பெண்களாக உதித்தனர். சிவனும், வளையல் விற்போன்போல் வேடம் புனைந்து அவர்கள் கரததில் வளையலைப் போட்டார். அவர்களும் சாபவிமோசனம் பெற்றனரென்பதே இந்த லீலையின் கருத்து.

இரவு சுவாமிக்கும், அம்மனுக்கும் தங்கப் பல்லக்கு. கோவிலுக்குள் வந்ததும் சுவாமிக்குப் பட்டாபிஷேகம் நடைபெறும்.

எட்டாந் திருநாளன்று காலை செல்லப்பெருமாள் பிள்ளை மண்டபத்தில் தங்குவர். பிறகு இரவு, ஆடி வீதியிலிருக்கும் ஆயிரக்கால் மண்டபத்திற் கருகிலிருக்கும் 16 கால் மண்டபத்தில் குதிரை கயிறு மாறும் லீலை நடைபெறும். சுவாமியும் அம்மனும் குதிரை வாகனத்தில்அலங்கரிக்கபபடுவர். அன்று தான் திருப்பரங்குன்றம் முருகபிரானும், திருவாதவூர் மாணிக்கவாசகரும் மதுரை உற்சவத்தில் கலந்துகொள்வார்கள். இவர்களுக்கும் குதிரை வாகனம். இன்றைய உற்சவமும் மறுநாள் உற்சவமும் மாணிக்க வாசகரைப் பற்றியதே. குதிரை கயிறு மாறும் லீலை பின்வருமாறு :

திருவாதவூரில், அந்தணர் குலத்தில் மாணிக்கவாசகர் அவதரித்தரர். அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால் அவர் பெருமையைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தனது அமைச்சராக அமர்த்திக்கொண்டான். அவரும் தன் தொழிலைத் திறமபட நடத்திவந்தார். ஓர் சமயம் பாண்டியனுக்குச் சில குதிரைகள் வாங்கவேண்டி வந்தது. அரசனும் திரண்ட திரவியத்துடன் மாணிக்கவாசகரை அனுப்பினன். ஆயின் மாணிக்கவாசகர் சிவபிரான் பக்தி மேலீட்டினல், மிகுந்த ஞானமடைந்து, கையிலிருந்த திரவியத்தை யெல்லாம் ஏழை எளியோருக்குத் தானம் செய்துவிட்டார். குறித்த நாளன்று குதிரைகள் வந்து சேராததைக் கண்ணுற்ற வேந்தன் மிகச் சினந்தான். இவன் சினம்பொறுத வாதவூரரும, சிவனைத் துதித்தா. அவரும் மனமிறங்கி, " நீ மதுரை செல், நான் குதிரைகளுடன் வருகிறேன் " என வாக்களித்தார். வாதவூரடிகளும் மதுரை

வந்து சேர்ந்தார். மூன்று நாட்களாகியும குதிரைகள் வரா ததைக் கண்ட பாண்டியன மாணிக்க வாசகரைப் பலவித இம்சைகளுக் காளாக்கினுன். இமசை பொறுக்க முடியாது இறைவனை வேண்டினுர் மாணிக்க வாசகர். மறுகணமே குதிரைகள் தோன்றின. சிவபிரான்தான் குதிரைகளைக் கொணர்ந்து பாண்டியனிடம் ஒப்புவித்தார். அவருக்குக் குதிரைக ளெங்கிருந்து கிடைததன? காட்டிலுள்ள நரிகளையெல்லாம் தன் மாயா சக்தியினுல் குதிரைகளாக்கி விட்டார்! கயிறு மாற்றிக் குதிரைகளை விட்டுச் சென்றுவிட்டார்; அவ்வளவுதான், ஈசன் அப்பக்கம் செல்லவும் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி ஊளையிட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தன. இவை யிரண்டையுந்தான் நரியைப் பரியாக்கிய திருவிளையாடல், பரியை நரியாக்கிய திருவிளையாடல் என்று சொல்கிறேம். பின் கேட்பானேன். மீண்டும் வாதவூரரைச் சிறையிலிட்டுப் பாண்டியன் பலவித சித்திரவதைகள் செய்ய வாரம்பித்தான். அப்பொழுதுதான் மாணிக்க வாசகர் "குழைத்த பத்து" என்னும பாடல்கள் மூலம் எம்பிரானைப் பிரார்த்தித்தார்.

பகவான் பக்திக்கும், பண்ணுக்கும் கட்டுப்பட்டவரன்றே! தன் பக்தர்களை யாட்கொள்ளும் பொருட்டு அவர் எடுத்துக் கொள்ளும பிரயாசைகளுக்கும் ஓர் எல்லையுமுண்டோ! பிரான் பாண்டியனுக்கு அறிவூட்ட எண்ணங் கொண்டார்.

வைகை நதி சமுத்திரம்போல் பொங்கி யெழுந்தது. ஊரே முழுகிவிடும்போ லிருந்தது. பாண்டியன் ஊரிலுள்ளோர் எலலோரும் அணை போட உதவி செய்ய உத்திரவிட்டான். ஒவ்வொருவரும் கட்டாயப்படி தத்தம் பங்கு காரியங்களைச் செய்தாக வேண்டுமென்பதே அரசன் கட்

டளை. வந்தி யென்ற சிவ பக்தி மிகுந்த கிழவி, தன் பங்கு காரியத்தைச் செய்ய இயலாது வருந்தினாள். இது கண்டு சிவ பிரான, அவள் கொடுக்கும் பிட்டைக கூலியாக ஏற்றுக் கொண்டு, அவள் பங்கு வேலையைத்தான் செய்வதாக ஒப்புக் கொண்டார். இதைததான் நாம் "பிட்டுக்கு மண சுமந்த லீலே" என்று சொல்கிரும். இதுதான ஒனபதாம் நாள் உற்சவமாகும். மதுரைக்கு வடமேற்கே யிருக்கும (வைகை யின் தென் கரையில்) பிட்டுத்தோப்பு மண்டபததில இந்தத் திருவிளையாடல் நடந்தேறும். சுவாமி வெள்ளிச் சிம்மாதனத் தில் வீற்றிருப்பார்.

ஆயின் பிட்டைத்தின்ற பெருமான், வேலே செய்யாது சோம்பேறித்தனமாகக் காலங் கழிததார். அரசன் வேலையை மேற் பார்க்கும் பொருட்டு வந்தபொழுது, இந்தச் சோம்பேறி படுத்துறங்குவதைக் கண்ணுற்ருன். அரசன் கோபமுண்டான். தன் கையிலிருந்த பிரம்பால் கூலியாளை யடித்தான். ஆனல், அடி வாங்கியது சர்வ வியாபியான, எல் லாம் வல்ல இறைவனல்லவா? அங்கிருந்த எலலோர் மேரி லும் அரசனுள்பட, அந்த அடி விழுந்தது. அப்பொழுதுதான் பாண்டியன் பகவானின் லீலா விநோததததை யுணர்ந்தான். உடனே மாணிக்கவாசகரைச் சிறையினின்றும் விடுவிததுப் பணி செய்தான். அன்று இரவும், சுவாமிகரும் அம்மனுக்கும் ரிஷபவாகனம். மாணிக்க வாசகருக்கும், சுப்பிரமணிய சுவா மிக்கும் குதிரை வாகனம்.

மற்றெல்லா நாட்களைக் காட்டிலும், இந்தப் பிட்டுத் திருநாள் தான் மிகச் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

பத்தாம் நாள், இறைவன் விறகு விற்ற லீலே நடை பெறும். இன்று வாகனம் கிடையாது. எல்லாச் சுவாமி களுக்கும் சப்பரந்தான்.

'விறகு விற்ற லீலை' பின்வருமாறு :

வரகுண பாண்டியன் மதுரையைச் சீரும், சிறப்புடனே ஆண்டு வந்தக்கால், மதுரைக்கு ஏமநாதனென்ற ஓர் வடக்கத்தி யாழ்ப்பாணன் வந்து சேர்ந்தான். அரண்மனையி லிருக்கும் யாழ்ப்பாணனையும் வாதுக்கிழுத்தான். இது கண்ட அரண்மனை வித்துவான் பாணபத்திரன் மிகக் கலக்கமுற்றான். அவன் பெரிய சிவபக்தன். ஆகையால் அவன் வருத்த முற்றதை யறிந்த கடவுள், ஓர் கிழவன் வேடம் பூண்டு, விறகைத் தலையில் சுமந்துகொண்டும், ஓர் கையில் பழைய யாழையும ஏந்திச்சென்று, ஏமநாதன் தங்கியிருந்த வீட்டை யடைந்தார். இவரைக் கண்ணுற்ற ஏமநாதன் "நீர் யாரென" வினவினன். அதற்கவர், "நான் பாணபத்திரனின் பழைய சிஷ்யர்களுள் ஒருவன். யான் கிழவனாகிவிட்ட படியால் என்னையவர் விலக்கிவிட்டார். ஆதலால் நான் விறகு விற்று ஜீவனம செய்கிறேன்" எனப் பகர்ந்தார். பிறகு ஏமநாதன் வேண்டுகோட் கிணங்கி தன் யாழில் மிக உருக்கமாக வாசித்துக் காண்பித்தார். இது கேட்டு மயங்கிய ஏமநாதன், "ஏது ! பாணபத்திரனால் கைவிடப்பட்ட கிழட்டுப் பாணனே யிப்படிப் பாடினால் பாணபத்திரன் எப்படிப் பாடுவானோ" எனச் சங்கையினால் அஞ்சி ஊரை விட்டோடினன்.

பதினோராம்நாட் காலை சட்டத் தேர். இரவு சப்தாபரணம். பனிரெண்டாம்நாள் தீர்த்தவாரி. அன்றைய இரவும் ரிஷபவாகனம். இதே இரவில்தான் திருப்பறங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானும், திருவாதவூர் மாணிக்கவாசகரும் விடைபெற்றுச் செல்வர்.

இப்பன்னிரண்டு நாட்கள் தவிர, இதற்கு முன் நான்கு நாட்கள் "சந்திர சேகரர் உற்சவம்" நடைபெறும்.

நவராத்திரி உற்சவம்: இந்த உற்சவம், புரட்டாசி மாதம் கொண்டாடப்படும். இவ்வுற்சவம் முற்றிலும் தேவி மீனாக்ஷியைப் பற்றியதே. ஆகையால் அம்மன் மாத்திரந் தான் அலங்கரிக்கப்படும். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வித அலங்காரம் ஜோடிக்கப்படும். இவ்வலங்காராதிகள் அம்மன் வெளிப் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள ஓர் கருங்கல் மண்டபத்தில் நடைபெறும். இங்கு தான் அம்மன் ஒவ்வொரு நாளும் கொலுவீற்றிருப்பாள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆகமம் நடைபெறும்.

இவ்வுற்சவத்தின்போது கோவில் மிகக் களையுடனும், தேஜசுடனும் விளங்கும். தேவியின் சக்தி கரைபுரண்டோடுவதுபோற் தோன்றும். தேவியின் அருளுக்காக, பலவித வியாதிகளாற் பீடிக்கப்பட்ட ஜனங்கள், கோவிலிற்கு வந்து இராப்பகலாக வரங் கிடப்பார்கள். இவர்களில் நம் கவனத்தைக் கவருபவர் 'பேய் பிடித்த' பெண்டிரேயாவர். பேயோட்டுகிறேன் என்று சில துஷ்டப் பேர்வழிகள் ஒன்றுமறியாப் பேதைப் பெண்டிரைத் துன்புறுத்துகின்றனர். இக்கொடிய வழக்கம் கைவிடப்பட வேண்டியதே.

இவ்வுற்சவத்தில் கடைசி நாள் அம்மன் 'சிவபூஜை' செய்வதாய் ஐதீகம். அதற்கு முந்திய நாள் 'மகிஷாஸுர மர்த்தனம்'. இவை யிரண்டுந்தான் முக்கியம். ஒருநாள் ஊஞ்சல், ஓர் நாள் ராஜாங்கம், இவ்வாறு பலவிதமாக அம்மன் அலங்கரிக்கப்படும்.

மகிஷாஸுரன் தானடைந்த வரபலத்தினால் தேவர்களைத் துன்புறுத்தினன். தேவர்கள் சக்தியிடம் முறையிட்டார்கள். கொடிய மகிஷாஸுரனைக் கொல்லும்பொருட்டே தேவி மீனாக்ஷி எட்டு நாட்களுக்குக் கடுந்தவம் புரிகிறாள். ஒன்பதாம் நாள் மகிஷாஸுரனுக்கும், பராசக்திக்கும் கோர

மான யுத்தம நடைபெறுகிறது. சக்தியே வெற்றிபெறுகிறாள். மகிஷாஸுரனைக் கொன்ற பாவம் நீங்கும்பொருட்டே தேவி பததாம்நாள் சிவபூஜை செய்கிறாள். இதுதான் இந்த நவராததிரி உற்சவத்தின் முக்கியமான தாத்பர்யம்.

கோலாட்ட உற்சவம்: இவ்வுற்சவம், ஐப்பசி மாதத்தில் நடைபெறும். இத்திருவிழாவில் அம்மன் மட்டுந்தான் கலந்துகொள்ளும். அம்மன ஒவ்வொரு நாளும் பலவித ஆபரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டுக் கோவிலுக்குள்ளேயே இருக்கும் "ஆடி வீதி"யில் வலம் வரும். அம்மன் கையில் இரு கோலாட்டக்கழிகள் கொடுக்கப்பட்டிருக்கும். அம்மனுக்கு முன்பாக தேவதாசியர் கோலாட்டம் போட்டுக்கொண்டே செல்வது வழக்கம். கடைசிதினம், அம்மன் வெள்ளி ரததநில் அலங்கரிக்கப்பட்டு, நான்கு ஆவணிமூல வீதிகளிலும் பவனி வருவாள்.

காாத்திகை உற்சவம்: கார்த்திகை மாதம் நடைபெறும் இவ்வுற்சவம் வெகு முக்யமானது. இதில் சுவாமி, அம்மன் இருவரும் கலந்துகொள்வர். நன்கு அலங்கரிக்கப்பட்டு பகலிலும, இரவிலும், நான்கு சித்திரை வீதிகளிலும் வலம் வருவர். பெரிய கார்த்திகை யன்று கோவிலில் ஆயிரக் கணக்கான விளக்குகள் ஏற்றப்பட்டு மிகுந்த பிரகாசத்துடன் விளங்கும். பெரிய கார்த்திகை யன்று சுவாமிக்கும், அம்மனுக்கும் ரிஷப வாகனம். கழுவேற்றும் ஆகமம் நடைபெறும். சுவாமி சொக்கப்பனை கொளுத்துவார்.

எண்ணெய்க் காப்பு உற்சவம்: இவ்வுற்சவம் மார்கழி மாதம் நடந்தேறும். அம்மன் மட்டுந்தான் இத்திருவிழாவில் பங்கெடுத்துக்கொள்ளும். புதுமண்டபத்தின் மத்தியில் அம்மனுக்குத் தைலந் தேய்த்து, வெற்றிலை கொடுத்து கண்ணாடி

காட்டி, பலவித சைதயோபசாரங்கள் செய்வார்கள். பிறகு சித்திரை வீதியில் அம்மன் பவனிவருவாள்.

தெப்ப உற்சவம் : தை மாதம நடக்கும் உற்சவததிற்குத் தெப்ப உற்சவம் என்று கூறப்படும். இவ்வுற்சவததில் சுவாமியும், அம்மனும் கலந்துகொள்ளுவர். வாகனங்களும் உண்டு. பல மண்டகப்படிகளும் உண்டு. இத்திருவிழாவில் இரண்டுமுறை ரிஷபவாகனம் உண்டு. ஆறுந்திருநாளன்றும் தெப்பத்திற்கு முட்டுத்தள்ளும் நாளன்றும் ரிஷப வாகனம். இத்திருநாட்களில் சுவாமியும், அம்மனும் காலையிலும், மாலையிலும் சித்திரை வீதியை பவனிவருவர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மண்டகப்படியில் சுவாமி தங்கும்.

முதல் நாட் காலை சுவாமிக்கும், அம்மனுக்கும் வெள்ளி சிம்மாசனம். கோவிலுக்குள்ளேயே குயவர் மண்டபத்தில் தங்குவர். இரவு சுவாமிக்குக் கற்பக விருக்ஷம், அம்மனுக்கு அன்னவாகனம் இரண்டாநாள் காலை குஞ்சான் செட்டி மண்டபத்தில் தங்குவர். இரவு சுவாமியும், அம்மனும் முறையே பூதவாகனத்திலும், காமதேனு வாகனத்திலும் அலங்கரிக்கப்படுவர். மூன்றும் நாள் மண்டகப்படி தென் திருவாலய சுவாமி கோவில் சுப்பராய அய்யர் மண்டபத்தில் நடைபெறும். இரவு சுவாமிக்குக் கைலாசவாகனம், அம்மனுக்குக் காமதேனு வாகனம். மறுநாள் காலை ஆட்டு மந்தை பதினெட்டாம் கோட்டை பரதேசி மண்டபததில் மண்டபப்படியாகும். இரவு இருவருக்கும் வெள்ளி சிம்மாசனம். ஐந்தாம் திருநாளன்று தெற்கு வாசல் சுப்பராய ஆசாரி மண்டபத்தில் சுவாமியும், அம்மனும் தஙகும். அன்றிரவு தங்கக் குதிரை வாகனம். ஆறுந் திருநாளன்று கோவில் கல்யாண மண்டபத்திலேயே தங்கும். அன்றிரவு சுவாமிக்கு நந்திகேஸ்வர வாகனம், அம்மனுக்கு யாளி வாகனம். எட்டாங்

திருநாட்காலை தங்கப்பல்லக்கு வலம் வந்த பிறகு சித்திரை வீதி அன்னக்குழி மணடபத்தில் தங்கும். இரவில் சுவாமிக் குத் தஙகக் குதிரை வாகனம், அம்மனுக்குத் தங்கப்பல்லக்கு. ஒன்பதாந் திருநாளன்று காலையில் எடுப்புத்தேரில் சுவாமியும் அம்மனும் வலம் வருவர். இரவு சப்தாபரணம் நடைபெறும்.

பத்தாம் திருநாளன்று சுவாமி காலையில கோவிலை விட்டுப்புறப்பட்டுத் தங்கப் பல்லக்கில் மதுரைக்குக் கிழக் கிருககும வண்டியூர்த தெப்பக் குளததை நோக்கிச் செல்லும். இந்தத் தெப்பக்குளம் தென்னிந்தியாவி லுள்ள பெரிய தெப்பக்குளங்களிலி லொன்றாகும். இதன் விஸ்தீரணம் ஒரு சதுர மைலாகும். நடுவிலிருக்கும் மைய மண்டபம் ஓர் தனித் தீவுபோன்று அழகுடன் துலங் குமட கரையிலிருந்து, மண்டபததை நோக்கிச் சிறு படகுகள் விடப்படும்; இம்மண்டபத்தில் பலவித பழ மரங்கள் வைக் கப்பட்டிருக்கின்றன. இத்தெப்பக்குளம், மதுரையை யாணட திருமலைநாயக்கன் என்னும் மனனனால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தன் அரண்மனையைக் கட்டும் உத் தேசத்துடன் ஓரிடத்தில் மண்வெட்ட உத்திரவிட்டான். மண்வெட்டி யெடுக்கப்பட்டது. அவ்விடம் ஓர் பள்ளமாகி விட்டது. பிறகு அதே குளமாகக் கட்டப்பட்டு விட்டது என்று சொல்லப்படுகிறது. இக்குளததை வண்டியூாத் தெப்ப குள மெனறும், மாரியம்மன்தெப்பக்குள மென்றும் கூறுவ துணடு. இக்குளத்திலிருந்துதான், மீனாக்ஷியம்மன் கோவில் தெற்குச் சன்னதியிலிருக்கும் பிரும்மாண்டமான முக்குறுணி யரிசிப் பிள்ளையார் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்குளம் கோவிலிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தி லிருக்கின்றது. இதிலதான் மீனாக்ஷியம்மன் தெப்ப உற்சவம் இனிது நடந்தேறும்.

அன்று காலை முக்தீஸ்வரன் கோவிலில் தங்கும். அன்று இரவும ரிஷபவாகனம்.மாலை சுமார் ஆறரை மணிக்குச் சுவாமி முட்டுத்தள்ளும். மறுநாட்காலை தங்கப் பல்லக்கில் ஆரோகணிக்கப்பட்டு அனுப்பானடி கதிரறுப்பு மண்டபத்தை நோக்கிச் செல்லும். இரவு தங்கப்பல்லக்கு. கதிரறுப்பு லீலை நடைபெறும்.

பனிரெண்டாம் நாள்தான் தெப்ப உற்சவதினம். இவ்வுற்சவம் திருமலை நாயக்கர் பிறந்ததினமாகிய தைப்பூசத்தன்று கொண்டாடப்படும். காலையிலேயே சுவாமியும் அம்மனும் நடு மண்டபத்தை யடைந்து விடுவர். மண்டபத்தினுள் பததியுலாத்திய பிறகு தெப்பத்தில் ஆரோகணிக்கப் படுவர். இத்தெப்பமானது மூங்கிற்கழி, தப்பைகள் முதலியவைகளினுதவியால் செவ்வனே கட்டபபட்டு,வருணக் காகிதங்கள், ஜிகினுத் தகடுகள் ஒட்டப்பட்டு நன்கு அலங்கரிப்புடன் விளங்கும். பலவித விளக்குகள் தொங்கும். இத்தெப்பம் பெரிய பீப்பாய்களின் உதவியால் மிதக்கும். இததெப்பத்தினுள் சுவாமியும், அம்மனும் எழுந்தருளியதும், அத்தெப்பமானது, மண்டபத்தைச் சுற்றி, மூன்று முறை பிரதக்ஷிணமாக, வடங்கொண்டு இழுத்துச் செல்லப்படும். வடத்தை இழுததுச் செல்லும் பொருட்டே குளத்தின் உட்கரையில் நாலடி அகலததிற்கு கல் பாவப்பட்ட பாதையொன்று செல்கிறது. மேலும் குளக்கரையும், நடு மண்டபமும் அகல் விளக்கினுல அலங்கரிக்கப்படும்.

சுவாமி கரையேறியதும் கண்கொள்ளா வாணக் காக்ஷி நடைபெறும். இக்காட்சியையும், வைபவத்தையும் கண்ணுற ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுவர். பிறகு சுவாமிக்குக் குதிரை வாகனம். யானைமலை சம்ஹார லீலை நடக்கிறும். அந்த லீலை பின்வருமாறு :

விக்கிரம பாண்டியன், சைவ சமயத்தைப் பாண்டிய நாட்டில் நிலைநிறுத்திச் சீருடனும், செழிப்புடனும், செங்கோலோச்சி வந்தான். இவனது எதிரியாகிய, சோம ராஜன் எனும் சோழன், பாண்டியனைப் போரில் வெல்ல இயலாததால், சமணரை யழைத்து ஆபிசார ஓமம் செய்யச் சொன்னான். ஓமகுண்டத்தினின்று மலைபோன்ற பெரிய யானை ஒன்று கிளம்பியது. அந்த யானையும் பாண்டியனைக் கொல்லும் பொருட்டு ஏவப்பட்டது. பாண்டியன் பெரிதும் பயங்கொண்டான். இறைவனைத் துதித்தான். கருணாநிதியான சிவபிரானும் வேடனுருவந் தாங்கி அக்கொடிய யானையைக் கொன்றொழித்தார். அந்த யானையும் இறந்ததும் ஓர் பெரிய கல்லாகச் சமைந்து விட்டது. அதன் சின்னமாகத் தான் போலும், மதுரைக்கு வடகிழக்கே நான்கு மைல் தூரதில் யானைமலை யென்ற ஓர் குன்றம் காணப்படுகிறது.

இதெப்ப உத்சவத்துடன் இந்தத் தை மாத விழா முடிவடையும்.

மண்டல உற்சவம்: தை மாதம் பௌர்ணமி தினத்தன்று ஆரம்பித்து, மாசி மாதம் அமாவாசையன்று இவ்வுற்சவம் முடிவடையும். மொத்தம் நாற்பதைந்து நாட்களுக்கு இவ்வுற்சவம நடந்தேருவதால் இதை மண்டல உற்சவம் எனக் கூறுகிறோம். நடுவில் பத்து நாட்களுககு மாத்திரம் சுவாமியும், அம்மனும் சித்திரை வீதியில் பவனி வருவர். பலவிதமான வாகனங்களுமுண்டு. ஆறுந்திருநாளன்றும், கடைசி நாளன்றும் ரிஷப வாகனம். ஏனைய நாட்களில் கோயிலுள், சுவாமி சன்னதியின் இரண்டாம் பிரகாரத்தில் பவனி வருவர்.

பங்குனி உற்சவம்: வருடத்தின் கடைசி மாதமாகிய பஙகுனியில இவ்வுற்சவம் பத்து நாட்களுக்கு இனிது நடந்

தேறும். சுவாமியும், அம்மனும் ஒவ்வொரு நாளும் கோயிலை விட்டுப் புறப்பட்டு தெற்குச் சித்திரை வீதியிலுள்ள வெளளியம்பல மண்டபத்திற் சிறிதுநேரம் தங்கும். பிறகு சித்திரை வீதி சுற்றிக் கோயில வந்தடையும். கடைசி நாள் மாத்திரம் ரிஷபவாகன முணடு. மற்ற நாட்களில் வாகனம் கிடையாது.

இம்மதுரை யம்பதியானது, பரமன் தன் அறுபத்தி நான்கு லீலைகளை செய்து காட்டிய புண்ணிய ஸ்தலமென்பது நாம் கவனததில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் இப்பதியின் கண் நடைபெறும் உற்சவஙகளில் பகவானின் அறுபததி நான்கு லீலைகளும் கொண்டாடப்படுகின்றன.

இம்மாதிரி திருவிழாக்கள் கொண்டாடுவதில் அரிய பெரிய தத்துவங்களும், உண்மைகளும் பொதிந்துகிடக்கின றன. இவ்விழாச் சமயங்களில் ஈசுவரன் புருஷத்துவ ரூபமே யாகி, தன் தேவி பராசக்திபுடன தெருக்களில் பவனி வருகிறார். அப்படி வருவானேன்? "எல்லாம வல்ல இறை வன் ஒருவனுண்டு. அவனுக்கும நமக்கும் நெருஙகிய சம் பந்தம் உண்டு" என நமக்கு எடுத்துக் காட்டத்தான். தவிரவும் இச்சமயஙகளில இறைவன் எழுந்தருளாத இடமும் கிடையாது. இதிலிருந்து நாம அறியக் கிடக்கும் உண்மை யொன்றிருக்கிறது. அதாவது, மனிதன தான் பலவகைப் பட்ட காரியங்களைக் கவனிததுக்கொணடிருப்பதால, கடவுளை வழிபட மறந்துவிடுகிறான். அவ்வாறு முற்றிலும் கடவுளை மறந்துவிடாவணணமும், அப்படியவன் மறந்துவிட்டபோதி லும் அவனைத தன் வசப்படுத்தும் பொருட்டும் தானே நேரில் காக்ஷியளிக்கிறார். என்னே ஈசனின் கருணை! (ஆயின, கடவுள் சுமக்கப்பட்டல்லவோ வருகிறார், அவராக எங்கே வந்து விடுகிறார் என ஆக்ஷேபிக்கலாம்.) உற்சவ

காலங்களில் சங்கீதம், விருதாதிகள் முதலிய தடபுடல்களெல்லாம் எதற்கு என்று கேட்கலாம். சங்கீதத்தைக் கேட்க வரும் சிலரும், கண் காக்ஷிக்காக வருவோரும் ஈசன் மூர்த்தியை எதிரில் பார்ததும் கைதொழுவார்களென்பதே! இதற்காகததான் இரவில் வாணக் காக்ஷிகளுங்கூடக் காட்டப் படுகின்றன. மனிதன் ஒரேமாதிரியான கொண்டாட்டத்தில் அவ்வளவு சிரத்தை காட்டமாட்டான். பலவிதமான மாறு பாடுகளிருந்தால் தான் அவன மனது சந்தோஷமடையும். (Variety is the spice of life) இதனுல்தான் பலவித மான வாகனுதிகளில் சுவாமி எழுந்தருளுகிருர் போலும்!

உற்சவாதி வைபவங்களைப் பற்றி ஓர் ஆசிரியர் பின் வருமாறு சொல்கிருர்.

"பெருங் கோயில்களிருக்கும் ஊர்களில சிறந்த திரு விழாக்காலங்களிலே அங்கு சுவாமி தரிசனத்திற்காக வந்து கூடியிருக்கும் ஜனக்கூட்டததைக் கவனித்துப் பார்த்தால் இந்துக்களின் குணங்கள் இன்னவை, இன்னவை யென்பது அறியலாகும். முக்யமாக அவ்விடங்களில் அவர்களது தெய்வ பக்தியும்,பரோபகாரச் சிந்தையும் எளிதில் காணப்படும். ஜனங் கள் வெயிலில் களைத்து வருந்தாவண்ணம், ஆங்காங்கு பந்தல் முதலிய போடப்பட்டிருக்கும். பலவிடங்களில் வருபவர்கட் கெல்லாம் சாப்பாடு போடுவார்கள. எங்கே பார்த்தாலும் தண்ணீர்ப்பந்தல் ஏற்பட்டிருக்கும்.

"இப்படிப்பட்ட திருவிழாக்காலத்தில், சிலர் கூட்டங் கூட்டமாய், தேவார திருவாசகங்களை உரத்த குரலுடன் ஓதிச் செல்வார்கள். சிலர் அங்கு வந்துள்ள ஞானியரில் எவரேனும் வேதாந்த விஷயமாகவோ, சித்தாந்த விஷய மாகவோ பிரசங்கம் செய்வதைக் கேட்டு மகிழ்வார்கள். மற்றும் சிலர், அங்குள்ள பொம்மைக்கடை முதலிய வற்றைச்

சுற்றிப் பார்ப்பார்கள். வேறு சிலர், அங்கு அப்போது நடை பெற்று வரும் ஜாலவித்தை முதலிய விநோத விளையாட்டு களைக் கண்டு களிப்பார்கள். இப்படிப் பல திறப்பட்ட ஜனங்கள் பற்பல விதமாய்ப் பொழுதுபோக்குவதைப் பார்த் தாலே, அதனால் ஒருவனுக்கு மிகச் சிறந்த லௌகீக அறி வுண்டாகு மென்பதில் ஐயமில்லை.''

திருநாள் என்பதற்குப் பொருள் சிறந்த நாள், அல்லது நல்ல நாள் என்பதே யாகும். அந்நாட்கள் எவ்விதத்தில் சிறந்தவை? சதா சர்வதா கவலைகொண்ட மனிதனுக்கு ஒரு சிறிது நேரம் மன நிம்மதியையும், சந்தோஷத்தையும் அளிக் கின்ற நாட்களல்லவா அந்நாட்கள்! மேலும், பணக்கார னும் ஏழையும், பண்டிதனும் பாமரனும், உயர்ந்தவனும், தாழ்ந்தவனும் ஒருங்கே நின்று இறைவனை வழிபடும் நாட் களல்லவோ அந் நன்னாட்கள்!

இத்திருவிழாக் காலங்களிலோ, நமது கண்களுக்குக் காக்ஷி, காதுகட்கு இன்பம், மனதிற்கு நிம்மதி, ஈசுவர பக்தி இவ்வளவும் கிட்டுகின்றன. நாம் எல்லோரும் "ஈசுவரன் ஒருவனுண்டு", என எண்ணுகிறோம்.

ஏன் சுருங்கச் சொல்லின், இந்நாட்களில் ஒரு நாஸ்தி கன்கூட ஆஸ்திகனாகி விடுவான்!

மேலும் இவ்வுற்சவாதி வைபவங்களினால் நமக்கு ஓர் பேருதவியும் கிடைக்கிறது. நாம் எதற்காகப் பண்டிகைகள், விழாக்கள் கொண்டாடுகிறோம் என்பதற்கும் ஓர் கருத்தும் கிடைக்கிறது. அதையேதான் பிரசித்தி பெற்ற சரித்திர ஆராய்ச்சியாளரான காகா காலேல்கார் என்பாரும் சொல் கிறார்.

"பண்டிகைகள், விழாக்கள் மூலம், நாம் முக்யமான சரித்திர சம்பவங்களுக்கும், தேசியப் பிரச்னைகளுக்கும் ஓர்

அழியாத் தன்மையைக் கொடுத்திருக்கிறோம். இம்மாதிரியே ஒவ்வொரு சமூகக் கிளர்ச்சியின் வரலாற்றையும், மேலும் அக்கிளர்ச்சி நடந்தவிடத்தைப் புண்ணிய தீர்த்தமெனக் குறிப்பிட்டு சரித்திரத்தையும் அழியாது காப்பாற்றுகிறோம். ......................இப்பொழுதும்கூட ஜனங்களின் பழக்க வழக்கங்கள், கொள்கைகள், ஜாதிக் கட்டுப்பாடுகள், பண்டிகைகள், விழாக்கள் முதலியவைகளை ஆராய்ச்சி செய்யின் போதுமான சரித்திரப் பிரமாணங்கள் கிடைக்கும்."

THE MODEL PRESS, G.T., MADRAS.